# மல்லிகை

ஈழ இலக்கிய மாத இதழ்

ஆசிரியர்: டொமினிக் ஜீவா



-/60

மே 1974

RAMANI

# CHILDREN'S BOOKS

*by*

## K. JAYATILAKE

| | |
|---|---|
| SENA AND SITA | 1-75 |
| DINGIRI | 1-50 |
| IN SEARCH OF A STORY | 1-50 |
| THE LITTLE BOY WHO TAMED A MIGHTY RIVER | 1-50 |
| THE CLOCK AND ANOTHER STORY | 1-50 |
| DUNG DUNG DUDUNG DUNG | 1-75 |

## PRADEEPA PUBLISHERS

207, Hultsdorf Street,

COLOMBO-12

உத்தரவாதமுள்ள

உயர்ந்த பவுண், தங்க

நகைகளுக்கு

## எஸ். கே. எஸ். நகைமாளிகை

65, R. G. பில்டிங்,

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

'ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலைகண்டு துள்ளுவார்'

மல்லிகை

# ஒன்பதாவது ஆண்டு

மே 1974 73

தமிழ் — சிங்கள

## எழுத்தாளர் மாநாட்டை ஒட்டிய தேசிய ஒருமைப்பாட்டு இதழ்

அடுத்த இதழை, தேசிய ஒருமைப்பாட்டைப் பேணும் தமிழ் சிங்கள எழுத்தாளர் மாநாட்டை ஒட்டிய இதழாக வெளியிடலாம் எனத் தீர்மானித்துச் செயல்பட முடிவெடுத்துள்ளோம்.

இன வெறியைப் பிற்போக்குச் சக்திகள் தங்களது கவிழ்ப்பு வேலைகளுக்குப் பயன்படுத்த முயற்சிக்கும் இந்தக் காலகட்டத்தில் தேசிய ஒருமைப்பாடு வேறெந்தக் காலத்தையும் விட இன்று அத்தியாவசியம் என்பதைத் தேசத்தை நேசிக்கும் சகல தேசாபிமானிகளுக்கும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

கலை இலக்கியத் துறையைப் பொறுத்தவரை சிங்கள - தமிழ்க் கலைஞர்களை ஒன்றுபடுத்தி, அவர்களது பிரச்சினைகளை ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விளங்கப்படுத்தி, உருக்குப்போன்ற உறுதியுடன் இலங்கைக் கலைஞர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றினால் இன வெறியரையும் பிற்போக்குச் சக்திகளையும் முற்றாக இந்தத் தேசத்திலிருந்து துடைத்து ஒழிக்கலாம் என்பதை உணர்ந்தே இந்தத் தேசிய ஒருமைப்பாட்டு இதழை வெளியிட விரும்புகின்றோம்.

---

மணக்கும் 'மல்லிகை'
கதை, பெயர்,
கவிதை, கட்டுரை,
கருத்து
எல்லாம் ஆக்கியோர்
தனித்துவம்;
பாறுப்பும் அவரே.

மல்லிகை
ஆசிரியர் டொமினிக் ஜீவா
234- A கே.கே .எஸ் வீதி
யாழ்ப்பாணம்
(இலங்கை)

## தமிழ் சிங்கள எழுத்தாளர் மாநாடு



1974 ஜூன் 29, 30—ல் (சனி, ஞாயிறு)

## கொழும்பில் நடைபெறும்

- சிங்கள - தமிழ் எழுத்தாளர், பத்திரிகையாளர், இலக்கிய ஸ்தாபனங்களின் பேராதரவு இதற்கு உண்டு.
- பிரபல தமிழ் - சிங்கள எழுத்தாளர்கள் பங்குபற்றுவர்.
- ஜனாதிபதியும், ஒரு தொழிலாளி, ஒரு விவசாயி, ஒரு எழுத்தாளன், ஆகியோரும் திறந்து வைப்பார்கள்.
- தேசிய ஒருமைப்பாட்டுக்கான தேவையை வலியுறுத்துவதுடன் வழிகாட்டும் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.
- தமிழ் - சிங்கள இலக்கியங்களை பரஸ்பரம் அறிமுகப்படுத்தும் அறிக்கைகள் இடம்பெறும்.
- தமிழ் - சிங்கள கவிஞர்கள் பங்குபற்றும் கவியரங்கு நடைபெறும்.
- தமிழ் - சிங்கள கலைஞர்கள் கூட்டாக கலந்துகொள்ளும் (நாட்டிய நாடகம்) கலாநிசழ்ச்சிகளில் ஒன்று.
- பொதுக் கூட்டம்.
- ஒருமைப்பாட்டு வேண்டுகோள். (எழுத்தாளர்களுக்கும் மக்களுக்கும்).
- தேசிய ஒருமைப்பாட்டுத் திட்டம்.
- தமிழ் - சிங்கள இலக்கிய உறவுத் திட்டம்.

# பிற்போக்காளரின் கூட்டுச் சதியை

## தூள்தூளாக்குவோம் — இது உறுதி!

நமது தாய்த் திரு நாடு ஓர் அபாய கட்டத்திற்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையில் இன்று உள்ளது.

நாட்டைத் துண்டாடி தேசத்தைக் குட்டிச் சுவராக்கி தங்களது சுகபோகங்களைத் தொடர்ந்தும் அனுபவிக்க முனையும் இனவாத சக்திகள் ஒரு புறமும் அந்நிய சக்திகளின் தொங்கு சதைகளாக இந்த நாட்டில் வாழ்ந்து ஏகாதிபத்திய சக்திகளுக்குத் தாளம் போடும் பிற்போக்காளர் மறுபுறமும் எத்தகைய சதிகளைச் செய்தேனும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட இந்த அரசாங்கத்தை வீழ்த்தி, தமது வர்க்க நன்மைகளையும் தமது சொந்தச் சொத்துப் பத்துக்களையும் பூரணமாகப் பாதுகாக்க முனைந்து செயல்பட்டு வருவதை அரசியல் தெளிவும் தீர்க்க தரிசனமும் தேசாபிமனமுமுள்ள மக்கள் வெகு விழிப்புடன் அவதானித்துக் கொண்டு வருகின்றனர்.

பிரதான அபாய சக்தியாக யு. என். பி. உள்ளது.

முற்போக்கு, ஜனநாயக சக்திகள் மிக விழிப்புடன் இருந்து, இந்த நாசகார சக்திகளின் சதிகளையும் பயமுறுத்தல்களையும் கவிழ்ப்பு வேலைகளையும் துரிதமாக முறியடிக்க வேண்டும் என மனப்பூர்வமாக விரும்புகின்றோம் நாம்.

முற்போக்கு சக்திகளுக்குள் பல அபிப்பிராய முரண்பாடுகள், கருத்து வித்தியாசங்கள் இருக்கலாம். அதை இந்தக் கால கட்டத்தில் மிகைப்படுத்தி தங்களுக்குள் தாங்களே பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொள்வதைச் சற்று நிறுத்திவிட்டு, பிரதானமானதும் பயங்கரமானதும் பாசிஸ வெறி கொண்டதுமான முதல் எதிரியை நாம் இனங் கண்டு அதை முறியடிக்க முனைய வேண்டும்.

இல்லையானல் இங்குமொரு 'சிலி' தோன்றிவிடும். இதைச் சர்வ தேச அநுபவம் நமக்குக் கற்றுத்தந்துள்ளது.

1970-ல் மக்கள் பெற்ற வெற்றியை முடக்கிச் சிதைக்கவும் தேசிய மயமாக்கப்பட்டு வரும் தங்களது ஆதிக்கத்திலிருந்த வீடுகள், தோட்டங்களைத் திரும்பவும் தங்களது அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரவும் தேசிய பொருளாதாரத்தை சீர் குலைவின் எல்லைக் கோட்டிற்கே இழுத்துச் சென்ற அந்நியச் செலாவணி மோசடிக்காரர்களான தமது நண்பர்களைத் தப்புவிக்கவும் சொகுசு வர்க்கத்தினர் இதைவிட இன்னும் படு அயோக்கியத்தனமான சதிகளைச் செய்ய முன் வருவார்கள் என்பதை இந்த நாட்டுப் பொது மக்கள் பூரணமாக முன்னரே உணர்ந்து வைத்துள்ளனர்.

எனவே எந்தவித முகமூடியை அணிந்து கொண்டும் பிற்போக்குக் கூட்டம் மக்கள் அணியை இலேசில் ஏமாற்றிவிட முடியாது என்பதும் திண்ணம்!

எல்லாவற்றையும் விட, மக்கள் கலைஞர்களுக்கு இந்த அழிவுக் கூட்டத்தை அம்பலப்படுத்துவதில் பெரும் பங்கு உண்டு.

சிலியில் பாசிஸப் பேய்க் கூட்டம் அரசாங்க கவிழ்ப்பு வேலையை ஆரம்பித்த உடனே கலைஞர்களைத்தான் முதற் பலியாகப் பெற்றுக் கொண்டதை எழுத்தாளர்கள் உணர வேண்டும்.

மாபெரும் உலகக் கவி பாப்லோ நெருடா சிலியின் ராணுவ மிலேச்சர்களால் உயிர் நாசப்படுத்தப் பட்டதை இந்த உலகினர் இதற்குள் மறந்துவிடமாட்டார்கள்.

ஆகவே மக்கள் கலைஞர்கள் பொறுப்புணர்ச்சியுடன் இன்றைய பிற்போக்குக் கூட்டத்தினரின் பயங்கரச் சதியைப்பற்றியும் அதன் சனவிரோத நடவடிக்கைகளைப்பற்றியும் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

உணவு நெருக்கடி, வாழ்க்கைச் செலவு ஏற்றம், விலைவாசி உயர்வு போன்றவைகளால் சாதாரண பொதுசனங்கள் விரக்தியுற்றும் எரிச்சலுற்றும் இருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் இல்லை.

சாதாரண பொதுமக்களின் தோள்களில் இந்தப் பளு ஏற்றப் படுவதையும் அவர்களின்மீது ஏற்றப்பட்டுள்ள வாழ்க்கைச் சுமை குறைக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசாங்கம் கூடிய கவனம் எடுக்கவேண்டும் என்பதையும் இந்த ஆட்சியாளர்களின் கவனத்திற்கு இதேசமயம் கொண்டுவருகின்றோம்.

மக்களின் உணவு நெருக்கடியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனையும் இந்தப் பிற்பேக்குக் கூட்டம், இந்த நெருக்கடி தீர ஓர் ஆக்கபூர்வமான மாற்றத் திட்டத்தையும் மக்கள் மத்தியில் வைக்க முன்வரவிலலை என்பதும் கவனிக்கத்தக்கது பிற்போக்குச் சக்திகளின் பிரதான நோக்கமே தமது வர்க்க சக்திகளின் ஆதிக்கத்தைத் திரும்பவும் பாசிஸ முறைப்படி இந்த நாட்டில் மீண்டும் திணிக்கவேயல்லாது மக்களுக்கு நன்மை செய்வதற்கல்ல என்பதையும் சிந்திக்கத் தெரிந்த - கடந்தகால அநுபவத்தால் தெரிந்துகொண்ட - பொது மக்கள் உணர வேண்டும்.

ஜனநாயகத்திற்காக உருகி உருகிக் கண்ணீர் வடிக்கும் இதே கூட்டம் முன்னர் ஆட்சியில் இருந்தபொழுது செய்த ஜனநாயகப் படுகொலைகளை இந்த நாட்டு மக்கள் இதற்குள் மறந்து விட்டார்கள் என எண்ணி மக்களை ஏமாந்த சோணகிரிகள் என நம்பிக் காரியமாற்றுமேயானுல் முடிவில் இந்த அயோக்கிய அரசியல் கும்பல் மக்கள் சக்தியாலேயே பாடம் புகட்டப்படும் என்பதை மறந்துவிடக் கூடாது.

எழுத்துச் சுதந்திரத்திற்காக இதே கூட்டம் இன்று போர்க் கொடி தூக்குவதையும் இந்த நாட்டு மக்கள் மதிக்கத் தயாராக இல்லை. இவர்களது ஆட்சி அதிகாரத்தின் கீழ் பத்திரிகைச் சுதந்திரம் பட்ட பாட்டை இந்தப் பாரே அறியும்.

சர்வதேச ஜனநாயக சக்திகளை இன்று சாட்சிக்கிழுக்கிருர்கள், இவர்கள் இந்தோனேஷியா, சிலி போன்ற நாடுகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களை சர்வதேச ஏகாதிபத்தியக் கூட்டம் இரவோடிரவாக கவிழ்ப்பு வேலை செய்தபொழுது அதை எதிர்த்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை இவர்கள். இதுவும் இந்த நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும்.

எல்லாவற்றையும் மீறி இந்தக் கவிழ்ப்புப் பழிகாரக் கூட்டம் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் கையாட்கள் என்பதும் சகல பகுதி மக்களுக்கும் மிகத் தெளிவாகப் புரியும்.

எனவே சர்வ சனப் பகுதியைச் சேர்ந்த மக்களும் இந்தச் சதிகாரக் கூட்டம் செய்யும் மோசடிகளைப் பற்றி மிகவும் விழிப்பாக இருக்க வேண்டியதவசியம்.

இப் பிற்போக்குக் கூட்டத்தின் கையாட்களாகவும் நடைமுறைப்படுத்தும் தூதுவர்களாகவும் அரசாங்கத்தின்—இந்த நாட்டு மக்களின் வரிப் பணத்தை ஊதியமாகப் பெறும் — உயர்மட்ட ஊழியர்கள் செயல் படுகின்ருர்கள் என்ற உண்மையையும் நாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகின்ரேம்.

இவர்கள் எந்த ரூபத்தில் எந்த வேஷத்தில் எந்த மட்டத்தில் இருந்தாலும் உடனடியாக அகற்றப்பட வேண்டுமென வற்புறுத்திக் கூறுகின்ரேம்.

முற்போக்குத் திட்டங்களின் நிகர லாபம் பாமர மக்களைச் சென்றடையாமல் தடுக்கும் சாத்தான்கள் இவர்கள்தான். எனவே அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

முடிவாக ஒன்று சொல்லுகின்ரேம்.

சகல முற்போக்குச் சக்திகளும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் உறுதியாகவும் தோழமையுணர்வோடும் செயலூக்கத்துடனும் ஒன்றுபட்டுப் பிற்போக்காளரின் கூட்டுச் சதியை அம்பலப் படுத்துவார்களேயானுல்—

—மக்கள் சகல முனைகளிலும் கை கொடுப்பதுடன். தேசத்தை நிச்சயம் முன்னெடுத்துச் செல்லக் காத்திருக்கின்ருர்கள்.

'சிரித்திரன்' ஆசிரியர் சிவ ஞானசுந்தரம் ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் ஒரு புதிய சாதனையை நிலைநாட்டியவர்.

கார்ட்டூன் நகைச் சுவை இதழைத் தொடர்ந்து வெளியிடுவது என்பது ஓர் அசுர சாதனை. இதைச் செயலில் காட்டி வருபவர் இவர்.

சகல ஆற்றலும் கைவரப் பெற்றவரான இவர் அடக்கமானவர். பேச்சில் நகைச் சுவை மிளிர இவர் உரையாடுவதே ஒரு ரசனை.

சகோதரப் பத்திரிகை ஆசிரியரின் உருவத்தை அட்டையில் பிரசுரிப்பதில் மல்லிகை பெருமைப்படுகின்றது.

- ஆசிரியர்

# முதன் முதலில்  சந்தித்தேன்

டானியல் அன்ரனி

நகைச் சுவையுடன் சமுதாயத்தின் அவலங்களையும் தனி மனித வக்கிரக உணர்வுகளையும் நளினமாக நையாண்டி செய்வது மிகவும் நுட்பமான கலை. கைக்கொள்ளப்படும் புனிதமான நோக்கில் சிறிது பிழையேற்படினும் பிறர் மனத்தைப் புண்படுத்தி பகை கொள்ளச் செய்வதுடன் மிகப் பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்திவிடும். இவ்வரிய கலையை செவ்வனவே செய்ய எல்லோராலும்முடியாது. பரந்த ஆழமான அறிவும், மலர்ச்சியான இதயமும், நடுநிலை நழுவா மனப்பக்குவமும் வேண்டும். இன்று ஈழத்தில் இத்தகைய மேன்மையான கலையை, நல்லமுறையில் நகைச் சுவைத் துணுக்கள், கேள்வி—பதில்கள், கார்ட்டூன் சித்திரங்கள் மூலம் கையாண்டு வெற்றிகண்டு வருபவர், சிரித்திரனின் ஆசிரியரும், நண்பர்களால் அன்பொழுக 'சிவா' என்று அழைக்கப்படுபவருமான சிவஞான சுந்தரம் அவர்கள் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

சில நாட்களுக்கு முன்பு வரைகூட, வீரகேசரி, தினகரன், மித்திரன் போன்ற பத்திரிகைகளில் பரபரப்புடன் வெளிவந்து பல்லாயிரக் கணக்கான வாசகர்களை மகிழ்வித்த சவாரித்தம்பர், சின்னக்குட்டி, விக்கிரி, மைனர் மச்சான் போன்ற பாத்திரங்களையும், சித்திரகானம் போன்ற படைப்புக்களையும் வாசகர்கள் இலகுவில் மறந்திருக்க மாட்டார்கள். தமிழர் மத்தியில் — குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் மத்தியில் புரையோடி விட்ட மூடப் பழக்க வழக்கங்களை, காலத்துக்கு ஒவ்வாத சம்பிரதாயங்களை, சுயநலத்தின் அடிப்படையில் எழும் குறுகிய எண்ணங்களை, செயல்

களை, நாம் காணக்கூடிய, சந்திக்கக்கூடிய பாத்திரங்களை உருவாக்கி நடமாடவிட்டு, அவர்கள் மூலம் தமது சீரிய, சீர்திருத்த எண்ணங்களை நகைச்சுவையான நிகழ்ச்சிகளுடன் பிணைத்து நளினமாக நையாண்டி செய்திருந்தார். அந்தச் சுந்தரும், இந்தச் சிவஞான சுந்தரமும் ஒருவரே என்பதை அறியும் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம்.

நான் நீண்ட நாட்களாகவே சிரித்திரன் வாசகனாக இருந்து, விசேஷமாக மகுடி கேள்வி பதில்களைப் படித்து ரசித்து வந்தவன் என்றவகையிலும், தொடங்கி ஒரு சில இதழ்களுடனேயே இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும் தமிழ் சஞ்சிகைகள் மத்தியில் பல வருடங்களாக தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் சஞ்சிகை என்றமட்டிலும், சிரித்திரன் சஞ்சிகையிலும் அதன் ஆசிரியராகிய சிவஞான சுந்தரம் அவர்களிடமும் அபிமானம் ஏற்பட்டிருந்தது. கொழும்பு செல்லும் போதெல்லாம் பல தடவைகளில் அவரைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவல் இருந்தபோதும் சந்தர்ப்பம் கைகூடாமலே போய்விட்டது.

*1971*-இல் சிரித்திரன் காரியாலயம் யாழ்ப்பாணம் பிறவுண் வீதிக்கு மாற்றலாகி வந்ததை அறிந்ததும் மீண்டும் என் ஆவல் துளிர்கண்டது. அந்த அருமையான சந்தர்ப்பமும் இலகுவில் கிடைத்தது.

நானும் நண்பர் ராதேயனும் பிறவுன் வீதியிலிருக்கும் அவருடைய காரியாலயத்திற்குச் சென்றோம். நான் எதிர்பார்த்துச் சென்ற வயது முதிர்ந்த, அனுபத முத்திரை குத்திய ஆசிரியருக்குப் பதிலாக அறிவுக் கூர்மை மிக்க விழிகளும், பண்புடன் நண்பர்களை வரவேற்கும் இளம் தோற்றத்தினரைக் கண்டதும் வியந்து போனேன். அறிமுகப் படலம் ஆரம்பமாகியது. உரையாடல் தொடர்ந்தது ... கலை, இலக்கியம், சிற்பம், ஓவியம், சினிமா, வாழ்க்கை முறைகளைப்பற்றி சுற்றிச் சுற்றி வந்தன. அவருடைய சிந்தனைச் செறிவான கருத்துக்கள் மூலம் அவருடைய அறிவின் ஆழத்தையும் அனுபவத்தின் அகண்ட பரப்பையும் அறிந்து கொண்டேன். பலமணி நேரம் நகர்ந்ததுகூட அறியால் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். அன்று முதல் முதலில் அவரிடமிருந்து விடைபெற்ற போது உயர்ந்த மனிதரைச் சந்தித்த நிறைவு என் மனதில் தேங்கி நின்றது. முதல் சந்திப்பிலே நண்பர்களைக் கவர்ந்து விடுவதில் வல்லவர் சிவஞான சுந்தரம் அவர்கள்.

'சிவா' அவர்கள் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தந்தையார் சிற்லம்பலம் அவர்கள் வடபகுதி தபால் தந்தித் தொடர்பு அத்தியட்சகராகக் கடமையாற்றியவர். ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் முடித்தபின் பம்பாய் சென்று சேர். ஜே. ஜே. ஸ்கூல் ஒவ் ஆட்ஸ்சில் கட்டிடக்கலை பயின்றார். அங்கு கல்வி கற்றபோது தான் உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர் அகமட் அப்பாஸ் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. இவரிடம் இருந்த ஓவியத் திறமையை அறிந்த அகமட் அப்பாஸ் அவர்கள் 'பிளிட்ஸ்' பத்திரிகைக்கு அறிமுகப் படுத்தி

வைத்தார். அதைத் தொர்ந்து சுந்தர் அவர்களின் கார்ட்டுன் சித்திரங்கள் 'பிளிட்' சிலும், வல்லபாய் பட்டேலின் மகன் தயபாய் பட்டேல் நடத்திய 'கொஞ்ச்' மற்றும் மராட்டியப் பத்திரிகை 'லோக் சத்த' ஆகியனவற்றில் வெளிவந்து பல பரப்புடன் பலருடைய பாராட்டுதல்களையும் பெற்றன.

தாயகம் திரும்பிய பின் அரசாங்கக் கட்டிடக்கலைப் பகுதியில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது டாக்டர் க. கைலாசபதி அவர்களின் நட்பு இவருக்குக் கிடைத்தது. அவருடைய தூண்டுதலினாலும், உற்சாகத்தினாலும் தொடர்ந்து சுந்தர் அவர்கள் 'ட்றைன்' 'பீப்பிள் வோய்ஸ்' வீரகேசரி, தினகரன், மித்திரன் பத்திரிகைகளில், அரசியல் நகைச்சுவைக் கார்ட்டூன்களை கீறினார்.

சிவஞான சுந்தரம் அவர்களின் ஓவியத்திறமையை அறிந்து கொள்ள வேண்டுமாகில், நமது நிதிமந்திரி கலாநிதி என். எம். பெரேரா அவர்களின் இல்லச் சுவரை அலங்கரித்துக் கொண்டிருக்கும் 'ட்ரொஸ்கி' யின் உருவப் படத்தையும், தேசிய ஓவியக் கண்காட்சிச் சாலையில் உள்ள ஆனந்தக்குமாரசாமியின் ஓவியத்தையும் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

இயல்பாக அவரிடம் இருந்த துணிச்சலும், தமிழில் கார்ட்டூன் சஞ்சிகை ஒன்றை நடாத்த வேண்டுமென்ற இலட்சியத்தினாலும் தமது அரசாங்க உத்தியோகத்தை துறந்து, தமக்குக் கிடைத்த 'இன்சூரன்ஸ்' பணத்தை முதலீடு செய்து சிரித்திரன் சஞ்சிகையை ஆரம்பித்தார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதியாகிக் கொண்டிருந்த குமுதம், கல்கி. ஆனந்தவிகடன் போன்ற சஞ்சிகைகள் ஈழத்து வாசகர் மத்தியில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த நாளிலும் அவைகளுடன் போட்டி போட்டு விற்பனையிலும் தரத்திலும் 'சிரித்திரன்' முன்னணியில் நின்ற தொன்றே அதன் தரத்திற்குச் சான்றாக இருந்தாலும் சிவஞானசுந்தரம் அவர்களின் உழைப்பும் தன்நம்பிக்கையும், இதைவிட அவருக்குக் கிடைத்தமனைவியும் தான்என்பது பலருக்குத் தெரியாது. திருமதி அவர்கள் தரமான வாசகர், நிர்வாகி, பலரையும் பண்பாக உபசரிக்கத் தெரிந்தவர், கணவனுடைய சகல காரியங்களிலும் துணை சேர்ந்து ஆலோசனை வழங்குபவர்.

அவரிடம் இருக்கும் மிகச் சிறந்த குணம் அடக்கம். விளம்பரம் வேண்டாதவர். அமைதியாக இருந்து பணிபுரிய விரும்புபவர். எம்மைப் போன்ற இளம் சந்ததியினரின் திறமையில் அபாரமான நம்பிக்கை வைத்துள்ளவர். எப்போதும் மனம்திறந்து இனிமையுடன் உரையாடுபவர். துணிச்சல் மிக்கவர். எதையுமே புதுமையாகச் செய்யவேண்டுமென்ற வெறியுடையவர். பழம் பெரும் எழுத்தாளர்களும் கலைஞர்களும் படும் அவல நிலையை அறியும் போது உளமார வருத்தப்படுபவர்.

சிவஞானசுந்தரம் அவர்கள் தமது திறமையில் இன்னும் நம்பிக்கை வைத்துப் பத்திரிகை உலகில் இன்னும் பல சாதனைகளைச் செய்வார் என்பதே எனது உறுதியான நம்பிக்கையாகும்.

# காவல்காரன்

மூ. கனகராஜன்



ஆரியரட்ன வித்தான

எங்கும் இருள். சீதளக் காற்று இடைக்கிடையே வீசிக் கொண்டிருந்தது. வானில் சிதறிய நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மின்னிக் கொண்டிருந்தன. தூரத்துக் குட்டையிலிருந்த தவளைகளின் கத்தல் இடைக்கிடையே கேட்டது. அதைத்தவிர எங்கும் அமைதி' இனம் புரியாத ஒரு பாழ் சூழ்நிலையும், ஏகாந்தமும் அந்தப் பிரதேசமெங்கும் பரவி இருந்தது.

அப்புஹாமி தனது காவல் குடிசையிலிருந்து வானத்து வெள்ளைகளை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் மெலிந்த, கூச்ச சுபாவமுள்ள நடுத்தர வயதானவன். அவனது மீசை ஓரங்களில் சிறிது நீண்டு வளர்ந்துவிட்ட இரு நரை மயிர்கள் தெரிந்தன. அவன் அணிந்திருந்த கம்பளியினால் அவனுக்குக் குளிர் அவ்வளவாகத் தெரியவில்லை. அவன் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருந்தபோது அவனது குழிந்த கண்கள் இருளில் இரு வெண் புள்ளிகளைப் போலத் தென்பட்டன. அவனருகிலிருந்த லாந்தரின் சுடர் இடைக்கிடையிலான காற்றின் வீச்சால் துடிதுடித்துக் கொண்டிருந்தன. பக்கத்தில் இரட்டைக் குழல் துப்பாக்கியொன்று சுவரில் சாத்தப்பட்டிருந்தது. அப்புஹாமியின் காலையொட்டி மண் நிற, ஒல்லியான நாய்- 'டைகர்' சுருண்டு படுத்துக் கிடந்தது.

தன் பாரத்தைச் சுமக்கும் வாங்கிலிருந்து சுவரோடு சாய்ந்த அப்புஹாமியின் பார்வை வானத்தில் உயர்ந்தது. அந்த முகத்தைச் சோர்வு மிக்கதோர் பாவம் கௌவிக் கொண்டிருந்தது. நைந்து போன அவனது 'பனியகாட்' சாரத்தில் உட்காந்து ஒரு பெண்ணும் பெரிய நுளம்பு, காலின் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தது. அதை அவன் அடித்த ஓசையால் சடுதியாகக் காதுகளை விறைத்துக்கொண்டு பார்த்த 'டைகர்' மீண்டும் தன் மூக்கைத் தரையிலேயே வைத்துக் கொண்டது.

தனக்கும், மீனுட்சிச்கும்மிடையே ஒரு கூடாத நட்பு இருப்பதாகத் தோட்டத்தில் பரவும் வதந்தியைப் பற்றிய நினைவு அவனது அடிமனதிலூர்ந்தது.

தோட்ட 'லயத்'தின் ஒரே அறையான மீனுட்சியின் வீட்டில், சில நாட்களில், நள்ளிரவில் நுழைவான் அவன். சிறிது நேரம் அவளுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு, சுடச்சுட ஒரு தேநீரும் பருகிவிட்டு, மீண்டும் வந்து தன் குடிசைக்குள் ஒரு நத்தையைப் போல நுழைந்து கொள்வான். தனது காவல் குடிசைக்குள்ளேயே கிடந்து சோர்வும், களைப்பும் மிக்க மனமே விறைத்துப் போவதால் மீனுட்சி வீட்டிற்கு போவதை அவன் தவருகக் கருதவில்லை.

எப்படியான நள்ளிரவிலும் அவன் கதவைத் தட்டிய க்ஷணமே அவள் எழுந்துவிடுவாள். அதை ஒரு கைம்மாருக எண்ணித்தான் அவள் செய்கின்ருளா? அல்லது அவளின் கருணையுள்ளத்தாலா?

அவளின் கணவன் வடிவேல் நோயாய்ப் படுத்துக் கிடந்த போது தான் செய்த உதவிகளை அப்புஹாமி நினைத்துக்கொண்டான்.

வடிவேல் காவற்காரனுயிருந்தான். அப்போது, அப்புஹாமிக்கு வெறும் புல்லுவெட்டும் வேலைதான். சில மாதங்களுக்கு முன், எதிர்பாராமல் வடிவேல் மரணமானதால், தானே காவற்காரனுக நியமிக்கப்பட்டதையும் அப்புஹாமி எண்ணிப் பார்த்தான்.

வடிவேல் இருதய நோயால் பீடிக்கப்பட்டிருந்தபோது, தன்னுலியன்ற உதவிகளையெல்லாம் அப்புஹாமி செய்தான். இரவில் தன்னுல் ஏற்படும் தொல்லைகளையெல்லாம் மீனுட்சி பொருட்படுத்தாததன் காரணம், கடந்தகால தனது உதவிகளினுற்ருன் என்றும் அவன் நினைத்தான்.

அவன் கேள்விப்பட்ட அந்த வதந்தி தன்னை உலுக்கியதையும் நினைத்துப் பார்த்தான். அந்தச் செய்தி அவனை அதிர்ச்சியடையச் செய்தது. தோட்டத்திலுள்ள எல்லோரையும் அவன் வெறுத்தான். 'பேசக் கூடாத அசிங்க ஜன்மங்கள்' என்று அவர்களைப்பற்றித் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

அது எப்படியானுலும் நள்ளிரவில் ஒரு பெண்ணின் வீட்டிற்குள் நுழைவது நல்லதல்லத்தான்; ஆட்கள் கதை கட்டுவார்கள்தான்...... இப்படியும் அவன் மனம் கூறிற்று.

'இதையெல்லாம் மீனுட்சியிடம் சொல்லிவிட முடிந்தால்! எனக்குத் தெரியும் வெளியே நடப்பதெதுவும் அவளுக்குத் தெரியாது' இப்படியான தன்னை வருத்தும் நினைவுகளிலிருந்து தப்பிவிட முயற்சித்தான். அந்த நினைவுகளோ தன்னை விட்டகலாததால் தன் தலையைப் பிராண்டிக்கொண்டான்.

இப்படியே யோசித்துக் கொண்டிருக்கும் போது அவனுக்கு நித்திரை மயக்கம் வந்தது. இப்படியான நேரங்களில் தானே அவன் மீனுட்சியைப் பார்க்கப் போவான்; அவளுடன் தேநீர் அருந்துவான்; அவளுடன் ஏதாவது பேசுவான். அவை எல்லாவற்றையும் இப்போது இழந்துவிட்டதாக உணர்ந்தபோது அவனுள்ளிருந்து பெருமூச்சு வெளியே

றிற்று. ஒருநாள் மீனாட்சி சொன்னதை நினைத்துக்கொண்டான்:-

'அப்புஹாமி அண்ணே, எப்ப வேணுமானாலும் நீங்க வரலாம், உங்களுக்காக தேத்தண்ணி வச்சிருப்பேன்.'

ஆனால் இனிப் போக முடியாதே. அவன் தலையை உலுப்பிக் கொண்டு றேட்டைப் பார்த்தான்.

வேறு இரவுகளில் இதே நேரத்தில் ரவுனுக்குப் போன யாராவது வருவார்களே என்று எண்ணினான். இப்போது அவனுக்கு யாரையாவது காண வேண்டும் போலிருந்தது. ரவுனுக்குப் போய்வரும் கூலியாள் யாராவது அவனுடன் இரண்டொரு வார்த்தைகள் பேசுவான் அல்லது ஒரு சுருட்டோ, பீடியோ கொடுப்பான். அத்துடன் பெரும்பாலும் ஒரு அற்ப சங்கதியைப் பற்றி உரத்துக் கத்திக் கூச்சலிடுவான். அப்படியானவன் ஒரு குடிகாரனாயும் இருந்துவிட்டால், வழக்கமாக இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் இரவில் குடிசையருகில் கழிக்கப்படும்.

'சே! வேறெதையாவது யோசிக்க வேணும்; கடவுளே, வேறெதுவும் வருகுதில்லையே, இன்று மோசமான நாள், ஒருவனைக் கூட காணோம்' என்று ஏதாவதொரு மகிழ்ச்சியான, கிழுகிழுப்பான நிகழ்ச்சியில் மனதைக் குவிக்க முயன்று நக்ஷத்திரங்கள் நிறைந்த வான மண்டலத்தை உற்சாகத்தோடு நோக்கினான். அது கருமை பூண்டு அமைதியோடிருந்தது. இரத்தினங்களாக ஒளிர்ந்த நட்சத்திரங்கள் எப்படிச் சிதறிப் போயின எனச் சிந்தித்தான். தனித்திருந்த ஒரு வெள்ளி மட்டும் தன் குடும்பத்திலிருந்து பிரிந்து வேறாகி வாழ்வதாக அவனுக்குப் பட்டது. சில வேளைகளில் பிரகாசம் குன்றி மீண்டும் பளிச்செனத் தெரியும் அது ஒரு கிரகமாயிருக்க வேண்டும்.

சூரியன், சந்திரன்' நக்ஷத்திரங்கள் எல்லாம் இவ்வுலகைப் போலவே மிகப் பெரிய ஆனால் வானமண்டலக் குடு பத்தவை என அவன் கேள்விப்பட்டிருக்கின்றான்; ஆனால் அதைப்பற்றி அதிகம் தெரியாது.

'கிரக உலகு' என உதடுகளில் நெளியும் புன்னகையோடு தனக்குள் கூறிக்கொண்டான்.

இப்படியே உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே நித்திரை மயக்கிற்று. சோர்வைப் போக்க ஒரு சுருட்டைப் பற்ற வைத்தான். மனம் எண்ணிற்று.........

'அவன் மீனாட்சியின் வீட்டில் நுழைகின்றான்; அவளின் தூக்கக் கலக்கமான முகம்; அவள் குசினிக்குள் போகிறாள்; கேற்றிலை வைக்கிறாள்; அடுப்பை மூட்டுகிறாள்; ஒரு பெரிய விறகுக் கட்டை மீது உட்கார்ந்து வழமைபோல விசாரிக்கின்றாள்: 'உங்க(ள்) பொம்பிளைக்கு (மனைவி) இப்ப எப்படி? இன்னமும் சொகமில்லையா? இவ்வாறெல்லாம் தன் மனக் கண்களுக்குள் அவன் கண்டான்.

தோட்டத்தில் பரவும் வதந்தியைப்பற்றி அவளிடம் சொன்னால்......... தனக்கேயுரித்தான பாவத்தோடு அவள் சொல்வாள்: 'ரொம்ப கெட்ட பயல்கள், நாங்க(ள்) சும்மா பழகினாலும் அசிங்கமான கதையெல்லாம் கட்டிவிடுறாங்க' இப்படி

நினைத்தபோது மீனாட்சிக்காக இரங்கி மீண்டும் ஒரு புன்னகை அவனது உதடுகளில் நெளிந்தோடிற்று.

'அவளுக்கு ரொம்ப நல்ல மனசு' தனக்குள் கூறிக் கொண்டான். வதந்தியின் எண்ணம் மீண்டும் மனதில் வந்தது. அந்த வதந்தி துரைமார்களுக்கும் எட்டுமே என்றெண்ணினான். அது அவனது மனதைச் சித்திரவதை செய்தது. மனிதனின் மனப் போக்கை நினைக்கும்போது அவனுள் ஆழ்ந்த வெறுப்பு தோன்றியது.

குனிந்தபடியே கைகளைக் கட்டிக்கொண்டு ஒரே நிலையில் உட்கார்ந்து இருப்பதினாலான சோர்வும், தூக்க மயக்கமும் சுருட்டுப் பிடித்தால் ஓரளவாவது குறைவதாக அப்புஹாமி உணர்ந்தான்.

தூரத்திற் தெரியும் மலைத் தொடர் ஒன்றிலிருக்கும் ஒரு தேயிலைத் தொழிற்சாலையின் வெளிச்சம் மெல்லியதாகத் தெரிந்தது. மலைமுகடுகள் தாரகை ன் ஒளியில் மங்கலாகப் புல -ன: திடீர் திடீரெனக் கிறீ டும் சில்வண்டுகளின் ஓசையால் அமைதி குலைக்கப் பட்டது. காவற் குடிசையிலிருந்த லாந்தரின் மங்கிய வெளிச்சத்தில் தேயிலைச் செடிகள் தென்பட்டன; அவை உணர்வற்ற துயிலிலிருப்பதைப்போலிருந்தன.

சுருட்டைப் பற்றவைக்கத் தட்டிய தீக்குச்சி எரியாததால் அதை ஒருதடவை பார்த்துவிட்டு மீண்டும் தட்டியபோது இன்னொரு காட்சி மனதில் பிரதிபலித்தது.

இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள கிராமத்திலிருக்கும் அப்புஹாமியின் மனைவி இப்போது நிம்மதியாகத் தன் குழந்தை மகனுடன் நித்திரையாகியிருப்பாள். தன் மனைவியுடன் அவனுக்கு ஓரிரவைக் கழிப்பதற்குக் கூட கிடைக்கும் சந்தர்ப்பம் எவ்வளவு அரிதாகப் போய்விட்டது. நொய்ந்துபோன அவனது மனைவியின் சோர்ந்த முகம் அவன் முன் தோன்றிற்று. 'அவள் தவறான வழியில் போய் விட்டால்.........? இல்லை, அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்காது' அந்த நினைவு இப்படி மறைந்தது. சிரித்துக் கொண்டே 'அப்பா அப்பா' என மழலை மிழற்றும் மகனின் 'குரல்' கேட்பதைப் போலிருந்தது. அந்தச் சின்ன மகன் பத்து — பன்னிரண்டு வயதாகி, வளர்ந்து எப்படித் தன் தனிமையைப் போக்கத் தனக்குத் துணையாயிருப்பான் என்று மனக் கண்ணில் பார்த்து மகிழ்ந்தான்.

அவனுக்குத் தான் நடத்தும் வாழ்க்கை மிகத் துன்பமயமானதாகத் தோன்றிற்று. இந்த வேலைக்கு வருமுன் — புல்லு வெட்டுபவனாயிருந்த போது கொஞ்சமாவது ஆறுதலிருந்ததல்லவா? இதற்கு முன்னரும் இப்படியான துன்பத்தையோ, தனிமையையோ அவன் அனுபவித்ததுண்டா? இந்தக் கொடிய நினைவு அவன் மனதை நசுக்கிற்று. மீனாட்சியின் கணவன் வடிவேல் கூட இதே விதமாகத்தானே வேதனை அனுபவித்திருப்பான் என்று நினைத்தபோது அவனுக்கோர் சிறு ஆறுதல் ஏற்பட, நிவாரணம் மேலெ கொட்டாவி வெளிப்பட்டது.

மிக நீண்ட நேரமாக அதே நிலையிலிருந்ததால் கால் விறைத்தது.

திடீரெனக் காதுகளை விறைத்துக்கொண்டு சுற்றுமுற் றும்பார்த்த 'டைகர்' வெளியே ஓடி, சப்தமின்றி வாலைக் கால் களுக்குள் இடுக்கிக்கொண்டு திரும்பிற்று. காலடியோசை அருகே, அருகே கேட்டது. அந்த ஓசையை அப்புஹாமி கூர்ந்து கேட்டான். ரவுனிலி ருந்து யாரோ வருகிறார்கள் போலிருக்கிறது. அவன் முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்தது.

சந்தோஷ மிகுதியால் துப் பாக்கியையும், டார்ச்சையும் எடுத்துக்கொண்டு சீட்டியடித் தபடியே அப்புஹாமி குடிசை யிலிருந்து வெளியே வந்தான். றோட்டைக் கவனித்தபோது கட்டைக் காற்சட்டையும், கறுப்பு 'சுவெற்ற'ரும் அணிந்த 'சின்னதுரை' வேட்டைக்குப் போவதைக் கண்டான். அவ ருக்கு முன்னால் கொழுத்த சடைத்த அவரின் நாய் போய்க் கொண்டிருந்தது.

'அப்புஹாமி' என்றவாறு அவர் சிகரெட்டை உறிஞ்சி ஒரு புகை வளையத்தை விட் டார்.

'வேட்டைக்குப் போகி றேன். நேற்றும் பெரிய முள் ளம் பன்றிகள் கிடைத்தன. இந்தப் பக்கத்தில் நிறைய முயலிருப்பதாகச் சொல்கிறார் களே......... அப்புஹாமி உனக் குத் தெரியவேண்டுமே' என்றார் அவர்.

'இல்லை ஐயா, இந்தப்பக் கம் அடிக்கடி முயல் வராது. அங்கே தூரத்தில் புதர்கள் பக்கம்தான் முயல்கள் நிறைய இருக்கிறது' அப்புஹாமி உற் சாகத்தோடு சொன்னான்.

'ஹா!' எனத் தலையாட்டி விட்டு 'சின்ன துரை', 'டார்ச்' சை அங்குமிங்குமாக ஒளிபாய்ச் சிக் கொண்டே பள்ளத்திலிறங் கிப் போனார்.

'இந்தப் பக்கத்தில் முயல் இருக்கிறதென்று சொல்லியிருந் தால், அவர் வேட்டையாடு வதை நானும் பார்க்கவல்லவா நேர்ந்திருக்கும்?' தனக்குள் அவன் கேட்டுக் கொண்டான். துரையை அங்கே அனுப்பியதற் காகவும் வருத்தப்பட்டான்.

முயல்களிருக்கும் இடங்க ளைச் சொல்லிவிட ஒருணர்வு தூண்டிற்றுத்தான்; அவனும் கூடப் போயிருந்தால் நிறைய முயல்களையும் பிடித்திருக்கலாம் தான்.

தோட்டத்து எல்லைப் புதர் களில் அடிக்கடி முயல்கள் விளை யாடுவதை அவன் கண்டிருக்கி றான். அவனிடம் துப்பாக்கி இருந்தும்கூட வேட்டையாட உந்தப்பட்டதில்லை. பாவம் செய்ய அவன் விரும்பாவிட்டா லும் கூட தானே வெறுத்த தனது கூற்றை — தான் மிகைப் படக் கூறுவதை 'சின்ன துரை' ஆர்வத்தோடு கேட்பதை— காண விழைந்தான். அவர் தலையை அசைத்துவிட்டுப் போய்விட்டதன் பின் அப்புஹா மியின் விருப்பம், ஆழ்ந்த துய ரமாயும், வெறுப்பாயும் மாறிற்று.

டார்ச்சை ஒளிபாய்ச்சிக் கொண்டு அவர் போவதை நோக்கியபோது அப்புஹாமி சொல்லிக்கொண்டான்: 'அவ ருக்கென்ன வாழ்வைச் சந்தோ சமாகக் கழிப்பவர்.'

ஏழெட்டு மைல்களுக்கப் பாலுள்ள பண்டாரவளை நகரின் மின்சார விளக்குகள் மின்மினி களென மங்கலாக ஒளிர்ந்தன.

மலையின் பக்கவாட்டில் மூடு பனிப் படலமொன்று மெல்ல மெல்ல கீழிறங்கிற்று. தாரகைகள் பிரகாசமாக ஒளி சிந்தின. வானம், முடிவற்று தெரியும் தேயிலைத் தோட்டங்கள், மலைக் குன்றுத் தொடர்கள் அனைத்தும் ஒன்றையொன்று அறியாததாக அமைதியுள் முடங்கிக் கிடந்தன.

'ரொம்ப நேரமாகிட்டுது'- வானத்தைப் பார்த்துக் கொண்டே இப்படி நினைத்தான். கல்லைப்போல் உட்கார்ந்திருந்த 'டைகர்' காதுகளை ஓசையுடன் அடித்துக் கொண்டது, தன் எஜமான் எங்கு சென்றாலும் பாதத்தருகில் உட்கார்ந்திருப்பது அல்லது சுருண்டு கிடப்பதே அதன் பழக்கம்.

அப்புஹாமி இன்னொரு சுருட்டைக் கொழுத்தியவாறு 'டைகர் பசிக்கிறதா?' என்று கேட்டுக்கொண்டு காவல் குடிசைக்கு முன்னாலுள்ள மதகின் மேல் உட்கார்ந்தான்.

தோட்டத்துக்குப் போகும் பாதையின் மணல். நட்சத்திர வெளிச்சத்தில் சாம்பல் பூத்துத் தெரிந்தது.

இத்தனை நேரமும் அமைதியாயிருந்த 'டைகர்' ஊளையிட்டது. அடுத்து உறுமத் தொடங்கிற்று. அப்புஹாமியின் நினைவு கலையுமுன்னரே ஒருவர் வரும் வெளிச்சம் தெரிந்தது. யாரோ 'ரவுனி' லிருந்து வருகிறார்களென நினைத்தான்.

'சும்மாகிட' டைகரை அடக்குவதற்காகச் சத்தமிட்டான். தனது டார்ச் விளக்கை அடித்து வருவது யாரெனப் பார்க்க முனைந்தான்.

'அப்புஹாமி அண்ணே'— மதகின் அருகில் நின்ற அந்த மனிதன் கணநேரம் அமைதியானான்.

'ஆ! கந்தசாமி, எங்கே இருந்து வாருய்?' தனக்குள் குமிழிடும் மகிழ்வோடு அப்புஹாமி கேட்டான்,

'ரவுனுக்குப் போனேன், வர நேரமாயிட்டுது, நடந்து நடந்து காலெல்லாம் வலிக்குது'

மதகின்மீது அமர்ந்த கந்தசாமி முணங்குவதைப் போலக் கேட்டான்:-

'ரொம்ப நேரமாகிவிட்டுதில்லை?.........'

'இல்லே, அவ்வளவு நேரமாகலே'- தான் சொல்வது பொய்யெனத் தெரிந்தாலும் அப்படிச் சொன்னதற்காகத் தனக்குள் மகிழ்ந்தான். தனக்கருகில் மதகில் உட்கார்ந்திருக்கும் கந்தசாமிக்கு மலையேறி வந்ததால் மூச்சிரைப்பது அப்புஹாமிக்குக் கேட்டது.

நீண்ட அமைதி வியாபித்தது.

'இப்ப நீ மீனாட்சியிடம் போறதில்லையா?' அமைதியைக் கலைத்தபடி கந்தசாமி கேட்டான்.

'இல்லை, இனி அங்கே போறதில்லை. ஆளுங்க சொல்றது துரைமார்களுக்குத் தெரிஞ்சா தோட்டத்தை விட்டே போகவேண்டியது தானே...... ஒரே இடத்திலேயே இருக்க ஏலாததால்தான் சில நேரம் அங்கே போய் கொஞ்சம் தேத்தண்ணி குடிப்பேன்'

'அதுதான் எனக்குத் தெரியுமே அப்புஹாமி அண்ணே, நீ ரொம்ப நல்லவன், ஆனல் ஒரு கோப்பை தேத்தண்ணிக்

காக எதுக்கு நீ அவ(ள்) வீட்டுக்குள்ளே பூரணும்?'

'வேறே யாராவது நடு ராத்திரியில எனக்காகக் கதவைத் திறப்பாங்களா? கொஞ்சம் தேயிலேயும், சீனியும் கொண்டாந்து நீயே தேத்தண்ணி ஊத்திக்க ஏலாதா?'

அதை ஏற்றதைப் போல அப்புஹாமியின் முகம் தோன்றிற்று. அந்த எண்ணம் எத்தனையோ தடவைகள் அவனுக்கும் ஏற்பட்டதுதான். ஆனுல் அவனுக்குத் தேவையாயிருந்ததெல்லாம் தேநீரைவிட, தனது அலுப்பும், நித்திரை வெறியும் முறியக்கூடியதாக கதைக்கும் ஒரு துணைதானே.

'நேற்று பக்கத்துத் தோட்டத்துக்குள்ள திருடங்க நுழைஞ்சிட்டாங்களாமே?' தன் பாட்டில் யோசித்துக் கொண்டிருந்த அப்புஹாமியிடம் கந்தசாமி அக்கறையற்றவனுக தரையைப் பார்த்தபடியே கூறினுன்.

'யார் சொன்னது?'

'ஏன் உனக்குத்தெரியாதா? காவல்காரன் நல்லா தூங்கியிருக்கான், கள்ளங்க காவல் காம்பறுவையும் தாண்டி தோட்டத்துக்குள்ள போய் கள்ளச் சாவி போட்டு ஸ்ரோரைத் திறந்து அரிசி சாமான்களையெல்லாம் தூக்கிட்டுப் போயிட்டானுங்க'

'ஏன், ஸ்ரோர் காவல்காரன் இல்லையா?'

'அவன் பெக்டரிக்கு போயிருந்தப்பதான் கள்ளன் பூந்திருக்கான். அப்புஹாமி! கள்ளன் வெளியே இருந்து வந்தா அப்படிச் செய்ய ஏலாது; தோட்டத்திலேயே உள்ளவனுங்கதான் செஞ்சிருக்கணும்; இல்லாட்டி கள்ளச் சாவி செஞ்சி திறக்க முடியுமா? பொலிஸ் வந்து எல்லா லயத்தையும் சோதிச்சிருச்சி, ம்... ஒன்னுமே நடக்கலே' மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டு வந்த கந்தசாமி கடைசியாகக் கூறினுன்:-

'காவல்காரன் தூங்கிட்டா கள்ளனுக்கு எவ்வளவு வாசியாகப் போகுது!' என்று.

'இருக்கலாம்...' தனக்குப் பிடிக்காத விஷயமானதால் உற்சாகமற்றுச் சொன்ன அப்புஹாமி தொடர்ந்து ஏதோ நினைத்துக்கொண்டவனுக ஆனுல் அது எப்படியாயிருந்தாலும்... என்று ஏதோ சொல்ல வந்தவன், எதையோ நினைத்துக் கொண்டு மிகுதியை விழுங்கி விட்டான்.

'ஏன் அப்படிச் சொல்றே? அந்தக் காவல்காரன் தூங்கி(வி)ட்டதுக்காக அவனை வேலேயிலிருந்து விலக்கிட்டாங்க. 'தலையில ஏதோ வருத்தத்தாலேதான் தூக்கம் வந்திருச்சி' என்னு சொல்லியிருக்கான், ஆனுல் துரை, 'கள்ளன் வந்த அந்த நேரம் பார்த்துத்தானு உனக்கு தூக்கம் வந்திருச்சி?' என்று கேட்டு ஆளே வெளியே போட்டுட்டாங்க.

'ஆ!......' வானத்தை பார்த்து முனகிக் கொண்டு அப்புஹாமி தொடர்ந்தான்:-

'எந்தக் காவல்காரனுயிருந்தாலும் விடியும் வரைக்கும் முழிச்சிக்கிட்டிருக்க ஏலாது; ஒரே இடத்திலேயே இருந்தா யாருக்குத்தான் தூக்கம்வராது? தூங்காமலேயே இருக்க யாராவது பக்கத்தில இருக்கணும் பேசிக்கிட்டிருக்க. தோட்டத்து பெரிய துரைமாருக்கு ஒரே இடத்திலே இரண்டு காவல்காரர்களை வைக்கணும்கிறது தெரியிறதில்லே; அப்படியானு

ஒருத்தன் கொஞ்சம் கண்ணயர்ந்தாலும் பரவாயில்லே.....'

அணைந்துபோயிருந்த சுருட்டை அப்புஹாமி மீண்டும் பற்ற வைத்தான். நெருப்புக்குச்சியின் வெளிச்சத்தில், அவன் முகத்தில் ஒரு குறிப்பிட்ட பாவம் தென்பட்டது.

'நீ சொல்றது நல்ல 'ஐடியா'தான். ஆனால் இதை யார் போய் துரைமார்கிட்ட சொல்லுறது?' கந்தசாமி இவ்வாறு அப்புஹாமி மீதான கழிவிரக்கத்தோடு கூறினான்.

'இப்போ ரொம்ப நேரம் போயிட்டுது' என்று கூறவேண்டுமென அப்புஹாமி வன்மம் கொண்டான். அவர்களிருவரும் நீண்ட நேரம் இரவில் பேசிக் கொண்டிருந்துவிட்டதை உணரவில்லை: நேரமும் நள்ளிரவைக் கடந்துவிட்டது.

திடீரென அமைதியைச் சிதறடிப்பதைப் போல ஒரு துப்பாக்கிச் சப்தம் தூரத்திலிருந்து எதிரொலித்தது.

'சின்ன துரை முயலைச் சுட்டிருப்பார்'

'நான் போகனும், நல்லா நேரம் போயிருச்சி' கந்தசாமி கூறினான்.

அப்புஹாமி ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். தன்னை விட்டுப் போகப் புறப்படும் நண்பனை இருக்கச் சொல்வதா அல்லது 'சரி போய் வா' என விடைகொடுப்பதா என்பதையும் மறந்திருந்தான்.

கந்தசாமியின் உருவம் எப்படி இருட்டில் மறைந்ததென்பதையும், சின்ன துரையின் சடை நாய் இளைப்புடன் நெருங்கும் போது எப்படி 'டைகர்' தாழ்ந்து பதுங்கிற்று என்பதையும் அப்புஹாமி கவனித்தான்.

சின்ன துரை நின்றார். கையில் தூக்கிவந்த முயலுக்கு லைற் அடித்துக் காட்டி 'பார்த்தாயா' என்றார்.

அப்புஹாமி தலையை மட்டுமே ஆட்டியவாறு 'இந்த முயல் எவ்வளவு அப்பாவியாக இருக்கிறது' என்றெண்ணினான்.

பயங்கரமான அந்தச் சடை நாய், துப்பாக்கியுடன் நிற்கும் உல்லாசமிக்க துரையின் இளிப்பு தீமையே தெரியாத சின்ன முயல் எல்லாமே அப்புஹாமியின் மனதைப் பலவாறாகக் கசக்கின.

தாரகைகள் நிறைந்த வானை மறைத்துக் கொண்டு கருமுகில்கள் தவழ்ந்தன. பிரகாசமான நக்ஷத்ர ஒளி இனித் தெரியாது. மலைக் குன்றுகளும், தேயிலைத் தோட்டங்களும் இருளில் அமிழ்ந்து போயின. மனிதாபிமானமற்ற பலாத்காரத்தால் பயமுறுத்தப்பட்டதைப் போலப் பிரபஞ்சமே அமைதிக்குள் மூழ்கிப் போயிற்று.

தனது காவல் குடிசைக்குள் நுழைந்துகொண்ட அப்புஹாமி கைகளுக்குள் தலையைத் தாங்கிக் கொண்டான்.

நீண்ட நாட்களாக நித்திரையற்றதைப் போல 'டைகர்' தன் மூக்கைத் தரையோடு வைத்தவாறு தூங்கிற்று.

'திருடர்கள் அடுத்த தோட்டத்தில் நுளைந்திருக்கிறார்கள்; ஒரு காவல்காரன் தற்செயலாகக் கூட தூக்க மயக்கம் கூட கொள்ளக் கூடாது' அப்புஹாமி இருண்ட வானத்தைப் பார்த்துக் கொண்டே பெருமூச்செறிந்தான்.

'ஓ! தெய்வமே, இன்று சீக்கிரம் விடியாதா?' ★

க. நவம்

# அல்சேஷன்கள்

## எப்போதும்

## உள்ளே வரலாம்

**பா**றிக்கிழவியாலோ அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. பருவக் குமரியான அவளது பேத்தி வசந்தி, முன்வீட்டுப் போதகரின் மகன் குமாருடன் முற்றத்தில் நின்று 'பாட்மின்டன்' விளையாடும் காட்சி நிர்வாண நடனம் பார்க்கையில் உண்டாகும் ஆகூசையை அவளுக்கு ஏற்படுத்தியது.

வசந்தி அணிந்திருக்கும் 'மினிகவுன்', மறைந்திருக்கும் அவளது அங்கங்களின் மடிப்புக்களையும் வளைவு நெளிவுகளையும் பகிரங்கப்படுத்தும் விதமாக, சுருங்கிவிரிந்து மானபங்கஞ் செய்வதாகத் தோன்றியது, கிழவிக்கு:

அவர்கள் விளையாட ஆரம்பித்த நேரத்திலிருந்து பழஞ் சீலை கிழிவதுபோலப் புறுபுறுத்துக் கொண்டிருந்தாள் அவள்.

'எடி பிள்ளை...... வயந்தி, இஞ்சார்...... நீயொரு குமர்ப் பிள்ளையெல்லே.. ... சீ... சீ...... உதென்ன பவுசுகெட்ட விளையாட்டெடிமேனை? றேட்டோரம் ஒவெண்டு திறந்தாப்போல, கிடக்கிற இந்த முத்தத்திலை நிண்டு நீ விளையாடுறதைப் போறவாற சனமெல்லாம் ஒரு மாதிரியாப் பாக்குதுகளெல்லே. கொஞ்சமெண்டாலும் மரிசாதியா இருக்கிறதில்லையே பிள்ளை'

வெள்ளை வெளேரென்றிருக்கும் புத்தம்புதிய 'ஷட்ல் கோர்க்' வசந்தியினதும் குமாரினதும் பலப்பரீட்ஷைக்குள்ளாக்கப்பட்டு, தொடர்ந்து நீண்ட நேரமாக நிலத்தைத் தொட்டுவிடாமல், அங்குமிங்குமாக காற்றில் பறந்துகொண்டிருக்கிறது.

கழுத்தளவுடன் கத்தரிக்கோலுக்கு இரையான கருங் கூந்தல் அசைந்தாட, மாறி மாறி இரண்டு கைகளாலும் வெகுலாவகமாக 'றைக்கற்'றை சுழற்றி வீசும் நளினம், இவ் விளையாட்டில் வசந்திக்கிருக்கும் திறனையும் தேர்ச்சியையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

'ஆச்சி, உங்களுக்கு வேலை இல்லாட்டி சும்மா பேசாம இருக்கிறதுதானே.. . !' கிழவியைத் திரும்பித்தானும் பார்க்காமல் விளையாடிக் கொண்டு

வசந்தி சொன்ன வார்த்தையில் கோபம் கலந்த வெறுப்புத் தெறித்தது.

'என்ரை பேச்சை இந்தப் பொடியள் கூட தூக்கி எறிஞ்சு கதைக்குதுகள்' என்று மனம் புழுங்கினுள் கிழவி.

உலகெங்கும் எரிபொருள் பற்ருக்குறை. பாறிக்கிழவியின் உள்ளத்தில் மட்டும் இப்பற்ருக் குறை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லைப் போலும்! அவள் அச்சுவேலியிலிருந்து மட்டக்களப்புக்கு வந்துசேர்ந்து பத்து நாள்கூட ஆகவில்லை. அவள் மனதில் தொடர்ந்து ஒரே எரிச்சலும் புகைச்சலும் தான்.

பன்னிரண்டாவது வயதிலிருந்து இடையருது ஐம்பத்தொரு கந்தசட்டி விரதத்தைப் பிடித்துவிட்ட பாறிக்கிழவி ஆனையிறவுப் பாலத்தை முன்னெருபோதும் கடந்ததில்லை. அரிசி, மரக்கறி வியாபாரம் செய்து. சிறுவயதிலேயே தகப்பனை இழந்துவிட்ட இரு பெண் பிள்ளைகளையும் படிக்கவைத்து, உத்தியோக மாப்பிளைமாராகப் பார்த்து திருமணம் செய்து வைத்ததோடு தன் கடமை நிறைவேறிவிட்டது என நிம்மதி அடைந்தாள். ஆசிரிய நியமனம் கிடைத்தவுடன் கணவனுடன் மட்டக்களப்புக்கு மாற்றத்தை எடுத்துக்கொண்டு வந்து, நிரந்தரமாகத் தங்கிவிட்ட மூத்த மகள் மீதான மனக்கசப்புக் காரணமாக, கடந்த இருபது வருடமாக இரண்டாவது மகளுடன் அச்சுவேலியிலேயே தங்கியிருந்தாள். அவளும் இறந்து போகவே கடைசிக் காலத்தில் தன் வைராக்கியத்தைக் கைவிட்டு, மூத்தமகளின் நீண்டநாள் ஆவலைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்ற நினைப்பினுலல்ல நிர்க்கதியான நிலையினுல் முதன் முறையாக ஆனையிறவுப் பாலத்தைக் கடந்து சென்ற வாரந் தான் மட்டக்களப்பில் கடை வைத்திருக்கும் ஒருவரின் உதவியுடன் வந்துசேர்ந்தாள்.

இந்தப் பகுதியின் பெரிய குடும்பங்களெல்லாம் கிறிஸ்த்தவர்களாக இருந்ததால் பாறிக் கிழவியின் மூத்த மகளும் கணவனும் இங்குவந்த மறுவருடமே கிறிஸ்த்து மதத்தைத் தழுவிக் கொண்டார்கள். செல்லச்சந்நிதி முருகனிடமிருந்து வரங்கேட்டுப் பெற்றெடுத்த தெய்வானை தன் பெயரை திரேசம்மா என மாற்றிக்கொண்டதை பாறிக் கிழவி இந்தப் பிறப்பில் மட்டுமல்ல எந்தப் பிறப்பிலும் மன்னிக்க மாட்டாள். மகளிடமிருந்து இத்தனை காலமும் அவள் பிரிந்து வாழ்ந்ததற்கு காரணம் இதுதான்.

சாதாரண இலிகிதராக தபாலகத்தில் கடமையேற்று இலிகிதரகவே இளைப்பாறிய சாதனையை நிலைநாட்டிய சின்னையரும், மனைவி திரேசம்மா ரீச்சரும் சேமித்த பணத்தைக் கொண்டு பிரதான வீதியருகில் மூன்று பரப்பு நிலத்தை விலைக்கு வாங்கி, இப்படியொரு 'நியூ பாஷன்' வீட்டைக் கட்டியெழுப்பியதைக் கண்டு மூக்கில் விரல்வைத்து வியந்து பேசாத சனமில்லை. ஆனுல் இதற்கெனப் பட்ட கடன்களை அடைத்துக் கொள்ள முடியாமல் திரேசம்மாவும் கணவனும் முக்குளிப்பதுபற்றி பாறிக்கிழவி கேள்விப் பட்டிருந்தாள். கணவனும் மனைவியுமாக உழைத்த பணம் எப்படித்தான் கரைந்துபோய் விடுகின்றதோ என்று தன்னைத் தானே கேட்டுக் குழம்பிக்

கறொண்டகிழவிக்கு, அவர்களது வாழ்க்கை முறைகளை நேரில் பார்த்தபோதுதான் உண்மை புலனாகியது.

போலிக் கௌரவத்துக்கு அடிமைப்பட்டுவிட்ட தன் மகளது குடும்பத்தின் போக்கு அவளுக்கு சங்கையீனமாகத் தோன்றுவதில் ஆச்சரியமில்லை.

'ராணீ.. ராணீ... நிம்மிக்கு ஏன் இன்னும் சாப்பாடு வைக்கல்ல?'

கேள்வியைக் கேட்டபடியே விளையாட்டில் லயித்திருந்தாள் வசந்தி.

வீட்டின் வலதுகோடியில் அடர்ந்து வளர்ந்து, கிளைபரப்பி நின்ற வேப்பமர நிழலில் கள்ளிப்பலகையால் செய்யப்பட்ட பெரிய கூட்டுக்குள் சங்கிலியில் கட்டி பூட்டப்பட்டிருந்த நிம்மி, தன் கூரிய நகங்களால் பலகையைப் பிராண்டியபடி உறுமுகின்றது. திரேசம்மா வீட்டு இராக் காலக்காவலாளியான பெட்டை நாய் அது. காட்டுப் பன்றி போல் உருண்டு திரண்டு வளர்ந்திருந்த நிம்மிக்கு — பகல் வேளைகளில் என்னவோ கழுத்தில் விலங்கு போடப்பட்டிருந்தாலும் — வீட்டில் இராச நடப்பு.

நிம்மியின் கூட்டோரம் சாதாரண ஊர் நாயொன்றைக் கண்டால் போதும், கையில் கிடைக்கின்ற பொருளால் வீசி எறிந்து. ஓட ஓடத் துரத்தியடித்து விடுவார்கள். இரு முறையும் ஊர் இனக் குட்டிகளையே ஈன்றெடுத்தபோது, அவற்றைச் சாக்குள் போட்டு, மூடிக்கட்டி இரவோடிரவாக, சந்தையில் கொண்டுபோய் எறிந்து நிம்மியின் கன்னி மாசைத் துடைத்து வருவதிலுள்ள கஷ்டம் சின்னையருக்கல்லவோ தெரியும்!

கோப்பை ஒன்றில் சோறுடன் மாட்டிறைச்சியும் எலும்புகளும் இட்டு நிரப்பிக்கொண்டு வந்து நிம்மியின் முன்னால் வைத்துவிட்டு, முற்றத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் வசந்தியை வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டு நின்றாள் ராணி.

ராணி, வசந்தியின் வயதை ஒத்தவள்தான். வசந்தியின் நிறத்தைப்போலல்லாமல் நல்ல சிவப்பி. கழுவித் துடைத்தெடுத்தால், வசந்தி எம்மாத்திரம்? என்றுகூட அவள் அடிக்கடி தன் அழகைப்பற்றி எண்ணிப் பெருமிதமடைவாள். அடுத்த கணம், 'நான் ஒரு வேலைக்காரி' என்பதை நினைவுபடுத்திக் கொண்டு, தன்விதியை நொந்து கொள்வாள்.

'அந்நிய வாலிபனொருவனுடன் நின்று விளையாடுகிறேனே' என்ற எண்ணம் சிறிதேனும் இல்லாதவளாய் தொங்கிக் குதித்து விளையாடுகிறாள், வசந்தி. ராணிக்கோ அவள் கோலத்தைப் பார்க்க கூச்சமாயிருக்கிறது.

'இந்த வசந்தியக்கா எப்பவும் இப்பிடித்தான். கொஞ்சமும் வெக்கமெண்டது கிடையாது' கோப்பையை எடுத்துக் கொண்டு பின்புறமாக குசினியை நோக்கி ஓடுகிறாள் ராணி.

விளையாட்டு ஆரம்பித்ததற்கிடையில் குறைந்தது ஆறு தடவையாவது இந்த்றோட்டால் மேலும் கீழுமாக சைக்கிளில் சுழன்றுகொண்டிருந்த மைனர்க் கூட்டமொன்று 'கூய்' போட்டபடி நக்கல் சிரிப்புடன் நகர்கிறது.

'இந்த ஆடுமாலைக்கு எப்பனும் சூடுசுறணை எண்டது இல்லைப்போவக் கிடக்கு' என்று மனதுக்குள் கறுவிக்கொண்ட பாறிக்கிழவிக்கு, கோபம் பற்றிக்கொண்டு வந்தது.

'எடியே...... வயந்தி, இஞ்சாலை வாடி; றோட்டாலை போற வாற காவாலி கடப்பிளியளெல்லாம் பாத்துச் சிரிச்சுக்கொண்டு போகுதுகள். நீயொரு குமரி, சும்மா நிண்டு குதியன் குத்துறாய். ஆம்பிளைப் பொடியள் நடுறோட்டிலை நிண்டு விளையாடினலும் ஆர் கேக்கிறது? நீ கொஞ்சம் அமரிக்கையாய் வந்திரன்ரி'

'ஏய்......... பேய்க்கிழவி, பேசாமலிருக்க முடியாட்டில் எழும்பிப்போ. உன்னை யார் இங்கே வரச்சொன்னது? பின்னலை மாமரத்துக்குக் கீழே போயிரு...... போ.....'

அரிகண்டம் பொறுக்க முடியாமல் போகவே வசந்தி, கிழவிமேல் சீறிவிழுகிருள்.

'பனங்காட்டுக்குள்ளே இருந்துவந்த உனக்கு என்னதான் தெரியும்........?'

பாறிக்கிழவி பத்திரகாளியானுள்.

'என்னடி ஆட்டக்காரி சொன்னுய்? ஆரைப்பாத்தடி பனங்காட்டாள் எண்டு சொன்னுய்? துடைதெரியச் சட்டை போட்டுக்கொண்டு, காலைக் கையைத் தூக்கி ஆடுற நாடகக்காரி...... என்னைப்பார்ந்து, என்ன தெரியும் எண்டு நீ கேக்கவோடி! எடியே ......நில்லடி இஞ்சை......... எடுவாடுகாறப் பொம்பிளை.........'

போருக்குப் புறப்பட்ட பேட்டுக் கோழிபோலச் சிலிர்த்துக்கொண்டு, குந்தியிருந்த வாசற்படியைவிட்டு எழுந்தாள். வளைந்த முதுகைக் கொஞ்சம் நிமிர்த்தி, குலைந்துபோன தலைமயிரை அள்ளிக்கட்டிக்கொண்டு கையிலிருந்த ஊன்றுகோலை நீட்டியபடி முற்றத்தில் இறங்கிவிட்டாள்.

'றைக்கற்'றை தூக்கிப் பிடித்தபடி கிழவியை எதிர்கொண்டு நின்ருள் வசந்தி.

ஒரு மகாயுத்தமே மூண்டுவிடக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்பட்டன.

'அம்மா... இதென்னம்மா, றோட்டுக்கரையிலை நிண்டு பிள்ளையளோடை மரியாதை இல்லாமல் சண்டைபிடிக்கிறதே?'

மாலை நேரப் பாடசாலையிலிருந்து வரும் வழியில் பல நண்பர்களின் வீடுகளை 'விஸிற்' பண்ணி முடித்துக்கொண்டு வந்த திரேசம்மா ரீச்சர் நெருப்பில் கால்வைத்தவள் போலப் பாய்ந்தோடிவந்து நடுவில் நின்ருள்.

'ஆர்......... நீயெல்லவோ றோட்டுக்கரையில் மரிசாதியில்லாத பிள்ளை வளக்கிருய்? உன்ரை வளப்புத்தான் என்னைக் கேளாத கேள்வி கேக்க வைச்சுப்போட்டுது.........'

பொரிந்து தள்ளினுள், பாறிக்கிழவி.

அலுப்புக் களைப்பென்று வந்த திரேசம்மாவுக்கு வழக்கு விசாரணை வேறு!

நடந்த சம்பவங்களைக் கேட்டறிந்த திரேசம்மா தன் தாயைத்தான் சினந்து கொண்டாள். வெளியே நின்று சண்டையை வளர்க்காமல் தாயைச் சமாதானப்படுத்தி ஹாலுக்குள்

கூட்டிச்சென்று, உட்கார வைத்து, சமாதானமாக்க முயன்றாள், அவள்.

நாற்பது வயதைத் தாண்டி விட்ட திரேசம்மா ரீச்சரின் கூந்தலிலுள்ள வெள்ளிக் கோடுகளை மறைக்க முயலும் கோபுரக் கொண்டையும், குதி உயர்ந்த செருப்பும், உடலோடு ஒட்டிய படி உடுத்தியிருந்த 'மினி சாறி' யும் அவளைக் குமரியாகக் காட்டுகின்றன. இந்தக் கோலத்தில் தன்மகளைக் காணச் சகிக்காமலோ என்னவோ முகத்தைச் சுழித்துத் திருப்பியபடி படபடத்துக் கொண்டிருந்தாள் கிழவி.

வசந்தியும் குமாரும் மீண்டும் விளையாட ஆரம்பித்து விட்டார்கள்.

'அம்மா......... நீ இங்கை வந்து பத்துநாளுமாகவில்லை வீட்டில் இருக்கிற எல்லாரையும் பகைச்சுக் கொண்டாய். இந்தக்காலத்துப் பிள்ளையள் நீ நினைக்கிறமாதிரி நடக்கமாட்டாதுகள்!'

'அப்ப...... ஊருலகத்திலேயுள்ள காவாலிப் பொடியளின்ரை சேட்டைப் பொருளாகத்தான் குமர்ப்பிள்ளையளை வளக்கவேணும் எண்டு சொல்லுறியோ.........?'

'என்ரை பிள்ளையை ஒரு தன் இழிவாக் கதைக்க முடியுமே? சும்மா றோட்டாலை போறவன்கள் சேட்டைவிட்டுட்டு தப்பிவிடேலாது. செருப்பாலை ஒருமுறை நல்லா குடுத்துமிருக்கிறாள். கண்டவன் கடையவனோடை பழகவிடாமல் அவளைக் கட்டுப்பாடாக, மரியாதையாகத்தான் வளர்த்து வாறன். நீயம்மா, உன்ரை வாயைச் சரியா வைச்சிருந்தால் எல்லாம் சரியாக இருக்கும்'

பாவம், சேட்டைபண்ணும் எண்ணமின்றி உண்மையாகவே நேரம் என்ன என்று கேட்ட தபால் பியோன் ஒருவனுக்கு செருப்பால் அறைந்த திமிர்க்காரி, வசந்தி. அந்தச் சம்பவத்தைச் சற்றுத் திரித்துக் கூறி தன் மகளைப்பற்றிப் பெருமைப் பட்டுக் கொள்வதில் திரேசம்மா ரீச்சருக்கு எப்போதும் ஒரு திருப்தி. இதைச் சொல்ல வந்தவள் தன் வாயைப்பறிக் கூறியது கிழவிக்குப் பிடிக்கவில்லை.

'ஏன் என்ரை வாய்க்கென்னவாம்? உள்ளதைச் சொன்னால் தாய்க்கும் பிள்ளைக்கும் உடம்பெல்லாம் அரிக்குது போலையிருக்கு! நீயெண்டால் என்ன திறமானவவே? இனசனத்தை வெறுத்து, சாதிசமயத்தைமாறி இந்த ஊரவன்களிட்டை பெரியாள் பத்திறதுக்கு இஞ்சை வந்து குடியேறின மாசாலக் காறியடி நீ'

'உனக்கு என்னையும் என்ரை பிள்ளையளையும் பாக்கப் பொறுமையாக் கிடக்கெண்டு சொல்லம்மா.........'

'ஏனடி என்ரை பிள்ளையையும், பேரப் பிள்ளையளையும் பார்த்து நான் பொறாமைப்படவேணுமடி? எப்பவும் நீ நல்லாயிருந்தால் எனக்குத்தான்ரி புளுகம். நீ என்னடா எண்டால் பெரிய வெள்ளைக்காறத் துரை வீட்டுச் சீவியம் நடத்தவேணும் எண்டு உள்ளதையும் வித்துச் சுட்டு பூசிமெழுகித் திரியிறாய். கடன்பட்டுச் சிலவழிச்சுத்தான் சீமான் வாழ்க்கை வாழுறாய்; பொடி பெட்டையளை கண்மண் தெரியாமல் வளக்கிறாய்! நாங்கள் பிறந்து வளர்ந்த நிலையளை

மறந்து— அதுகளை மூடிமறைச்சு ஏன் வாழவேணும்? ஏன் எங்க ளுக்கி வெறும் வெளிப்பவுசு? விரலுக்குத் தக்க வீக்கம் வேண்டாமே?'

'சும்மா விசர்க்கதை போசாதை. நீ கிணத்துத் தவளை போல இருந்த உனக்கு எல்லாம் புதினமாகத்தான் இருக்கும். ஆனால் ஒண்டு சொல்லுறன், இங்கை இருக்கிறதெண்டால் பிள்ளையளை இந்தமாதிரிக் கரைச்சல்படுத்த வேண்டாம். இதுதானே அறுபது வயதுவந்தால் வீட்டுக்கு நாய் வேண்டாம் எண்டு சொல்லுறது'

'ஏனடி...... உன்ரை தீனைத் திண்டிட்டன் எண்டதுக்காக நாயாக்கிப் போட்டியோடி. நான் கைகாலடிச்சு உழைச்சு என்ரைவாயை வயித்தைக் கழுவக்கூடிய வல்லமை கெட்டுப் போச்செண்டுதானேடி, என்னைப் பாத்து நாயெண்டனியெடி! உன்ரை சித்துவக்கெட்ட சீவியத்திலை என்னை நாயாக்கிப் போட்டியோடி. எடியே......... என்ரை குடிகோத்திரத்திலை உன்னைப்போல ரோச நரம் புறுந்தவளை, பூசிமினுக்கிறவளை பெத்துப் போட்டனெண்டுதான் அழுகிறன்'

பாறிக் கிழவியின் நாடிக் கலன்கள் 'விண் விண்' என்று துடிக்கின்றன. பற்களை இழந்த கீழ்த்தாடை வெப்பிசாரம் பொறுக்கமுடியாமல் அடித்துக் கொள்கிறது. உணர்ச்சிக் கொந்தளிப்பினால் நரம்புநார்கள் விம்மிப் புடைக்கவே கைகள் நடுங்குகின்றன.

'இங்கை .. ஆரோ 'விஸிற்றேஸ்' வருகினம் போலக் கிடக்கு. உன்ரை குணத்தைக் காட்டி, எங்கட மானத்தை வாங்கிவிடாமல் வீட்டுக்குப் பின்னாலை போயிரு...... போ... எழும்பு ........'

தன் சேலையைச் சரிசெய்தபடி தாயைப் பார்த்துச் சொன்னாள் திரேசம்மா.

பாறிக்கிழவியின் இதயத்தில் அந்த வார்த்தைகள் ஊசி கொண்டு குத்தியது போன்ற வேதனை மிக்க உணர்ச்சியைக் கொடுத்தன. தன் மகளை அண்ணாந்து பார்க்கிறாள். குருதி உறைந்துவிட்டது போன்ற காய்வு அவள் முகத்தில்! அவளது விழிக் கோளங்கள் பட்டும் நனைந்திருந்தன.

குமார் பின்தொடர, வசந்தியும் மஜிஸ்த்திறேற்றின் மூத்த மகனும் சிரித்துப் பேசிக் கொண்டு உள்ளே வருகிறார்கள். 'றெக்கிறியேஷன்' கிளப் வசந்திக்குத் தேடிக் கொடுத்த நட்புக்களில் இதுவும் ஒன்று.

'குட் ஈவினிங் அன்ரி......'

'குட் ஈவினிங், கம், கம்... வந்து உக்காருங்கோ.........' வாயெல்லால் பல்லாகச் சிரித்தபடி வரவேற்று அவர்களுடன் அமர்ந்து கொண்டாள், திரேசம்மா. வாலிபர் இருவருடன் தன் பேத்தி அருகருகாக நடுவில் அமர்ந்திருந்து கலகலப்பாக பேசிக்கொண்டிருப்பதை பாறிக் கிழவியால் இரசிக்க முடியவில்லை. ஊன்றுகோலின் உதவியுடன் எடுத்தடிவைத்து நடந்து பின்புறமாக உள்ள மாமர நிழலுக்கு வந்தாள்.

இங்கு வந்தநாள் தொட்டு தனக்கு நேர்ந்த அவமானங்களை அசைபோட்டுக் கொண்டிருந்த பாறிக்கிழவியின் நாசித்துவாரங்கள் அடைத்துக்கொண்டன. அடிக்கடி தன் சேலைத் தலைப்

## சுயநலம்

மூக்கினுள் நெளியும்
புழுக்களை அகற்ற
காக்கையின் உதவியை
நாடிய மாடு
உணவினை உண்ணும்
வேளையில் வந்த
காக்கையை மூசித்
துரத்தியது.!

'சிவம்'

---

பால் மூக்கைச் சீறித்துடைக்கிருள்.

குசினியின் வாசலோரம் நின்று பார்த்துக் கொண்டிருந்த ராணிக்கு கிழவி மீது இனந்தெரியாத இரக்கம் தோன்றியிருக்க வேண்டும். கிழவிக்கு முன்னுல் வந்து நின்ருள். ஏதையாவது பேசவேண்டு போலத் தோன்றியது அவளுக்கு. ஆனல் பாறிக் கிழவியோ ஆகாயத்தைக் கண்ணிமைக்காமல் வெறித்துப் பார்த்தபடி சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

அநாதரவாகத் ஏசித் துரத்தப்பட்ட கிழவியுடன் தானும் அழவேண்டும் போலிருந்தது, ராணிக்கு.

இருக்காதா என்ன? எப்படியென்ருலும் அவள் வேலைக்காரியல்லவா!

'ராணீ... ராணீ...' என்று கூப்பிட்டபடி, பின்கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள் திரேசம்மா.

பாறிக்கிழவியின் மௌனமும் கலைந்தது.

'அங்கை என்ன வாய்பாத்துக்கொண்டு நிக்கிருய்? நிம்மியின்ரை கூட்டுக்குள்ளை நாயள் வந்து நிக்குதுகள் போலையிருக்கு சத்தங்கேக்குது. அடிச்சுத் துரத்திவிடு...... ஒடு......'

'இல்லம்மா, அது இன்சுபெற்றர் வீட்டு நாய்தான் கூட்டுக்கை நிம்மியோடை நிக்குது. கிட்டப்போகப் பயமாயிருக்கம்மா .......'

அடுத்த ரேட்டில் வசிக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவருக்குச் சொந்தமான கடுவன் நாய் அது. குதிரைமாதிரி, நீண்டு வளர்ந்த அந்த நாயைப் பார்த்தாலே நடுக்கம் பிடிக்கும்.

'ஆ...... அந்த 'அல்சேஷன்' நாயெண்டால் அது நிக்கட்டும். அதைத் துரத்தாதை. இறைச்சி எலும்பு கிடந்தால் கூட்டுக்குள்ளை கொண்டுபோய்ப் போடு' சொல்லிக்கொண்டு திரேசம்மா ரீச்சர் உள்ளே போய்விட்டாள்.

கட்டளையை நிறைவேற்ற எழுந்து ஓடுகிருள் ராணி.

பாறிக்கிழவிக்கு அடிவயிற்றிலிருந்து அருவருத்துக் கொண்டு வந்தது.

'சீ... கேடுகெட்ட வளப்பு வளக்கிருள்'

'தூ...' காறித் துப்புகிருள் கிழவி.

'ஊரிலை விட்டுட்டோடி வந்த என்ரை தாயைத்தின்னிப் பேரப்பிள்ளையளுக்கு, பாரமாக எண்டாலும் அதுகளோடையே போய்க் கிடப்பம்' என்று எண்ணியவளாய், வரும்போது கையில் கொண்டுவந்த பூச்சுக் கழன்ற 'றங்' குப் பெட்டியைத் தேடி நடக்கிருள் பாறிக்கிழவி;

இதைக் கத்தரித்து தங்கள் நண்பர்களுக்கு அனுப்புக)

# மல்லிகை

நிர்வாகி, 'மல்லிகை'
234ஏ, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஐயா,

'மல்லிகை'யின் சந்தாதாரராக என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இத்துடன் ஓராண்டுச் சந்தாவாக எட்டு ரூபா ஐம்பது சதம் அனுப்புகிறேன்.

பெயர்: ____________________

முகவரி: ____________________

____________________

திகதி ____________ கையொப்பம். ____________

---

இந்த நாட்டு இலக்கிய வளர்ச்சியை ஆரோக்கியமான பாதையில் வளர்க்க உங்களுக்குச் சம்மதமா? அப்படியானல் உங்களது நேசக்கரத்தை எங்களுக்கு நீட்டுங்கள். உங்களது பூர்ண ஒத்துழைப்பு இருந்தால். இந்த நாட்டின் இலக்கியச் சரித்திரத்தை அப்படியே மாற்றியமைத்துக் காட்டும் வல்லமை மல்லிகைக்கு உண்டு.




ஈழத்து இலக்கிய உலகை மகோன்னதமான நம்பிக்கையுடனும் புதிய சம்பிரதத்துடனும் தீர்க்கமான எதிர்காலச் சிந்தனையுடனும் இடையரு உழைப்புடனும் நோக்குகின்றோம்.

இதில் பங்கு கொள்ளச் சம்மதமா?

புதிய யுகத்தைப் படைக்கும் இந்தச் சத்திய வேள்வியில் நம்முடன் இணைய விரும்பும் சகலரையும் நேச உணர்வுடன் வரவேற்கக் காத்திருக்கின்றோம்.

# செனோர் டானியல் இவாஸெட்டாவுக்கு

## அவிழ்த்தல்

**சிலியில் பாசிஸம்**

**கலைஞர்களின் மனச்சாட்சிக்கு**

**அறைகூவல்**

தூக்குக் கயிறு பிடிக்கும் கொலைகாரனுக்கு பகிரங்கக் கடிதம் எழுதும் சம்பிரதாயம் இல்லை.

ஒஸ்வியன்ஸிம் முகாமைக் காரனுக்கு புத்தி புகட்ட முனைவது யோக்கியமான காரியமல்ல.

மஜ்தானெக் 'கேஸ்' கொலை கூடத்தின் குழாய்களைத் திறந்து விட்டவனின் மனச்சாட்சிக்கு மனுச்செய்வது யோக்கியமான காரியமல்ல.

தகஷாவூ அக்கினிக் கூடத்தில் பச்சிளங் குழந்தைகளைப் பொசுக்கி மடிய வைத்தவளிடம் கருணை காட்டும்படி கேட்பது யோக்கியமான காரியமல்ல.

செனோர் டானியல் இவாஸெட்டாவுக்குக் கடிதம் வரையும் நோக்கம் எமக்குக் கிடையாது.

ஹெல்ஸிங்கியிலிருந்து வரும் இந்த **தஸ்தாவேஜு** — நிச்சயம் ஆசாமிக்குக் கிடைக்கும் என்று நம்புகிறோம் — அதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளட்டும்.

செனோர் டானியல் இவாஸெட்டா — ஜனாதிபதி ஸல்வடோர் அலன்ஜே அரசாங்கத்தின் கீழ் வங்கி மனேஜராகக் கடமையாற்றிய மானுவேல் மதாமோ ரேஸாவின் 25 வயதான மனைவி அன்னா அலிஷியா ஃபுலோரேஸை நீர் குறுக்கு விசாரணை செய்த அழகையும், சித்திரவதை செய்த மகாத்மியத்தையும் பற்றி நமக்கு நன்றாகத் தெரியும் என்பதை உமக்குச் சொல்லிவைக்க விரும்புகிறோம்.

அன்னாவுடைய புருஷனின் படிப்பறையில் வைத்து ஆரம்பத்தில் அன்னாவைக் குறுக்கு விசாரணை செய்தீர். புருஷனைக் காட்டித் தரும்படி கோரினீர். அன்னா பேச மறுத்துவிட்டாள். பின்னர் அன்னாவை ஸனுர்த்தூ போலிஸ் ஸ்டேஷனுக்கு கூட்டிச் சென்றீர். அங்கே ராணுவ வீரர்களின் சந்நிதானத்தில் மீண்டும் விசாரணை செய்தீர். சோல்ஜர்களைக் கண்டு பீதியுற்று வாய்திறப்பாள் அன்னா என்று நம்பினீரா? அவளோ வாய் திறக்கவில்லை. ஆத்திரமுற்ற நீர் அதிசயமான விளையாட்டொன்றை அங்குரார்ப்பணம் செய்தீர். 'உன்னுடைய புருஷன் எங்கே?' என்ற கேள்வியை மறுபடியும் கேட்டீர். அன்னாவோ வாய்மூடி மௌனியாக நின்றாள். ஒரு சில விநாடிகள் அவகாசம் கொடுத்துவிட்டு கலியுக துரியோதனனாக திடீர் அவதாரமெடுத்து 'வஸ்திராபஹரண கைங்கரியத்

தில்' குதித்தீர். உம்முடைய அடக்கத்தின் மகிமை பிரமாதம்! படிப்படியாக சந்தடியின்றி துகில் களைந்தீர். துரியோதனன் 'லீலைக்கு' சற்று ஓய்வு கொடுத்து விட்டு, அன்னாவின் தலையிலும், நெஞ்சிலும் உம்முடை முரட்டுக் கையை வைத்தீர்! அன்னாவின் கூந்தலை உம்முடைய திருக்கரத்தால் வாரி வரித்து முகத்தைப் பதம்பார்த்தீர். ஜனநாயக ரீதியாக சிலி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு விஸ்வாசப்பிரமாணம் செய்து விட்டு பின்னர் ஏகாதிபத்திய வாதிகளிடம் அடைக்கலம் புகுந்து அதே விஸ்வாசப் பிரமாணத்துக்கு துரோகம் செய்து புரட்சி செய்த சிலி ராணுவத்தின் ஆண்மை மிக்க பிரதிநிதியல்லவா நீர்!

அன்னாவோ பேசா மடந்தையாக நின்றாள். இல்லை — ஒரு தடவை மாத்திரம் வாய் திறந்தாள். 'சில மாதங்களுக்கு முன்னர் கண் ஆபரேஷன் செய்யப்பட்டது; தலையில் அடிக்காதே' என்றான்.

தப்புச் செய்து விட்டாள் அன்னா! இதைக் கேட்டதும் குறி தவறாது தலையில் தானே திருப்பித் திருப்பி கைவைத்தீர். செஞர் டானியல் இவா ஸெட்டா?

திடு திப்பென்று நீரும், உம்முடைய ஜவான்களும் அறையை விட்டு வெளியேறினீர்கள். நீர் ஆண் மகனல்லவா! உம்மிடமும் ஆண்மை என்ற சரக்கொன்று இருக்கும் என்று நினைத்த அன்னா சித்திரவதை முடிந்து விட்டதாக நினைத்தாள். அவள் உம்மை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. பத்து நிமிஷம் ஆசுவாசப்படுத்திக்கொண்டு வேறொரு அறைக்கு மார்புக்கச்சையும், சப்பாத்தும்' இடுப்பில் சிர்வாலும் போக வேறு ஆடையெதுவுமே அன்னாவின் பெண்மைக்கு 'கவசமாக இன்றி அவளை இழுத்துச் சென்றீர்.

உமக்குப் பத்தினியென்றும், புத்திரியென்றும் யாரும் கிடையாதா?

அங்கே உம்மைப் போலவே தலை நரைத்த ஐந்து ராணுவ ஆபிஸர்கள் புடை சூழ நீர் குறுக்கு விசாரணையை மீண்டும் ஆரம்பித்தீர். இதை சம்பிரதாய பூர்வமாக நடத்தியிருக்க வேண்டும்? எஞ்சியிருந்த மார்புக்கச்சையை சிர்வாலையும் கழற்றியெறிந்துவிட்டு பச்சை நிர்வாணமாக மயிர் நரைத்த, அருவருப்பான மிருகங்களான உம்மைச் சுற்றி ஓடவும் நடனமாடவும் அல்லவா அவளைப் பலவந்தப் படுத்தினீர்கள்! அன்னாவுக்கு டான்ஸ் வராது. பிறகு அவளைத் தரையில் படுக்கச் செய்தீர்கள். அதன் பின்னர் மேஜையில் அன்னாவைப் படுக்கப் போட்டீர்கள். நீர்தானே முதலிற் யூனிபோர்மைக் கழற்றினீர்.

வலிவிழந்த நிலைமையிலும் தன் கற்பை பாதுகாத்துக் கொள்ள சக்தி யாவற்றையும் திரட்டி அன்னா மேஜையிலிருந்து குதித்து அறையின் மூலையொன்றுக்கு ஓடினாளே. அவள் அங்கு நின்று நிர்ப்பயமாக உம்மைத் திட்டித் தொலைத்தாளல்லவா? உம்முடைய ஆண்மையைப்பற்றி அன்னா என்ன நினைத்திருந்தாள் என்று பச்சையாக அந்த மூலையிலிருந்து தீர்ப்பளித்தாளல்லவா?

நீரும் உம்முடைய சகாக்களும் நிர்க்கதியான அவளை

## இரண்டு போதாது

எம். எம். நஜ்முல் ஹுசைன்

சாம்பார் சட்னியுடன்
தோசை நுழைந்த பின்பே,
பர்ஸினிலே
பணமில்லை
என்ற சேதி நினைவு வர
''ஐயையோ,
ஒரு சதமும் கையிலில்லை
என்றேன் நண்பனிடம்
நண்பன்
நகைத்தான்;
சிந்தித்தான் பின்
சர்வரை அழைத்தான்
கொண்டு வா இட்லி என
பணித்தான்
நான் விழித்தேன்.
உண்பதற்கு அவன்
இடியப்பம்
இருக்கின்ற சுவைபண்டம்
அத்தனைக்கும்
'ஓடர்' கொடுத்தான்.....
அனைத்தையுமே க்க.
சாப்பிட்டோம் வயிறு புடை
ஐயமுடன் நான்
''உன் கையில் ட்டேன்.
பணமுண்டோ?'' எனக் கே
''இல்லை,
பணமில்லை என்று சொன்னால்
பதம் பார்ப்பார் உடம்பை,
இரண்டு தோசை போதாது
அதனை வாங்க,
அதனால்தான்
அத்தனையும்
வாங்கியுண்டேன் — ள''
அடிகளைத் தாங்கிக்கொள்
என்றான் நண்பன். டே
கைகளைத்துடைத்துக்கொண்
வாறு.
'டீ'க்கு 'ஓடர்' கொடுத்த

உம்முடைய முரட்டுக் கரங்களால் போட்டி போட்டுக் கொண்டு மூச்சுத் தட்டும்வரை மொத்தினீர்கள்!

அவளைப் பிடித்து மேஜையில் போட்டு நீங்கள் மூவரும் அன்னாவை......... மிருக ஜன்மங்களே அனாதரவானவொருத்தியைக் கற்பழித்த பழி ஜன்மம் முழுதும் உம்மை விடாது தொடரும். மயங்கிவிட்ட அன்னா பின்னர் என்ன நடந்தது என்பதை அறியமாட்டாள். ஆனால், ஜாக்கிரதை—உம் ஐவரையும் அன்னா ஞாபகத்தில் வைத்துத் தானிருக்கிறாள். கூறி வைக்க விரும்புகிறேன்.

அடுத்த நாள் காலையில் தான் அவளுக்கு மயக்கம் தெளிந்தது. அதே அறையில் தான்கிடப்பதை அவள் தெரிந்து கொண்டாள். தாக சாந்திக்கு தண்ணீர் கூட அவளுக்குக் கொடுக்கப்படவில்லை. அவளுடைய புலம்பலை யாரும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. கதவு வரை நடந்து கதவைத் தட்டக் கூட சக்தியற்று அவள் அவதியுற்றாள்.

சற்று நேரம் கழிந்ததும் உம்முடைய — செனோர் டானியல் இவாஸெட்டா திருவுருவம் அறைக்குள் பிரவேசம் செய்து, எழுந்திருக்கும்படி அவளுக்குக் கட்டளை பிறப்பித்தது. அவள் எழுந்து நிற்க முயன்றாள். முயன்று கீழே துவண்டு வீழ்ந்தாள். அவளிடம் சக்தியிருக்கவில்லையே! எழுந்து நிற்கும்படி மீண்டும் கட்டளையிட்டு பல பேர்களின் போட்டோக்களைக் காட்டி 'இவனைத் தெரியுமா? இவன் உன் வீட்டுக்கு வந்தானா? இவன் உன் புருஷனின் நண்பனா, என்று கேள்விகளை அடுக்கினீர்;

உம்முடைய கேள்விகளுக்கு 'இல்லே' என்று அன்னு பதில ளிக்கவும் அவளே தலேயிலும் கண்ணிலும் மறுபடியும் அடித் தீர். உம்முடைய ஞாபகசக்தி பிரமாதம்! ஆபரேஷன் செய்யப் பட்ட தலேயையும் கண்ணேயும் அல்லவா தாக்கினீர். அன்னு மீது குற்றஞ் சுமத்தக்கூடிய வாக்குமூலத்தைப் பெற முடி யாது போய்விடவே வெளியேறி விட்டு பழைய கூட்டாளிகளுடன் திரும்பி வந்தீர்.

மறுபடியும் அடி! மறுபடி யும்.........

உம்மைக் காமவெறி பிடித்த நாய் என்று வர்ணிக்க மாட் டோம். அது நாய் இனத்துக்கு அவமானம்!

அன்னு மறுபடியும் பிரக்ஞை யற்றுப் போனுள்.

செஞோர் டானியல் இவா ஸெட்டா அன்னுவுடைய திட சித்தம் உம்முடைய உறுதியை விட பலமானது!

அடுத்த நாள் அவளே போலிஸ் ஸ்டேஷனிலிருந்து துரத்தினீர். அரை நிர்வாண மாக, ரத்தக் கோலமாக காரொன்றில் போட்டு சொற்ப தூரத்துக்கப்பால் கொண்டு போடும்படி கட்டளேயிட்டீர். போலிஸ் ஸ்டேஷனுக்கு முன் ஞல் அவள் கிடக்கக் கூடா தென்பது உமது சித்தம் என் பதை நாம் அறிவோம்.

அன்னுவுக்கு அறிமுகமேயில் லாத நல்லாத்மாக்கள் சிலர் அவளே வீட்டில் கொண்டுவந்து சேர்த்தனர்.

எமக்குத் தெரிந்தது அவ் வளவுதான் — செஞோர் டானி யல் இவாஸெட்டா.

இரண்டு நாளாக நடை பெற்ற இந்த சித்திரவதை குறித்து உமக்கு நாம் ஏன் அறி வித்தல் கொடுக்கிறேம் என்ப தையிட்டு நீர் ஆச்சரியப்படல் கூடும்.

நீர் மாதக் கணக்கில் அமுல் படுத்தும் சித்திரவதை 'தர்பா ரில்' இந்த இரண்டு தினங்களும் இரண்டே இரண்டு அற்ப துளி கள். அது எங்களுக்குத் தெரி யும். சித்திரவதையால் பொழு தளக்கும் உமக்கு இந்த அற்ப சம்பவம் ஞாபகமில்லாமல் கூட இருக்கலாம்!

ஆனல் இச்சம்பவம் எமக்கு ஞாபகம் — மறந்துவிட மாட் டோம் — செஞோர் டானியல் இவாஸெட்டா. ஒரு நாளும் மறந்துவிட மாட்டோமொன்று உறுதிப்படுத்தி இவ்வறிவித்தலேத் தருகிறேம்.

ஹெல்ஸின்கியில் நடைபெ றும் சர்வதேச விசாரணே கமிஷனின் தஸ்தாவேஜுகளில் உம்முடைய சாகஸங்கள் பதி வாகி விட்டன. அது நீரும் உம்மைச் சேர்ந்த பாசிஸ்டுகளும் சிலியில் நடத்தும் மிருகச் செயல் களே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரணே செய்கிறது என்று சொல்லிவைத்தால் பீதி யடைந்து விடாதீர்கள்.

ஸந்தியாகோவில், உம்மு டைய வாசஸ்தலத்தில் ஹாய் யாக வீற்றிருக்கும் நீர் ஹெல் ஸின்கி எங்கோ ஐரோப்பாவின் கோடியொன்றில், வெகு வெகு தொலேவில் கிடக்கிறது; ஆபத்து ஏதும் வராது என்று வாளாவி ருந்துவிடாதீர்!

கை விலங்கும், கால் விலங் கும் மாட்டி நீதியின் சந்நிதா னத்தில் உம்மையும், உமது எஜ மானர்களேயும் பிரசன்னமாகும்

படி கட்டளையிடும்படியான அதிகாரம் இன்னும் ஹெல்ஸின்கி கமிஷனுக்குக் கிடையான. வாஸ்தவம். சர்வதேச கமிஷன் அதிகார பலம் பெற்று நிறுவப்பட்ட நீதிமன்றமில்லைத்தான். ஆனால், மனித குலத்தின் தார்மீக தர்மத்தையும் மனச்சாட்சியையும் பக்கபலமாக வைத்து இவ்வறிவித்தலை உமக்கு அனுப்பி வைக்கின்றோம்.

காலம் வரத்தான் செய்யும்'

இல்லை. நாம் உம்மை பயமுறுத்தவில்லை — செஞோர் — பயமுறுத்தவில்லை. இங்கு சர்வதேச விசாரணைக் கமிஷன் ஏடுகளில் உம்முடைய நாமம் பதிவாகி விட்டது. இன்றோ நாளையோ தண்டனை விதிக்கப்படும். தண்டனையிலிருந்து உம்மால் தப்பித்துக் கொள்ள முடியாது. இதை மாத்திரமே நாம் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

உம்முடைய மிருகத்தனமான குற்றங்கள் உம்முடைய நண்பர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஏற்கனவே தெரியாதிருக்கலாம். உம்முடைய வீட்டு விலாசம் உமக்குத் தெரியாது. ஆகவே அறிவித்தலை ஸஞர்த்து போலிஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பி வைக்கிறோம், அதே சமயத்தில் சிலியில் கேட்கக்கூடிய சுதந்திர ரேடியோ நிலையங்களுக்கும் உம்முடைய விலாசத்தை ஒப்படைக்கிறோம். செய்தியை வாசிப்பவர்களோ அல்லது கேட்பவர்களோ அதை உமக்கு 'ரிப்போர்ட்' செய்யும் படியும் கேட்டிருக்கிறோம்.

ஹெல்ஸின்கியிலிருந்து வரும் இக்கடிதத்தை ஏற்றுக்கொள்ள நீர் மறுக்கலாம்; ரேடியோப் பெட்டியை மூடிவிடலாம். அது மணலில் தலையைப் புதைத்துக் கொள்ளும் தீக்கோழியின் மடமைக்கு ஒத்த செயலாகும். அண்டை வாசிகள் நண்பர்கள்-சக கொலைகாரர்கள் சித்திரவதைக்குள்ளானவர்கள்—செஞோர் டானியல் இவர்ஸெட்டாவின் பெயர் குற்றவாளிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது என்று உமக்கு நிச்சயம் தெரிவிப்பார்கள்.

உம்முடைய குற்றங்களில் பங்குதாரர்களாகவுள்ள அந்த ஐந்து கூட்டாளிகளின் பெயர் விபரம் எம்மிடமில்லை. எப்படி சிலி வளநாட்டில் ஜனநாயக ஆட்சியை கவிழ்த்து, சட்டபூர்வமாக ஜனதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஸல்வடோர் அலன்ஜேயை படுகொலை செய்து இன்று கொலை, கற்பழிப்பு, வன்முறை, சித்திரவதை மூலம் அந்நாட்டை பிணக்காடாக்கும் படுபாதகர்கள் அனைவரினதும் பெயர்ப் பட்டியல் இறுதியில் தயாராகிவிடுமோ, அதேபோல உம்முடன் சேர்ந்து அன்ன அலிஷியா ஃபுலோரேஸை சித்திரவதையும், கற்பழிப்பும் செய்த உமது ஐந்து கூட்டாளிகளில் பெயர்களும் ஸ்தாபிதமாகி விடும் — நிச்சயம்.

இது குறித்துச் சந்தேகம் வேண்டாம். ★

---

## நவீன கண்ணகி

உற்ற துணைவன்
இறந்தது கண்டு
கலங்கா நெஞ்சம்
செல்ல நாய்
செத்தது கேட்டு
கலங்கித் துடித்தது!

**'செந்தீரன்'**

---

# எதற்காக..?

லெ. முருகபூபதி

லட்சுமி தெருவைப் பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் இடுப்பில் இருந்த இரண்டு வயதுக் குழந்தை சேலை முந்தானையை வாயில் வைத்து சப்பிக்கொண்டிருந்தது. அப்படியாவது குழந்தையின் பசி தீர்ந்துவிடும் என்ற எண்ணமோ, என்னவோ லட்சுமி அதைச் சட்டை செய்யவில்லை.

'அம்மா...... பசிக்குது..... யவுத்தை வலிக்குதம்மா......' உள்ளிருந்து மூத்தவன் ராமு குரல்கொடுத்தான். தொடர்ந்து இரண்டு நாள் பட்டினி. எழுந்து நடமாடக்கூட அவனால் முடியவில்லை. கிழிந்த மூத்திரப்பாயிலிருந்தவாறே தாயை அழைக்கிறான் ராமு, வாசலில் நின்று தெருவைப் பார்த்துக் கொண்டு நின்ற லட்சுமியின் வயிறும் பசியால் தகித்தது. 'ராமு...... அழாதப்பா...... என்ன செய்ய பசி உனக்கு மட்டுமா? அப்பா கடைக்குப் போயிருக்கிறார் ஏதும் வாங்கிட்டு வருவா'

'என்னம்மா நீங்க பொய் சொல்றீங்க. அப்பாவுக்குத்தான் கடையில வேலை இல்லாமப் போச்சே........ அந்த ஹோட்டல்ல யாவாரம் முந்திமாதிரி இல்ல எண்டு ஹோட்ட முதலாளி அப்பாவை விலக்கிட்டார் எண்டு நீங்கதானேம்மா அன்டைக்கு சொன்னீங்க! இப்ப, இப்படிச் சொல்றீங்க?' என்று வேகமாகச் சொன்ன ராமு தன் பேச்சை நிறுத்தி எச்சிலைக் கூட்டி விழுங்கிக்கொண்டு தொடர்ந்து, 'வேற ஏதாவது புதுக்கடைக்கு வேலை தேடி போயிருக்காரா அம்மா.....?' ஆவலோடு கேட்டான்.

வயிற்றுக் குடல்கள் ஒன்றாக நெருங்கி உருண்டு மேலே நெஞ்சில் வந்து அடைப்பது போல் இருந்தது லட்சுமிக்கு. அவள் கண்கள் மனவேதனையைச் சுரந்தது. மூக்கைச் சீறிக் கொண்டாள். இடுப்பில் இருந்தவனை இறுக்கி அணைத்தபடி குனிந்து சேலை விளிம்பால் மூக்கைத் துடைத்தாள்.

லட்சுமியின் கணவன் ராசையா அவ்வூர் டவுணில் ஒரு சைவச் சாப்பாட்டுக் கடையில் சமையற்காரனாகக் கடந்த சில வருடங்களாக வேலைபார்த்து வந்தான். அவனும், லட்சுமியும், பிள்ளைகளும் மூன்று வேளையும் நிறைவாகவே உண்டு வாழ்ந்தவர்கள். நாட்டில் அரிசி, மா தட்டுப்பாடு. விலைவாசியேற்றம்

போன்ற பிரச்சினைகள் தலைதூக்க ஹோட்டல் முதலாளியின் பாடு பெரிய திண்டாட்டமாகி விட்டது. ஹோட்டலுக்குச் சாப்பிட வருபவர் தொகை நாளுக்கு நாள் குறையத் தொடங்கியது.

சீனி விலையேற்றத்தால் தேநீர் விற்பனை குறைந்தது. ஒரு நாளைக்கு எத்தனை 'கப்' தேநீர் விற்பனையாகிறது என்று எண்ணிக் கணக்குப் பார்க்கும ளவு வருமான வீழ்ச்சி, சோறும் விற்க முடியாதபடியால் மாதம் முடிய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுத்துக் கட்டுப்படாத நிலை. அங்கு தேநீர் மட்டும் கணக்குப் பார்க்கப்படவில்லை. சிலருடைய சம்பளக் கணக்கும் பார்த்துத் தீர்த்து விலக்கவும் வேண்டிய சங்கடம் அமுலுக்கு வந்தது. விலக்கப்பட்டவர்களில் ராசையாவும் ஒருவன்.

தெரிந்ததோ அத்தொழில் மட்டும்தான். நாட்டு நிலவரம். அதே தொழிலை வேறு எங்காவது தேடிப்பெறுவது அர்த்தமற்ற முயற்சி என்பதை நன்கு தெரிந்தும் அவன் அலைந்தான்.

வீட்டில் இருந்த கூப்பன் அரிசியும் தீர்ந்து, 'கார்ட்'டுக்கு வழங்கப்பட்ட மாவும் முடிந்து மூன்று நாட்களாகி விட்டன. பல சாப்பாட்டுக் கடைகளின் படிகளில் ஏறி இறங்கி சலித்து விட்டது ராசையாவுக்கு. அச் சலிப்பு நீடித்தால் விளைவு எப்படி இருக்கும் என்ற சிந்தனை வயப்பட்டவன் தொடர்ந்தும் கொழுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது வேலை தேடி அலைந்தான். தெரிந்த சிநேகிதர்களிடம் தனக்கு ஒரு வேலை தேடித் தரும்படி கூறுவதோடு மட்டும் நிற்காது கைமாற்றாக பணம் கேட்கவும் செய்தான். தனக்கு விரைவில் ஒரு வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அவனை அப்படிக் கேட்கத் தூண்டியது. சிலர் இருந்த சில்லரைகளைக் கொடுத்தனர். சிலர் கைகளை விரித்துவிட்டு தம் பிரச்சினைகளை பல்லவியாக்கினர்.

பகல் முழுவதும் அலைந்து திரிந்துவிட்டு இரவானதும் வெறும் வயிற்றுடனும், வெறும் கையுடனும் வீடுவந்து மனைவியின் முகத்தில் விழித்து தனது இயலாமையை எத்தனை நாட்களுக்குக் காட்டுவது. கடந்த இரவு வழக்கமான குரலுடன் வந்து பாயில் அமர்ந்தான் ராசையா.

'இப்படியே இருந்தா எங்க வாழ்க்கை என்னுகிறது? எத்தனை நாளைக்கு இந்தக் குஞ்சுகளைப் பச்சைத்தண்ணி குடுத்து ஏமாத்றது?' பசியால் சோர்ந்து சுருண்டு படுத்திருக்கும் இரண்டு பிள்ளைகளையும் சுட்டிக்காட்டியபடி சொன்னாள் லட்சுமி. ராசையா நீண்ட பெருமூச்சு விட்டான்.

'என்ன லட்சுமி செய்யிறது? இந்த வீட்டில நீயும் நானும் மட்டும் இருந்திருந்தோமெண்டா எதையாவது குடிச்சு செத்துப் போயிடலாம். எங்களால உருவாகிய எங்களையே நம்பிக்கிட்டிருக்கிற இந்தப் பிஞ்சுகளைப் பார்க்கக்குள்ள...... ஹூம்......' நெஞ்சைத் தடவிக்கொண்டு விம்மினான் ராசையா. கணவனது பரிதாபகரமான முகத்தைத் தொடர்ந்து பார்க்கச் சகிக்காத லட்சுமி, அவனை அணைத்து தன் மடியில் அவன் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். ராசையாவின் தலையைத் தடவியப

டியே அவள் சொன்னுள். 'எனக்கு ஒருயோசனை வருதுங்க. சில பெரிய வீடுகளுக்குப்போய் அரிசிமா இடிச்சு கொடுப்போமா எண்டு. அதனுல் ஏதும் வருமானம் கிடைக்கும்.........'

'போடி பயித்தியம்... நாட்டில அரிசித் தட்டுப்பாடான காலத்தில அரிசி இடிக்கப் போருளாம்! வெளிய போய் எங்கயும் கேட்டிடாதை சிரிக்கப்போருங்க' என்ற ராசையா— மேலும் தொடர்ந்தான், 'இன்னும் ஒரு கிழமையில எங்கினே யாவது ஒரு வேலை கிடைச்சிடும். பல பேருக்கிட்ட சொல்லி இருக்கிறன்'

'இன்னும் ஒரு கிழமையிலா! அதுவரைக்கும் நானும் எம் புள்ளைகளும் மண்ணையாதின்றது'

'ஏன்டி அவசரப்படுற...... நான் பேசி முடிக்கமுந்தி நீ குறுக்கிடுறியே. நாளைக்கு நான் ஆஸ்பத்திரிக்குப் போறன். எதுக்குத் தெரியுமா? ரத்ததானம் செய்யச்சொல்லி விளம்பரம் பண்ணுருங்க. ......அரைப் போத்தல் குடுத்தா பத்து ரூபா கொடுப்பாங்களாம். நாளைக்கு ரத்தம் குடுத்திட்டு பத்துரூபா கொண்டாந்து தாரன் ஒரு கிழமைக்கு எப்படியாவது சமாளிச்சுக்கோ...... சரியா...' என்ருன் ராசையா.

---

## எரிமலைகள்

ஆகசி. கந்தசாமி

விலைவாசி ஏற்றம் வீட்டடுப்பில் பூனை
ஓசிச் சுகத்தில் ஒழுங்காய்க் கிடைத்த
கூட்டு மொத்தங்களின் கூக்குரல்கள்......
தாய்மை இதயங்கள் பொறுமை யிழந்து
தணியாமல் அழ.........
உழைக்கும் பிரமாக்களிடம் களைப்பைவிட்டு
உழைப்பை முதலாளிகள் எடுத்துச்செல்ல
விவசாயிகள் வறுமையை அறுவடைசெய்ய
அதிகாரிகள் நெல்லைக் கொண்டுசெல்ல
'ஏழ்மையில் வாழும் செல்வந்தர்கள்'
ஏங்கி ஏங்கி ஏழைகளாக
'செங்கோல் பிடிக்கும் வைத்தியர்'
இவைகளைப் பார்த்துநிற்க.........
குமுறுகின்ற இதயங்கள் —
கொத்தளிக்கும் எரிமலைகள்
நிச்சயம் வெடிக்கும்.........
பொதுமை விஞ்ஞானிகள்
சரியாய்ச் செயற்படின்
அழிகின்றவை களைகளாயிருக்கும்!
பூக்கின்றவை சிவப்பாய்ப் பூக்கும்!!

இதைக் கேட்டுக்கொண்டிருந்த லட்சுமி விம்மி விம்மி அழுதாள். தலையைத் தடவிய கை அவன் மார்பைத் தடவியன. கண்ணீர்த் துளிகள் அப்பரந்த நெஞ்சில் விழுந்து தெறித்தன, விரல்கள் துடைத்துவிட்டது 'ஆண்டவனே......' என்று அவள் முனங்கினுள்.

லட்சுமி கணவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நின்றுள். இடுப்பில் இருந்த குழந்தை சிணுங்கிக் கொண்டிருந்து சில நிமிடங்களில் சோர்ந்து அவள் தோளில் தலை சாய்ந்து உறங்கிவிட்டது. அதன் வாயில் சேலை முந்தானை சுவைக்கப்பட்டபடி இருந்தது.

ஆஸ்பத்திரியில் இருந்து பத்துரூபாக் காசுடன் வேகமாக நடந்து வந்துகொண்டிருந்த ராசையா கடைத் தெருவை அடைந்தான்; நெற்றியிலும் மார்பிலும் வியர்வை வடிந்து கொண்டிருந்தது. சேர்ட் பொத்தானைக் கழற்றிவிட்டு சாரத்தின் விளிம்பினுல் நெற்றியையும் மார்பையும் துடைத்துக்கொண்டான்.

பாண் வாங்குவதற்கென்று வந்த அந்தச் சனம் ஒரு பேக்கரி வாசலிலிருந்து நீண்ட 'கியூ' வரிசையில் தெரு ஓரமாக நின்றது. ஒரு பொலிஸ்காரன் கையில் சிறு கோலுடன் சனத்தை அதட்டி தன் அதிகாரத்தை நிலைநாட்டுகிறுன்.

மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் பாண்வாங்கிக் கொண்டு போவோம் என்று எண்ணிய ராசையா கையில் சுருட்டியிருந்த பத்துரூபா நோட்டை விரித்து ஒழுங்காக மடித்து சேர்ட் பொக்கட்டுக்குள் பத்திரப்படுத்தினுன். ஒரு மைல் தூரம் நடந்து வந்த களைப்பு உதடுகளை காய வைத்துவிட்டது. நாவினுல் உதடுகளை நக்கிவிடுகிறுன். நாவிலும் வரட்சி வந்துவிட்டது. 'ஹோர்லிக்ஸ் அல்லது ஒவல்டின் குடிக்கவேணும். நல்ல சத்துள்ள சாப்பாடு சாப்பிட வேணும். அப்பதான் உடம்பில இன்னும் ரத்தம் ஊறும்' என்று அவனது இரத்தத்தைப் பெற்றுக்கொண்டு பத்துரூபா சன்மானம் கொடுத்த ஆஸ்பத்திரி நேர்ஸ் சொன்ன போது ராசையா மனதிற்குள் சிரித்துக்கொண்டான். இப்போதும் அச்சம்பவம் அவன் நினைவிற்கு வந்து மீண்டும் புன்னகைத்தன.

'குண்டி கூழுக்கு அழுதது. கொண்டை பூவுக்கு அழுதது— எண்ட மாதிரித்தான் அவள்ட பேச்சு. ஒவல்டின்னும்...... ஒரு பிளேயின்டீயே குடிக்க வக்கில்லாத காலத்தில ஹூம்........ அவளச் சொல்லிக் குற்றமில்லை. என்று தனக்குள்ளாகவே பேசிக்கொண்ட ராசையா தன் நாவரட்சியைப் போக்க ஒரு ஹோட்டலினுள் நுழைந்து ஒரு கிளாஸ் தண்ணீர் குடித்துவிட்டு வந்து 'கியூ' வில் நின்றபடி, 'ஒரு பிளேயின் டீ குடிச்சிருக்கலாம். அப்படியே இந்தப் பத்து ரூபாவையும் மாத்திச் சில்லறையாக்கியிருக்கலாம்' என்று எண்ணிய அவன் இப்படியும் சிந்தித்தான், '...ஹூம்... அங்கன சுணங்கியிருந்தா இந்தப் பாண் கியூ இன்னும் நீண்டிருக்கும். நல்ல வேளை தண்ணிய மட்டும் குடிச்சிட்டு உடனே வந்திட்டன்'

அந்தப் பாண் கியூ நிமிடத்திற்கு நிமிடம் நீண்டுகொண்டே இருந்தது. ராசையா பக்கவாட்டில் தலைசாய்த்து முன்னுல் வரிசைக்கிரமத்தில் நிற்பவர்களையும், பேக்கரி வாசலையும் ஒரு சேரப்பார்த்தான். அவனுக்கு இன்னும் சில யார்கள்தான். தனக்கும் பாண் கிடைக்கும்

என்று அவன் நம்புகிருன். பின்னுல் நிற்பவன் ராசையாவின் முதுகில் உரசுவதும் நேருங்குவதாகவும் நின்ருன். ராசையாவை விட உயரமான அவன் விடும் மூச்சு ராசையாவின் புறக்கழுத்தில் படுகிறது. ராசையாவின் பொக்கட்டில் இருக்கும் பத்து ரூபா நோட்டு பொக்கட்டுக்கு மேலாகத் தலைநீட்டி வெளியே பார்த்தவாறு இருந்தது. பின்னுல் நின்ற உயர்ந்தவன் கண்கள் கியூவின் நீளத்தை அளந்துகொண்டே ராசையாவின் பொக்கட்டுக்குள்ளும்பார்த்தன.

நடுப்பகலின் வெயில் தார் ரோட்டை தகித்தது. ராசையா தன் கால் பாதங்களை மாற்றி மாற்றி ஒன்றின்மேல் ஒன்றை வைத்தபடி நின்ருன். இரத்ததானம் செய்ததோடு ஒரு மைல் தூரம் நடந்ததனுல் ஏற்பட்ட களைப்பு மிகுதியினுல் ராசையா சற்றுத் தள்ளாடினுன். முன்னுல் நின்ற ஒரு வயோதிபரது தோள்களைப் பற்றிக்கொண்டு நிமிர்ந்து நிற்க முயன்ருன். தொடர்ந்து இரண்டுநாள் முழுப் பட்டினி. ஒரு பைந்து இரத்தம் உடலை விட்டுப் பிரிந்த சோர்வு ராசையாவுக்கு தலை சுற்றுவது போலிருந்தது. கண்கள் நாலாபுறமும் சுழன்றன. மயக்கம் அவனை ஆட்கொள்ள கால்கள் நிலைதடுமாற கீழே விழுந்தான் அவன். அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பின்னுல் நின்ற ‘அந்த’ உயர்ந்தவன் சமயம் பார்த்து ராசையாவின் பத்துருபாவை தட்டிக்கொண்டு மறைந்துவிட்டான்.

கியூவில் நின்றவர்கள் பாண் வாங்கும் ஆர்வத்தை விட்டுவிட்டு கீழே கிடக்கும் ராசையாவைச் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்த்தனர்.

லட்சுமி இன்னும் வாசலில் தெருவைப் பார்த்துக்கொண்டு நிற்கிருள்.

மல்லிகை

புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | 8-50 |
| தனிப்பிரதி | -60 |
| இந்தியா, மலேசியா | 10-00 |

(தபாற் செலவு உட்பட)

# சோஷலிச எதார்த்த வாதமும் படைப்புச் சுதந்திரமும்

அலெக்சாந்தர் தெமந்தியேவ்

'சோஷலிச எதார்த்த வாதம் சோவியத் எழுத்தாளர்களை முடக்கி விடுகிறது' என்றும், 'படைப்புச் சுதந்திரத்தில் குறுக்கிடுகிறது' என்றும், மேலை நாடுகளில் கூறப்படுகிறது. அறியாமையும், பகைமையுமே இதற்குக் காரணங்கள் ஆகும்.

சோஷலிச எதார்த்தவாதமானது, மேலிடத்திலிருந்து சோவியத் எழுத்தாளர்கள் மீது திணிக்கப்படுகிறது என்றும் சிலர் கூறுகின்றனர்கள்; இதற்குச் சிறிதும் ஆதாரம் கிடையாது.

சோஷலிச எதார்த்தவாதம் என்பது, கலை இலக்கியத்தில் வளர்ந்துவரும் ஒரு புதிய போக்கின் கொள்கையும் திட்டமும் ஆகும்; புதிய வரலாற்றுக் கால கட்டத்தின் தேவைகளை இது பூர்த்தி செய்கிறது; புதிய எதார்த்தத்தை அழகியல் ரீதியில் புரிந்து கொள்ளும் ஆற்றலை இது பெற்றுள்ளது.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் கால கட்டத்தில், புதிய உள்ளடக்கத்தையும், முரண்பாடுகளையும், மோதல்களையும், நிகழ்ச்சிகளையும், பாத்திரங்களையும் காண்கிறோம்; எனவே கலை இலக்கியத்தில் இக் காலகட்டம் பிரதிபலிப்பது மிக இயற்கையாகும்; மனித குலத்தின் கலையம்ச வளர்ச்சியில் இது ஒருபடி முன்னேற்றமாகும்.

1917 அக்டோபர் புரட்சியானது, சோஷலிச எதார்த்த வாதத்தின் வளர்ச்சியில் ஒரு புதிய கட்டமாகும். சோவியத் இலக்கியமானது, உலகுக்குப் புதிய உள்ளடக்கத்தையும், புதிய கருப்பொருள்களையும், பாத்திரங்களையும் அளித்துள்ளது. மனிதனின் அழகியல் கருத்துக்களைச் செழுமைப்படுத்தியுள்ளது.

சோவியத் இலக்கியத்தின் வளர்ச்சியையும் தனித்தன்மையையும், சோவியத் எழுத்தாளர்களின் படைப்பு ஆர்வங்களையும் புறக்கணிப்பவர்கள் மட்டுமே, சோவியத் எழுத்தாளர்களுக்குப் படைப்புச் சுதந்திரம் இல்லை என்று கூறுவர்; சோஷலிச எதார்த்தவாதம் கட்சியால் 'திணிக்கப்படுகிறன' என்று அவதூறு பொழிவர்.

'நான் விரும்புவதைத்தான் எழுதுவேன்' என்று மார்தட்டும் எழுத்தாளன், உண்மையிலேயே சுதந்திரமாக இருக்கிறனா? மக்களுக்கும், நாட்டுக்கும், மனித குலத்தின் எதிர்காலத்திற்கும் தான் கடமைப்பட்டவன் எனக் கருதும் எழுத்தாளன், சுதந்திரம் இல்லாமல் இருக்கிறனா? இதுபற்றி மாக்சிம் கார்க்கி எழுதினர்; 'நான் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக இருக்கிறேன் என்று ஓர் எழுத்தாளர் உரத்த குரலில் பிரகடனம் செய்தார்; இதுபோன்ற அறிவிப்புக்களைக் கேட்கும்போதெல்லாம், நான் அவரைக் கேட்கவிரும்புகிறேன்: 'நண்பரே! எதிலிருந்து நீங்கள் சுதந்திரம் பெற விரும்புகிறீர்கள்? மனிதன் என்ற முறையிலும் பிரஜை என்ற முறையிலும் நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளிலி

ருந்து சுதந்திரம் பெற விரும்பு கிறீர்களா?'

'வாழ்வின் துயர நிகழ்ச்சி களைச் சித்திரிக்கக் கூடாது என்று சோஷலிச எதார்த்த வாதம் தடைசெய்கிறது. மனித வாழ் வின் சோக நாடகங்களையும் நிகழ்ச்சிகளையும் எழுத்தாளர்கள் மவுனமாகச் சகித்துக் கொள்ள வேண்டும் என்றும், ஒவ்வொரு புதினத்திற்கும் இன்ப முடிவை அளிக்க வேண்டும் என்றும் எழுத் தாளர்கள் வற்புறுத்தப்படுகிறார் கள்' என்று சில மேலைய நிபு ணர்கள் கயிறு திரிக்கிறார்கள்.

சோஷலிச எதார்த்தமானது வாழ்வின்மீது அழுத்தமான நம் பிக்கை கொண்டுள்ளது என்பது உண்மைதான். ஆனால், வாழ் வின் துயர நிகழ்ச்சிகளைப் பிரதி பலிக்கக்கூடாது என்று அது கூறவில்லை.

உண்மை என்பது, சோஷ லிச எதார்த்த வாதத்தின் முக் கிய கோட்பாடுகளில் ஒன்றாகும்; வேண்டுமென்றே எதார்த்தத்தை அழகுபடுத்துவது, உண்மைக்குப் புறம்பானதாகும்.

சோஷலிச இலக்கியத்தில் நையாண்டிக்கு இடமில்லை என்று சில மேலைய நிபுணர்கள் குறை கூறுகிறார்கள். ஆனால், மயா கோவ்ஸ்கியின் கவிதைகளும், மிகாயில் ஜோஷெங்கோவின் கதைகளும், மிகாயில் கோல்த் சோவின் கட்டுரைகளும், இல்ப் மற்றும் பெத்ரோவின் நாவல் களும், சோஷலிச எதார்த்வாத இலக்கியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக விளங்குகின்றன. ஆகவே, மேற்கண்ட குற்றச் சாட்டுக்கு ஆதாரமில்லை என்பது தெளிவு.

'சோஷலிச எதார்த்தவாத மானது, புதிய சோஷலிச சமு தாயத்தையும் புதிய பாத்திரங் களையும் பிரதிபலிக்கும் அதே சமயத்தில், மிக விமர்சனத் தன்மை வாய்ந்ததாகவும் உள் ளது' என்று அலெக்சாந்தர் பதயேவ் உறுகிறார்.

ஒரு புதினமோ அல்லது கவி தையோ வாழ்வுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். மக்க ளின் உணர்ச்சிகளையும் சிந்தனை களையும் உண்மையாகப் பிரதி பலிக்கவேண்டும். இதுவே சோஷ லிச எதார்த்தத்தின் அடிப்படை.

'ஒருவரது தனித் திறமை களை வெளிப்படுத்துவதற்கும், இலக்கியப் படைப்புக்கள் அனைத் திலும் புதிய முயற்சிகளைச் செய் வதற்கும், சோஷலிச எதார்த்த வாதம் வாய்ப்பளிக்கிறது' என்று சோஷலிச எழுத்தாளர் சங்கத் தின் விதி கூறுகிறது.

சோஷலிச எதார்தவாதம் படைப்புச் சுதந்திரத்தைத் தடை செய்கிறது என்ற கருத்து ஓர் ஆதாரமற்ற கற்பனையாகும். சோஷலிச எதார்த்த வாதத் திற்கே உரிய சித்தாந்தக் கோட் பாடுகளும் கலைக் கோட்பாடுக ளும் உள்ளது என்பது உண்மை. சோஷலிச எதார்த்தவாதத்திற் கும் 'எல்லையற்ற எதார்த்தவாதத் திற்கும்' தொடர்பு கிடையாது.

சோஷலிச எதார்த்தவாதம் என்ற படைப்புமுறைக்குத் திட் டவட்டமான, உறுதியான கோட்பாடுகள் உண்டு. சோவி யத் கலையும், இலக்கியமும், வாசகர்களுக்குக் கம்யூனிச உணர்வு ஊட்டுகின்றன; மனித வெறுப்பு, இனவெறி, ஆக்கிர மிப்பு, மூடநம்பிக்கை, கிறுக்குத் தனம், கோமாளித்தனம் முதலி யவற்றை உறுதியாக எதிர்க் கின்றன. ★

நூரளை சண்முகநாதன்

# பெரியசாமி பீ. ஏ. ஆகிவிட்டான்

பெரியசாமி பீ. ஏ. ஆகிவிட்டான்.

'நம்ம பெரியசாமி— அது தான் தொங்க காம்பரா செவணுண்டி ஊட்டு மகே...... அவேடவுனுக்கு பெரிய படிப்பு படிக்க போனுயில்ல, அந்த படிப்புல அவே... தேறிட்டானு...... இப்பதா கடுதாசி வந்திருக்கு.....'

அன்று காலையிலேயே அந்த தோட்டம் முழுதும் இதே கதைதான்.

'எப்பிடியு... செவணுண்டி கொடுத்துவெச்சவேதா......... பின்னே மகே பீ. ஏ. பாஸாகிட்டானு சும்மாவா...... நம்ம ஊட்டுலையினு...... ஒன்னு இருக்கே...... பொறுக்க தின்னுபுட்டு 'ரஸ்தியாதி' அடிச்சிகிட்டு.......'

'நம்ம தோட்டத்துக்கே இது ஒரு பெருமை. பின்னே இருக்காதா என்ன? ஐஞ்சி — ஆறு கிளாசோட படிப்புக்கு தோப்புக்கரணம் போட்டுட்டு மலையில பேரு பதியிறதுலையே நம்ம பயலுகட காலோ பொகுது. இப்பிடி கொஞ்சபேரு படிச்சாதாம்பா நம்ம சனங்களு உருப்படு. இப்பபாரு ஒரு கூப்பன் புஸ்தோ போம் நிரப்ப, தந்தி ஒன்னு எழுத, இங்கிலீசுல காயுதம் எழுத எத்தனை பேருகிட்ட பல்ல காமிக்க வேண்டியிருக்கு...... ...'

அன்று 'மஸ்டரில்' கூட இப்படி பெரியசாமி பீ. ஏ. ஆகிவிட்ட கதையும், அந்தத் தாக்கம் அந்தச் சமூக உயர்வுக்கு மக்களின் உயர்வுக்கு எங்ஙனம் பயன்படப் போகிறது என்பதைப் பற்றியுமே எல்லோரின் பேச்சுகளும் உரைத்துக் கொண்டிருந்தன.

அன்று சிவணுண்டியின் குடும்பமும், தோட்டமும் எத்தகைய மகிழ்வை அடைந்து கொண்டிருக்கிறதோ அதற்கு மூல காரணம் என்று சொன்னால் அது கண்டாக்கையா முருகையாதான். அவர் மட்டும் இல்லாதிருந்தால் மற்றைய தோட்டச் சனத்தைப்போல தோட்ட ஸ்கூலோடே தன் எழுத்தறிவுக்கு 'தலையெழுத்து' என்று முழுக்குப் போட்டுவிட்டு மம்மட்டியோ அல்லது மருந்து பம்பையோ தூக்கிக்கொண்டு, மலைக்குப்போய் தொங்கல் காம்பரா பெரியசாமியாகத் தான் அவனும் போய் இருப்பான். எல்லாமே அவர் முயற்சிதான். வேலை நேரத்தின்போது அந்த ஏழை ஜனங்களிடம் எத்தனை கண்டிப்போடும், கடுகடுப்போடும் அவர் நடந்து கொள்வாரோ, அந்த அளவு மதிப்பும்

வாஞ்சையும் அந்தச் சனங்கள் மேல் அவருக்குண்டு. அவரைப் பொறுத்தவரை அவர்களுக்காக — அவர்களின் வாழ்வுத் தரத்தை உயர்த்துவதற்காக— தனிப்பட்ட முறையில் அவரால் எதையும் சாதிக்க முடியவில்லையாயினும் அச் சமூக உயர்வுக்காக ஏதாவது ஒரு சிறு தாக்கமாவது ஏற்படுத்த வேண்டும் என்கிற துடிப்பு அவர் உள்ளத்தில் உறுதியாகப் பதிந்து கிடந்தது.

'ஏய் நீ பழனி ஊட்டு மகே... இல்ல...... இங்க என்ன 'புள்ளையாரு' அடிச்சிகிட்டு இருக்கிறயா. அடி நல்லா அடி. இப்படியே அடிச்சிகிட்டிருந்தா நீயூ ஒங்க அப்பனுட்டோ மலையில மருந்தடிக்கவேண்டியதுதா. போயி லாம்பு வெச்சுவுட்டு பொஸ்தகத்த எடுத்து படி...... அப்பதா நீயூ தொரமாதிரி சூட்டு கோட்டு எல்லா போடலா......' எனத் தோட்டத்துப் பையன்களைக் காணும் போதெல்லாம் ஏதாவது 'நையாண்டி' யாகச் சொல்லி, அவர்களை எப்போதும் தட்டி விட்டுக்கொண்டே இருப்பார். இந்த நிலையில் சிவனாண்டியின் மகன் பெரியசாமியின் மேல் அவரின் பார்வை விழுந்துவிட்டது. அதற்கேற்றாற்போல் அவனது மூளையும் அமைந்துவிட்டது.

ஒருநாள் முருகையாவோடு பேசும்போது தோட்ட ஸ்கூல் 'எட்மாஸ்டரும்'—

'இங்க பாருங்க பெரியசாமி படிப்பில எண்டா நல்ல ஆர்வமுள்ளவனு இருக்கிறான். நான் கூட்டி கழிக்கிறதுக்கிடையில அவன் கூட்டி கழிச்சி பெருக்கியும் போடுறான் பாருங்கோ...... அவனுக்கிருக்கிற ஆர்வத்திக்கி கடைசி ஒரு ஆசிரியராக ஆவது அவன் வரணும். தோட்ட ஸ்கூலோடேயே அவனது படிப்பு முடிஞ்சி, மலைக்கு மம்மட்டி பிடிக்க போயிடுவானோ யார் கண்டது.........'

'யார்கண்டது' என்ற கேள்வியோடேயே மாஸ்டர், முருகையாவிடம் இருந்து கழண்டு விட்டார். இத்தோடு அவரது பிரச்சினையும் சரி. இதேபோல் எவ்வளவோ, நல்ல ஆர்வமுள்ள மூளைகளெல்லாம் தோட்டத்தின் கான் வழிப்பதுவும், மலையில் மருந்தடிப்பதும் மாஸ்டருக்குப் பரிச்சயமாய்ப் போய்விட்ட ஓர் விசயமும் கூட. இதைவிட அவரால் எதைத்தான் கணித்துவிட முடியப்போகிறது. தோட்டம் கொடுக்கும் சம்பளத்தில் குடும்பத்தை ஒட்டுவதே பிரச்சினையாக இருக்கிறபோது இல்லாத பிரச்சினைகளையும் தலையில் போட்டுக்கொள்ள மாஸ்டர் விரும்பவில்லை.

மாஸ்டரின் இந்தப் பேச்சும் பெரியசாமியின் ஆர்வமும் நல்ல தன்மைகளும் இதை எப்படியும் செயல்படுத்தியே ஆக வேண்டும் என்ற மன உறுதியைத் தான் அவருள் வளர்த்து வந்தது. அவர் செயலாக்க முனையப்போகிற செயலை தனித்து நின்று சாதிக்கும் தைரியம் அவருக்கில்லைத்தான். ஏனென்றால் அவரோ தோட்டத்தில் கையேந்தி நிற்கும் ஒரு லேபர் தானே? டவுன்புற முதலாளிகள் தெரிந்த சிலரைக் கண்டு பேசியதோடு, இதற்கான அத்திவாரத்தையும் வளர்த்து வந்தார் முருகையா.

'படிச்சி நாம என்னத்ததா காணபோறோ சாமி...... இத் தோட தோட்டத்துல பேரு

பதிஞ்சிட்டா அவனு ஏதாவது சம்பாதிச்சா எனக்கு எவ்வளவோ செரமோ கொரஞ்ச மாதிரி இருக்கு சாமி'

என முருகையாவிடம் பெரியசாமியின் அப்பன் சொல்லும் போதெல்லாம் அவனுக்கு புத்தி கூறி, பெரியசாமின் படிப்புக்கு எந்தவித பாதகமும் ஏற்படாது கவனித்துக் கொண்டார். தோட்டத்திலிருந்து பஸ் ஏறி டவுன் சென்று கல்லூரியில் படிக்கத் தொடங்கிவிட்டான் பெரியசாமி. எப்படியோ அரசாங்கப் பரீட்சையில் முதல் தரத்துடன் பாசாகிவிட்டான் பெரியசாமி.

ஆனால் அதற்குப்பின் அவனை படிக்கவைப்பதென்றால் பல்கலை கழகத்திற்கு அனுப்பியாகவேண்டும். ஆனால் அதற்குரிய வசதிகள், பணபலம் எல்லாம் முருகையாமுன் மலையாக நின்றன. இதை எப்படியும் சமாளித்தாக வேண்டும்.

அன்று தோட்டத்து ஸ்கூலில் இதற்கென்று தோட்டச் சனங்களையெல்லாம் கூட்டி ஒரு கூட்டமே கூட்டியிருந்தார் முருகையா.

இது 'மஸ்டரில்ல' அதநாள நா ஏசுவேன்னோ...... கடு கடுப்பா இருப்பேன்னோ யாரு நெனேக்கபடாது. நம்ம தோட்டத்த நெனேச் பாருங்க. அது அன்னேயவிட இன்னேக்கு எவ்வளவோ உயர்ந்திருக்கு. அது வாஸ்தவோ தா...... ஆனு அந்த உயர்வுக்கு காரணமா இருக்கிற நாம .. நம்மலோடை குடும்பம் அன்னேக்கிருந்த லயோ, கம்பளி, ஸ்கூல், இப்பிடியே நம்ம வாழ்க ஓடிக்கிட்டு இருக்கு. நாம வாழ்ந்தது ஏதோ முடியப்போற ஒண்ணு. ஆனு நமக்கு பின்னுல இருககிற நம்ம இளசுகள், அதுகளையும் நாம போன பாதையிலேயே இட்டுக்கிட்டு போயி, அதுகளேயும் மலே, மம்மட்டி, மருந்தடிப்பு, கொழுந்தெடுப்பு, ஒரு சாராருக்கு அடிமையாக இருந்து அவங்களு அவல வாழ்வதா வாழணுமா? அதுகளேயும் நம்ம வழியிலேயே விட்டு ஏதோ சரிதான்னு இருந்திடுறதா.....? எல்லா கொஞ்சோ யோசிக்கணு. இப்ப இங்க நாம கூடியிருக்கிற காரணே குப்பிலாம்பு வெளிச்சத்தில படிச்சிகிட்டு இருக்கிற நம்ம சமூகத்து இளைய தலேமுறைகல்ல சிலதுகளேயாவது நாம உயர்ந்த படிப்பு படிக்கவைக்க முயலணும். சிவணுண்டி போல ஏழை தொழிலாளிகளாலேயோ அல்லது உங்களாலேயோ என்னுலேயோ தனித்து இத சாதிக்க முடியாது. ஏனுன்னு நாமலே அன்றாடம் கஞ்சி தண்ணிக்கே பிரச்சனையாக நிக்கிறவுங்க. அதனுலேதா நாம எல்ல ஒண்ணுசேந்து இதுக்கு நடவடிக்க எடுக்கணும். அதுக்கு மொதல் படியா நம்ம செவணுண்டி மகே பெரியசாமிய யூனிவசிட்டிக்கி அனுப்பி படிக்க வைக்கனும். அதற்கு நாம எல்லா நம்மால முடிஞ்சத செய்யறது. இது தனிப்பட்ட ஒருத்தனுக்கு செய்கிற உதவியா யாரு நெனேக்கப்படாது. இது நமது வருங்கால தலேமுறைக்கு, நம்ம சமூகத்துக்கு, அதன் உயர்வுக்கு செய்யப்படுற உதவியாக இருக்கனு. பெரியசாமி மட்டுமில்ல இன்னும் எத்தனேயோ பெரிய சாமிகள் இந்த தோட்ட சமுதாயத்தில் இருந்து போயி, டாக்டரா, இன்ஜினியரா வர

ணும். அப்பதா நமக்கு நம்ம சமூகத்துக்கு விடிவு பிறக்கும்.

முருகையாவின் பிரசங்கத்தைக் கேட்ட தோட்ட மக்கள் எல்லாரும் ஏதோ தம்மால் இயன்ற உதவியைச் செய்யத் தவறவில்லை. அது செவணாண்டியின் மகனுக்காகச் செய்தார்களா அல்லது நாளைய சமுதாய விடிவிற்காகச் செய்தார்களா அல்லது கண்டாக்கையா முருகையாவிற்காகச் செய்தார்களா இது அவர்களுக்குத் தான் வெளிச்சம்.

ஒருமாதிரி பெரியசாமி பல்கலைக் கழகத்திற்குப் பட்டப் படிப்பிற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டு விட்டான். சில பெரிய கைகளின் உதவிகளோடு தான் நினைத்த காரியத்தைச் சாதித்து விட்டார் முருகையா. அன்று தோட்டத்தை விட்டுப் புறப் படுகையில் பெரியசாமி தன்னை வழியனுப்ப வந்திருந்த தன் தோட்ட சகாக்களைப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டுப் பேசிய பேச்சுக்கள் அந்த மலைகளை முட்டி எதிரொலித்தது.

'நான் இன்றைக்கு இத் தோட்டத்தைவிட்டு நாளைய ஒரு சமூக விடிவிற்காக ஒளி யேற்ற முடியும் என்ற நம்பிக் கையோடு போகிறேன். இந்த தோட்டம், நான் குடும்பமாக வாழ்ந்த தோட்ட ஜனங்களும், எனக்காக என் படிப்பிற்காக செய்த உதவிகளுக்கெல்லாம் நன்றி என்ற சொல்லோடு மட்டும்தான் இன்று விடை பெறுகிறேன். நாளை, அது நமது சமூகத்தின் கதிரவனாக இருக்க வேண்டும். நல்ல கல்வி அறிவு அவ்வறிவால் ஜனிக்கப் போகிற கலாச்சார மறுமலர்ச்சி, அம் மலர்ச்சியில் இந்தத் தோட்டத்தில் புதுப் புது அறிவு மலர்கள் மலரவேண்டும். அம் மலர்களை மலர்விக்கும் உரமாக என் பிற் கால வாழ்வு இருக்கும். இது தான் உங்களுக்கு, என் உயர் விற்குப் பாடுபடும் பெரியவர் முருகையாவிற்கு, இச் சமூகத் திற்கு நான் செய்யக்கூடிய நன்றிக்கடன். இன்று இங்கி ருந்து ஒரு பெரியசாமிதான் போகிறான். போகமுடிந்தது. இனிமேல் கூட்டம் கூட்டமாய், அம்மாசி மகனும், மாரியாயி மகனும் பட்டம்வாங்கப் போக வேண்டும். அதற்கு இந்தப் பெரியசாமி என்றைக்குமே முதல் ஆளாக நின்று உதவு வான்' என்று கூப்பிய கரத் தோடு தோட்ட மக்களின் மகிழ்ச்சியோடும் கரகோஷத்து டன் அவனைவழியனுப்பினர். முரு கையா இக்காட்சியைக் கண்டு பூரித்து நின்றார்.

காலங்கள் தோட்டத்தைப் பொறுத்தவரை கவ்வாத்துக்க ளாக ஓடி மறைகின்றன.

இன்று பெரியசாமி பீ.ஏ. ஆகிவிட்டான்.

பெரியசாமி வந்தவுடன் என் வீட்டில் விருந்து, என் வீட்டில் விருந்து என்று பெரிய கிளார்க் முதல் சின்னக் கங்காணி வரை நான் முந்தி நீ முந்தி என போட்டி போட்டுக் கொண்டு நின்றனர். எல்லாம் சுயநலம் தான். ஒரு பீ.ஏ. தம் மருமக னாக மாட்டானா என்கிற நப் பாசைதான்.

'அடேயப்பா நம்ம செவ ணாண்டி மகனுக்கு அடிச்சதுதா 'சுக்கிர தெசங்கிறது' நேத்து பய மூக்கொழுவிகிட்டு திரிஞ்

## பக்தி

வீட்டிற் கருகில்
பெரிய கோயில்
சொந்தம்.
வசு ஏறி
வெளியே... ஒதுங்கித்
தொழுவது தான்
சிலருக்கு
பக்தி மோட்சம்!

வதிரி. சி. ரவீந்திரன்

---

சவே......... அவனுக்கு வந்த மதிப்பு. பெரிய கிளாக்கருல இருந்து கங்காணி அய்யாமட்டு அவனுக்காக இல்ல காத்திருக்காக..... ஏதோ நம்மலோட ஒன்னு பொலங்கிகிட்டு கெடத்தவே தா...... ஆனு இப்ப அப்பிடி ஏலுமா'

இப்படி பல பேச்சுக்கள் பெரியசாமியைப் பற்றியே சுற்றி ற்றி வந்தது.

பெரியசாமி பீ. ஏ. பட்டதாரியாகி தோட்டத்திற்கு வந்துவிட்டான். அவன் பீ. ஏ. மட்டும் ஆகிவிடவில்லை. ஆளே மாறிப்போய் இருந்தான்.

இறுகப்பிடித்த கால்சட்டை 'பட்டிக் சேட்' காதளவு நீண்ட சைட்பேண்ட், கையில் ஜேம்ஸ் பொண்ட் பேக்......

வேட்டியோடு, கண்டவர்களெல்லாம் வாயிலே கை வைத்திருந்தார்கள்.

'டேய்...... மச்சான் என தோள் மேல் கை போட்டுப் பழகியவர்களிடம் எல்லாம் எதையோ காணக் கூடாததைக் கண்டுவிட்டமாதிரி ஒதுங்கி நடந்தான்.

ஏதோ பெயருக்குப் பிறந்து வளர்ந்த லயத்துக்குச் சென்றான். ஆனால் அதிக நேரம் அவனால் அந்தப் பழகிய சூழ்நிலையில் இருக்க முடியவில்லை. மலத்தை மிதித்து விட்டவனின் நிலை.

அடுத்த, அடுத்த நாட்கள் பெரிய கிளார்க், சின்னக் கிளார்க்கர் வீடுகளிலேயே கழிகின்றன. அவர்களோடு அவனால் ஒத்துப்போக முடிகிறது. வந்து ஒரு கிழமையாகிவிட்டது. முன்பு யூனிவசிட்டியில் இருக்கும்போதே 'டிரை' பண்ணிய ஒரு கிளாக் ஜொப் கொழும்பில் இப்போது கிடைத்து விட்டதாகக் கூறி, கொழும்பிற்குப் புறப்பட்டு விட்டான் பெரியசாமி.

நாளைய ஒரு சமூக விடிவிற்காக ஒளியைத் தேடிப் போகிறேன்......... என போகுமுன் பேசிவிட்டுப் போன பேச்சுகள் மகாவலி கங்கையோடே போய் விட்டது போலும்.

முருகையா இப்போது அதிகமாக எவரிடமும் கதைப்பது கிடையாது.

இப்போது தோட்டப் பையன்கள் 'பிள்ளையார்' எட்புருஸ் அடிப்பதைப் பார்த்து,

'அடிங்கடா இதுதா ஓங்களுக்கு லாய்க்கு. அப்பே மருந்தடிக்கிரு...... அடுத்தா நீங்க அடிங்க......... அப்பனே ஓங்க மகேமாருங்க அடிப்பானுக எல்லா...... ஓங்களோட தலை விதிடா. எப்பிடியாவது போங்க நமக்கென்ன.........' என முருகையா முனங்குவதோடு சரி. ★

ஜயசேன ஜயகொடியின்

# பச்சிளங் குழந்தைகள்

## "அமுதருவோ"

'நீள்கரை நம்பி'

---

உலக வரலாறு உதயம் முதல், 'பெண்' எனும் பதத்திற்குச் சரியான அறிமுக விமர்சனமொன்றை முன்வைக்கப் பலர் முனைந்தனர். உளவியல் மேதாவிகள், சமூகவியல் ஞானிகள் ஆண்டுகள் பல ஆய்வுகள் நடத்தி, ஆயுளின் நிகழ்வுகளை ஆதர்ஸமாகக் கொண்டு நிரூபித்தனர், ஒப்புவித்து வருகின்றனர்: இன்னோரன்ன சிந்தனாய்வுகளுக்கிடையில் ஒரு பெண்ணின் மூலம் வாழ்வின் பலரகப்பட்ட பிரச்சினைகளின் உரிய சந்தர்ப்பத்தலங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் சிங்கள நவீனமாக அண்மையில் ஜயசேன ஜயகொடியின் 'அமுதருவோ' (பச்சிளங் குழந்தைகள்) வெளிவந்துள்ளது.

மகுடத்தின் முன்னர்த்தத்தோடு பெண்ணைப் பற்றிய கதைப் பின்னலாக இல்லாவிடினும் நாவல் முழுதும் பெண்ணின் நிழல் உருவம் விழுந்திருக்கின்றது.

19-ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் தோன்றும் ஓர் இளம் தம்பதிகளின் வரலாற்றுக்குள் 'பபுன்' எனும் பெண் மருமகளாக, தாயாக, மாமியாக முறைகளை தன் வாழ்க்கையில் எதிர் நோக்குகிறாள்: இச் சந்தர்ப்பத்தில், மானிட வாழ்வின் துயரங்களின் கோணல்களைத் துல்லியமாக விவரிப்பதை அமுதருவோவில் படிக்கலாம். 'வெலுன்' எனும் பாத்திரத்தைக் கதாநாயகனாக் கொண்ட கதை நிகழ்ச்சிகள், நேர்முக வருணணையாக வாசகர் மனதில் பதிந்துவிடுகின்றன.

வெலுன், பபுன் ஒன்றாக இணைகின்றனர். விவாக தின இரவு, பபுன் அருகேவர வெலுன் மறுக்கிறான். பெண்ணைப் பற்றி ஒரு கிராமத்து இளைஞனுள் அமைந்திருக்கும் உதாசீனக் குணமன்று. கோழைத்தனமுமன்று இம்மறுப்பு. லஜ்ஜையும், பயப் பிராந்தியுமே அந்நிலைக்குள் அவனை தள்ளிவிடுகிறது. மூத்தவர்களின் உபதேசத்தின் பின், வெலுன் மனைவியுடன் இரவைக் கழித்தான். அன்றுதான், அவன் ஒரு பெண்ணின் அர்த்ததத்துவத்தை அறிந்தான் கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு, மருமகள் எனும் தொடர்பால், மாமியின் படுஆக்கினைக்கு ஆளாகிறாள். கால ஓட்ட , அவளைத் தாய்மை அடையச் செய்கிறது. தனிமரமாக நின்று வாழ்க்கையின் பல்வேறு பட்ட தாக்குதல்களை எதிர்நோக்கும் பபுனின் சரித நிருபண வாயிலாக நாவ

லாசிரியர். ஈழத்துக் கிராமத்தின் பெண்ணொன்றின் குணங்களை மிக இயற்கையாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். இவை ஆசிரியர் நமக்குத் தரும் செய்திகள்.

பபுனின் பாத்திர ஓட்டத்தில் ஒரு பயங்கரப் பக்கம் புரள்கிறது. சுத்தப்பு எனும் நபருடன் இரகசியத் தொடர்பு ஏற்படுகிறது. பாவ ஜீவிதத்தில் இறங்குகிறாள். பயங்கர இடி விழுகிறது. அவளது தூய்மையான பரம்பரை சந்தானத்தில் பெரிய தழும்புகள் விழுந்து விடுகின்றன.

சுத்தப்புவின் தொடர்பால் பபுன் மற்றொரு குழந்தைக்குத் தாயாகிறாள். அதைத் தன் கரங்களினாலே தொலைத்துவிட்டு மற்றொரு பாவத்திற்குள்ளாகிறாள். இறுதியில் பயங்கர வெடிப்பொலிகள் பல வருஷங்களின் பின் கணவனை அடைகின்றன. இளமையில் புரிந்த பாவங்களுக்கென 'பாவுச்சாரணம்' முதுமையிலே பண்ணப்படுகின்றது.

'இவ்வளவு காலமும் சொல்லாதிருந்தீர்கள். இன்னுங் கொஞ்சக் காலத்திற்காவது மௌனமாகி இருக்க வேண்டாமா?'

மனைவியின் பாவுச்சாரணத்திற்கிடையில் வெலுன் இப்படிக் கேட்டான். மனைவிக்கு மன்னிப்பை வழங்கியபின் கண்களை மூடிக் கொள்கிறான்.

ஜயசேன ஜயகொடி மனித வரலாற்றின் தரிசன வீச்சுக்களை சமகால சூழ்நிலையின் எதிரொலிகளை நளினமாக விவரிக்கிறார். ஆனால், அமுதருவேவாவில் காணும் இத்தகைய விவரங்கள் அவரது ஏனைய நாவல்களில் காணாமை, இந்நாவல் ஒருபடி மேலாகத் தோன்றுகிறது. விறுவிறுப்பாலும், சமுதாய நோக்கிலும் ஆசிரியர் ஓரளவு தன் பேனாத்திறத்தைக் காட்டியுள்ளார்.

பாத்திர வார்ப்பிலும், குணச் சித்தரிப்பிலும் இன்னும் தன் கைவண்ணத்தைக் காட்டியிருக்கலாம். இலட்சியப் பாத்திரமாக வெலுனைக் கருதும் ஆசிரியர் அதில் 'நொண்டி' யடிக்கிறார் என்பதே எனக்குப் படுகிறது. மாமியார் மருமகளுக்குப் புரியும் கொடுமைகள் பகுதியில், தேசிகவிநாயகம் பிள்ளையின் 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மிய'த்தின் அரசியல் படலத்தின் சாயல் சுமாராக விழுந்துள்ளது.

கதை கலைநயம் கமழ சிறப்பாக ஓடுகிறது. என்றாலும், இடையிடையே ஆபாச அசிங்கத்தை லேசாக விஸ்தரிக்கிறார். இது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், குணதாஸ லியனகேயின் 'தோன கமலாவத்தி' 'தெவனி ஸில்பத நொகிடமி' நவீனங்களுள் காணும் ஆபாச அழுக்கைவிட ஓரளவு சிறப்பானது எனல் வேண்டும். இன்னுஞ் சற்று சிந்திக்கும்போது பாதையோர விமர்சகர்களால் விருதுகள் வழங்கப்பெற்ற 'ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளின் ஆபாசச் சிருஷ்டிகளை விட ஜயசேன ஜயகொடியின் ஆபாச விவரிப்பு மேலானது என உறுதியாகக் கூறுவேன். ★

# செம்புலிங்கம்

# க
# ண்
# ட

# வீரத் தமிழ் பெண்

எம். ஏ. கிஸார்

---

செம்புலிங்கத்தின் சாம் ராஜ்யத்திற்கு எல்லைக் கோடே கிடையாது. அவன் எங்கு முகா மிட்டிருக்கிறானோ, அந்த எல்லைக்குட்பட்ட பகுதிகள் எல்லாம் அவனைச் சேர்ந்தவைகள். அடர்ந்த காடுகளும், மலைக் குன்றுகளும்தான் அவனுடைய ராஜ்யத்தின் பிரதான எல்லைகள். மலைக்குகைகள்தான் அவனுடைய அரண்மனைகள். கால நிலைக்கேற்றவாறு அவனுடைய வசந்தகால அரண்மனையை மாற்றிக் கொள்வான். அவனுடைய விசித்திர ராஜ்யத்தில் ஒருவன் குறிப்பிட்ட அளவுதான் செல்வத்தை எடுத்துச் செல்லமுடியும். அவனுடைய எல்லையைக் கடந்து செல்லும் போக்குவரத்துச் சாதனங்களை அவன் சோதனை போடும்போது அளவுக்கு மீறிய செல்வங்களை எடுத்துச் செல்வதை பறிமுதல் செய்யப்படும். சுங்கத்தீர்வை வசூலிப்பதற்கு தகுந்த அதிகாரிகள் அவன் ராஜ்யத்தில் இல்லை. அவனுடைய தேசத்தில் அவன் விதித்த சட்டத்தில் பறிமுதல் தான் சரியான பரிகாரம். அதைத்தான் அவன் கடைப் பிடித்து வந்தான்.

படுக்கப் பத்துப் பள்ளத் தாக்கிலுள்ள அடர்ந்த காட்டில் செம்புலிங்கம் முகாமிட்டிருக்கும் சேதி காட்டுத் தீபோல் பரவியது. அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள பெரும் செல்வந்தர்கள் எல்லாம் சாத்தான்குளம் போலிஸ் நிலையத்திற்குப் படையெடுத்து வந்தார்கள். புகார்களைப் பதிவுசெய்த பொலிஸ் புலிகளுக்குப் பெரிய கிலியை ஏற்படுத்தியது. புத்தன்தருவை தேரி மேட்டிலே செம்புலிங் கத்தை முற்றுகை செய்யப் புறப்பட்ட அந்தச் சிப்பாய்ப் புலிகளுடைய தலைகள் உருண்ட பயங்கரச் சம்பவங்களின் இரத் தக்கறை மறையுமுன் தங்கள் உதவியை நாடிவந்திருக்கும் பணக்காரக் கும்பல்களைச் சமாளிக்க வேண்டிய நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டது.

தடுத்து நிறுத்தும் மனைவிகளைப் பிரிய முடியாமலும், செம்புலிங்கத்தின் அரிவாள் வீச்சுக்குப்பயந்தும் பல போலிஸ் ஜவான்கள் குலைநடுக்கம்பிடித்து ஓட்டம் பிடித்த கடந்தகாலச் சம்பவங்களை அந்தச் செல்வச் சீமான்கள் தெரிந்திருந்தும்

அவர்களுக்கு வேறு வழியில்லை. ஏழை மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு இரங்கும் ஒரு இரட்சகனுகக் காட்சி அளித்தான் செம்புலிங்கம். அந்த ஏழை குடிமக்கள் என்றுமே அந்த அதிசயக் கொள்ளைக்கார அரசனைக் காட்டிக் கொடுத்ததே இல்லை. அவர்கள் அவனுடைய விஸ்வாசமுள்ள பிரஜைகள்.

அன்று பூர்ணசந்திரன் நிலா வெளிச்சத்தில் அனேக வில் வண்டிகள் போய்க்கொண்டிருந்தன.

அந்த வண்டிகளில் பூட்டப்பட்ட உயர்ந்த ஜாதிக் காளைகளில் அணியப்பட்டிருந்த சலங்கையின் சல், சல் என்ற சத்தம் நிசப்தம் நிறைந்த அந்தக் காட்டுப்பாதையில் ஒரு இனிய நாதத்தை உண்டு பண்ணியது. அந்தக் கிராமத்துப் பெரிய பண்ணையார் வீட்டுக் கல்யாணம் என்றால் கேட்கவா வேண்டும். சாரை சாரையாக வண்டிகள் போய்க்கொண்டுந்தன. கல்யாணக் கோஷ்டி மறுவீடு போகும் வைபவம்.

திடீரென்று நிறுத்து வண்டியை என்ற பயங்கரச் சத்தத்தைக் கேட்டதும், வண்டியிலே பிரயாணம் செய்யும் ஆண் சிங்கங்கள் கையில் பளபளக்கும் அரிவாளுடனும் ஈட்டியைப் போலுள்ள வேல் கம்புகளுடனும் வண்டியிலிருந்து குதித்து 'யாரடா நிறுத்தச் சொன்னவன்?' என்று கம்பீரக் குரல் கொடுத்தார்கள். 'நான் தான்டா செம்புலிங்கம்!' என்ற குரலைக் கேட்டதும் அந்த ஆண் சிங்கங்களின் சப்த நாடிகள் ஒடுங்கி விட்டது. மனைவியை மறந்து கணவனும், மக்களை மறந்து தந்தையும், சகோதரிகளை மறந்து சகோதரர்களும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தார்கள் அந்த ஆண்பிள்ளைகள் என்ற சாண்பிள்ளைகள்.

ஒவ்வொரு வண்டியிலும் உள்ள பெண்மணிகள் அணிந்திருந்த நகைகளை களற்றிக் கொடுத்துவிட்டு, எங்களை ஒன்றும் செய்யவேண்டாம் என்று சொல்லிக் கையெடுத்துக் கும்பிட்டார்கள். செம்புலிங்கமோ எனக்கு வேண்டியது உங்களுடைய நகைகள்தான் என்று சொல்லிக் கொண்டு கைப்பற்றிய தங்க அணிகலன்களை மூட்டை கட்டும்படி உத்தரவிட்டான் தன் சகாக்களிடம்.

ஒரு வண்டியில் ஏற்படுத்திய சோதனையின்போது அந்த வண்டியில் இருந்த பெண் ஐயா நான் பணக்கார வீட்டுக் கலியாணத்திற்கு கௌரவமாக வரவேண்டும்மென்று இரவல் வாங்கிவந்த நகைகள் என்று சொல்லி அழுதாள். அவளுடைய அழுகையில் உண்மை நிறைந்திருப்பதை உணர்ந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. இப்படிப்பட்ட விசயங்களில் செம்புலிங்கம் டாக்டர் பட்டம் பெற்றவன். நீலிச் கண்ணீரைக் கண்டு பிடித்துவிடுவான். அவளை நோக்கி அம்மா உண்மையிலே நீ இரவல் வாங்கிவந்த நகைகள்தானு? என்று கேட்டான். ஆம் சத்தியமாகச் சொல்கிறேன் இரவல் நகைகள்தான் என்ற பதிலைக் கேட்டதும் அவளிடத்திலிருந்து கைப்பற்றிய நகைகளைத் திரும்பக் கொடுத்துவிட்டு, அம்மா நீ வாங்கிவந்த நகைகளை அவர்களிடம் கொடுத்துவிடு. இதோ இந்த நகையை நீ அணிந்துகொள் என்று சொல்லி பையில் இருந்து ஒரு நகையை எடுத்துக் கொடுத்

தான். அந்த நகையை பெற்றுக்கொண்ட அந்தப் பெண்மணிக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்து நின்ருள்.

விலை உயர்ந்த வெல்வெட் மெத்தைகளால் அலங்கரிக்கப்பெற்று, பட்டுக் கம்பிளிகள் விரிக்கப்பட்ட அழகிய வண்டி. அதில்தான் புதுமணத் தம்பதிகள் பிரயாணம் செய்தார்கள். அந்த வண்டியின் அழகிதிரையை நீக்கினன். பெண்ணைத் தவிர புதுமாப்பிள்ளையைக் காணேம். செம்புலிங்கத்தைக் கண்டதும் கதறிவிட்டாள் அந்தப் புதுமணப் பெண். எங்கே உன் புருசன். என்று கேட்டதும் அவர் ஓடிவிட்டார் என்று உண்மையைச் சொன்னுள். என்னை ஒன்றும் செய்துவிடாதீர்கள் என்று சொல்லிவிட்டு அவள் அணிந்திருந்த விலை உயர்ந்த நகைகளை ஒன்றுவிடாமல் களற்றிக் கொடுத்தாள். அந்த நகைகளை ஒன்றைக்கூட அவன் கையால் தொடவில்லை. பெண்ணே இந்த நகைகள் ஒன்றும் எனக்கு வேண்டாம். அதோ மஞ்சல் கயிற்றில் தொங்கும் அதை மட்டும் கொடு என்று கேட்டான். அந்தப் பெண் ஐயோ! அதைமட்டும் கேட்காதீர்கள். அதுதான் என்னுடைய தாலி. அந்தத் தாலி கட்டி மூன்று நாட்கள்தான் ஆகிறது என்று மன்ருடினுள்.

செம்புலிங்கம் சொன்னன். அம்மா உன்னைக் காப்பாற்றச் சக்தியில்லாமல் உன்னைத் தனியாக விட்டு விட்டு ஓடின உன் கோழைக் கணவனுல் கட்டப்பட்ட அந்தத் தாலிதான் அம்மா எனக்கு வேண்டும். இந்த விலைமதிக்க முடியாத நகைகளை நீயே வைத்துக்கொள் என்று சொன்னதைக் கேட்டதும், அந்தப் பெண்ணுக்கு செம்புலிங்கம் ஒரு கொள்ளைக்காரனுகத் தோன்றவில்லை. அவன் சொன்ன கசப்பான உண்மைகளை ஜீரணிக்க அவளுக்கு நீண்ட நேரம் பிடிக்கவில்லை. இருந்தாலும் அவள் தமிழ் பெண்ணுயிற்றே. அவளுக்குத் தைரியம் வந்துவிட்டது. எல்லா நகைகளையும் நீயே எடுத்துக்கொள். ஆனுல் என் புருஷன் கட்டிய தாலியை மட்டும் என்னிடத்திலிருந்து நீ பெற்றுக்கொள்ள முடியாது. என் மரணத்திற்குப் பின்தான் என் தாலி உனக்குக் கிடைக்கும் என்று சொன்னதும், செம்புலிங்கம் ஒரு கணம் திகைத்து விட்டான். அவன் படிப்பு வாசனை இல்லாவிட்டாலும் கோவலன் நாடகத்தைப் பல முறை பார்த்திருக்கிருன். கண்ணகி பாண்டியனிடம் சொன்னதும் அவன் ஞாபகத்திற்கு வந்தது. அம்மா உன்னுடைய வீரத்திற்கு மெச்சுகிறேன். நீ உண்மையிலேயே வீரமுள்ள ஒரு தமிழ் பெண். உன்னைத் தொட்டு தாலிகட்டிய கணவன் உன்னை விட்டு விட்டு ஓடிவிட்டான். இருந்தாலும் அவன் கட்டிய தாலியை நீ காப்பாற்றுவதில் உன் உயிரைவிடவும் துணிந்துவிட்டாய். உனக்கு ஏற்பட்ட இந்தத் துணிச்சலுக்கு நான் தலை வணங்குகிறேன் என்று சொல்லிவிட்டு அடுத்த வண்டியை நோக்கி விரைந்து சென்ருன்.

அவன் சென்ற திக்கை நோக்கி வணங்கினுள் அந்தப் புதுமணப் பெண். தாலியைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டாள். ★

# அனுராதபுரம் கலைச்சங்க

# புத்தாண்டு நிகழ்ச்சி

அனுராதபுரம் கலைச் சங்கம் தனது புத்தாண்டு, 8-வது நிகழ்ச்சியாக சிரித்திரன் வெளியீடான 'மகுடி' அறிமுகத்தையும், செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' நாவல் விமர்சனத்தையும், 'யாருக்குப் புதுவருடம்' என்ற தலைப்பில் கவியரங்கமொன்றையும் நடத்தியது.

விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் திரு. நா. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. ஆ. சி. ஞானம் மகுடி பற்றிய அறிமுக உரை நிழ்த்துகையில் குறிப்பிட்டதாவது. 'மகுடியின் பதில்களில் தனியே நகைச்சுவை மட்டும் இல்லை. நகைச்சுவையோடு கூடிய சீர்திருத்தக் கருத்துக் குவியல்களும் உண்டு. இதில் உள்ள பெரும்பாலான கேள்விகள் சமுதாயத்தை எழுச்சி கொண்டு சிந்திகக வைக்கக் கூடியதொன்ருக உள்ளன; மகுடி ஒரு புதிய சிறப்பான முயற்சியாக இருக்கின்ற படியால்தான் கலைச்சங்கம் இதை அறிமுகம் செய்கின்றது என்ருர்.

செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' நாவலை திரு. சி. குமாரலிங்கம் விமர்சிக்கையில் 'காதல் நவீனம் போன்ற இந் நாவலில் கதை சொல்கின்ற பாங்கே உள்ளது. வாசிக்க சுவாரஸயமாக உள்ளது. நெடுந்தீவு மக்கள் சுரண்டப்படுவதைக் கதாசிரியர் காட்டவில்லை. மக்களுடன் மக்களாக வாழும் எழுத்தாளனுல் மட்டுமே சிறந்த இலக்கியம் படைக்க முடியும். நெடுந்தீவில் சில தினங்கள் தங்குவதால் மாத்திரம் அப்பகுதியை தனது படைப்பில் பூரணமாக பிரதிபலிக்க முடியாது என்பதற்கு வாடைக்காற்று நல்ல உதாரணம் என்ருர்.

திரு. இரா. சுகுணசபேசன் விமர்சிக்கையில் 'சுவையான நாடகத்திற்குரிய மாதிரியே கதை பின்னப்பட்டுள்ளது. பல இடங்களில் யதார்த்தமே இல்லை. கதாசிரியருக்கு நல்ல அவதானிப்பு உண்டு என்பதை சில உரையாடல்கள் சுட்டிக் காட்டுகின்றன. செமியோன் என்ற பாத்திரம் வழக்கமான தமிழ் பட கதாநாகன் பாத்திரத்திற்குரிய சாயலைக் கொண்டுள்ளது. பொருளாதாரப் பிரச்சினை, சமூகப் பிரச்சினை என்பவற்றைவிட இந் நாவலில் புவியியல் பிரச்சினையே தொடப்பட்டுள்ளது' என்ருர்.

கவிஞர் மாவை. தி. நித்தியானந்தன் தலைமையில் 'யாருக்குப் புதுவருடம்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றபோது திருவாளர்கள் மு. பேரின்பராசா, வதிரி. சி. ரவீந்திரன், மு. சிவஞானசுந்தரம், இரா. நாகராசன், மர்த்தலீ பாலா ஆகியோர் கவிதை பாடினர். கலைச்சங்க இணைச் செயலாளர் அன்பு ஜவஹர்ஷா நன்றி கூறினுர்.

— அன்பு

## அழகு — முரண்பாடு

வசை பாட வந்தவனும்
மாணிக்கச் சொல் லேறி
இசை பாடப் புகுந்தகதை
பாருங்கோ — மொழிக்குரிய
அழகென்ற போர்வை யிலே
பெருக் கெடுத்த தலைச்சுற்றல்!

கதையென்றால்—
வண்ண நீர் பாய்ச்சும்
மின்னலை கள் வரவேண்டும்
நந்த வனம் வேண்டும்
நாயகனும் நாயகியும்
தங்கக் கனிச் சுரத்திற்
தரவேண்டும் குயிற் கீதம்

கதைகளிலே —
ஊத்தை படாத
உருப்படிகள் வர வேண்டும்!
சாக்கடை யை ஏன் பார்ப்பான்?
சந்தனத்துச் சிதறல்களாய்ச்
சேருகின்ற உத்திகளும்
செவ்வந்திக் கற்பனையும்;
நீல வான் தொட்டு
நிமிர்கின்ற இலட்சியத்தின்
கூரை விமர் சித்துக்
குளிக் கின்ற
அழகு கொழுக்கில்—

ஏழைகளும்,
எலும் பொடிந்த நாடுகளும்,
வேர்வை களும், குருதிகளும்,
வெந்தணலிற் புடமிட்ட
வரலாறும்,
போர்வையிட முடியாப்
பெருத்த முரண்பாடு;


— சபா. ஜெயராசா

## மறந்துவிட்டவரை

## நினைவுபடுத்துகிறேன்

பல கலை நூல்களைப் படைப்பதற்குத் தூண்டு கோலாயிருந்த பேரறிஞர் திரு. சு. சண்முகநாதனைப் பற்றி உங்களில் அனேகர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது. அவரைப்பற்றிய அறிமுகம் இல்லை. ஆனால் 'இந்தக் கலை மேதையால்தான் நான் கலைகளைப் பற்றித் தெரிந்துகொண்டேன். அவரால்தான் பல நூல்களைப் படைக்கும் ஆற்றல் எனக்கு ஏற்பட்டது' என்று கூறும் பல ஆராய்ச்சி நூல்கள் எழுதி, தமிழ் நாட்டு சர்க்கார்ப் பரிசுகளைப் பெற்ற எழுத்தாளரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவர்தான் நுண்கலைச் செல்வர் சாத்தன்குளம் அ. இராகவன் அவர்கள்.

அவர் எழுதிய பல ஆராய்ச்சி நூல்களில் முதன் நூலான 'தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்' என்ற நூலில் திரு. சண்முகநாதனைப்பற்றிக் குறிப்பிடும் போது 'காலஞ்சென்ற கலைமேதை திரு. சு. சண்முகநாதனை அவர்கள் இலங்கைப் புதைபொருள் ஆராய்ச்சி உதவி கமிஷனராகக் கடமை ஆற்றியவர். எனக்குக் கலையைப்பற்றி கடுகளவும் ஆராய்ச்சி இல்லை. கலை மேதை சண்முகநாதனைச் சந்தித்தபின் அவரோடு நெருங்கிய தொடர்பு எனக்கு ஏற்பட்டது. அவரிடத்தில் இருந்த பல நூல்களைப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் உறவே என்னை வரலாறு, ஓவியம், படிமம், கட்டடக்கலை, நாட்டியம், புதைபொருள் ஆராய்ச்சி முதலியவைகளில் ஆர்வம் கொள்ளத் தூண்டியது. அவர் தீட்டிய பல அழகிய ஓவியங்களைக் கண்டு களித்தேன். அவருடைய ஓவியங்கள் இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளில் நடைபெற்ற கண்காட்சிகளில் முதலிடம் பெற்றன. அவர் பதினைந்து மொழிகளில் நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்தார். அவரிடத்தில் இருந்த 300-க்கு மேற்பட்ட திருவிளக்குகள் 'தமிழ் நாட்டுத் திருவிளக்குகள்' என்ற நூலை எழுதத்தூண்டு கோலாக இருந்தன.



சண்முகநாதன்

தமிழ்க் கலை வளரத் தம் இறுதி மூச்சுள்ளவரை அருப்பாடுபட்ட இந்த ஈழத் தமிழ் பெருமகனைத் தமிழர்கள் என்றும் நினைவில் கொண்டு, அவர் அரைகுறையாய் விட்டுச் சென்ற கலைப்பணியைத் தொடர்ந்து நடத்த வேண்டுவது இன்று வாழும் தமிழ் கலைஞர்களின் தலையாய கடமையாகும்.

— கிஸார்

# இளம் ஆசிரியர்களுக்குச் சில யோசனைகள்

விக்டர் ரோஸோவ்

நீங்கள் இலக்கியக் கல்லூரிக்கு — எழுத்தாளர்களின் கல்விக்கூடத்திற்கு வந்திருக்கிறீர்கள்; நீங்கள் ஒரு கலைஞராக இருக்க வேண்டும். நீங்கள் கலையின் மீது பற்றுக் கொண்டிருப்பதை நான் மிகவும் மதிக்கிறேன். குடிமை உயர்வு என்பது குழந்தைப் பருவத்திலிருந்தே உங்களிடம் வளர்க்கப் பெற்றுள்ளது. பண்பாடுள்ள மக்களாக நீங்கள் இலக்கியத் துறைக்கு வந்திருக்கிறீர்கள்.

கலைப் படைப்பு என்னும் அற்புதமான, பொறுமைப்படத்தக்க பணியை நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். எல்லோரையும்விட நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்கப் போகிறீர்களா, இல்லையா என்பது உங்களைப் பொறுத்ததே. பிறருக்குத் தெரியாத விஷயம் அல்லது பிறரால் தெளிவாக உணரப்படாத விஷயம் உங்களுக்குத் தெரியுமானால், ஏதோ ஓர் உண்மையோ அல்லது நிகழ்ச்சியோ போதுமான அளவில் வெளியே தெரியாமலோ, பிறரால் சுட்டிக் காட்டப்படாமலோ இருந்தால், அதைப் பற்றி கட்டாயம் குறிப்பிட வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றினால். அப்போது நீங்கள் எழுதத் தொடங்க வேண்டும்; முழு மனத்தோடு உங்கள் பணியில் ஈடுபட வேண்டும்.

எப்படி எழுதுவது என்று உங்களுக்கு யாரும் கற்றுக் கொடுக்க மாட்டார்கள். அது எவ்வாறாயினும், நான் உங்களுக்குக் கற்றுக் கொடுக்க விரும்பவில்லை. ஏனெனில் தொழிலைக் கற்றுக் கொடுக்கலாம்; ஆனால் கலையைக் கற்றுக் கொடுக்க முடியாது.

எழுத்து மீதான ஆர்வத்துடன் உங்களுக்கு இயற்கையாகவே ஓரளவு படைப்பாற்றலும் இருக்குமாயின், நமது கலந்துரையாடல்கள் அந்த ஆற்றலைத் தட்டியெழுப்ப உதவும் என நம்புகிறேன். தனது எழுத்தை வருணிப்பதற்காகப் ‘படைப்பு’ என்னும் விழுமிய சொல்லை ஓர் எழுத்தாளன் பயன்படுத்தக் கூடாது என்று இவான் துர்கனேவ் கூறினர். ‘நான் ஒரு படைப்பாளன் என்று ஒருவன் வேடிக்கையாகக் கூறலாமேயன்றி, துணிவுடன் கூற முடியுமா?’ என்று அவர் கேட்டார். படைப்பாளன் என்ற சொல்லைப் பயன்படுத்தி விட்டதால், படைப்பே நமது பணியின் முக்கிய அம்சம் என்று கூறவேண்டும்.

ஒவ்வொரு படைப்பிலும் உங்களது சொந்த அனுபவத்தின் எதிரொலி இருக்கவேண்டும்; இல்லாவிடில், ஆழ்ந்த உணர்ச்சியுடன் எழுத இயலாது.

இந்தத் தொடக்க அம்சம்தான் நமது படைப்புக்கு வலுவூட்டும்.

படைப்புக்கான ஆய்வுக் கூடம் (இலக்கியக் கல்லூரி) இங்கு இருப்பதால், நமக்கு ஈடுபாடுள்ள எல்லாவற்றையும் ஆராய்வோம். ஒரு சிறிய விதையில், பூக்களையும், பழங்களையும் அளிக்கக்கூடிய செடி இருப்பதைப் போல, இந்தத் தொடக்க அம்சத்தில்தான் ஒரு படைப்பு அடங்கியுள்ளது. அந்தப் படைப்பு அம்சம் எவ்வளவு சிறியதாக இருப்பினும், நமது படைப்பு முழுவதிலும் அதிலிருந்துதான் வளர்கிறது.

சிறுமையைத் தவிர்க்க வேண்டும். அது நாடகத்தை மட்டுமின்றி, கவிதை, உரைநடை ஆகியவற்றையும் சீர்குலைத்து விடும். உங்களிடம் நல்ல கருப்பொருள் இருக்கலாம்; ஆனால், சிறுமை இருப்பின் உணர்ச்சி வறண்டு விடும். பார்வை சுருங்கி விடும். சிந்தனைகள் ஏழ்மையாக இருக்கும். ஒரு நாடகம் என்பது ஆசிரியரால் எழுதப்படுகிறது. மாஷா, பெத்யா, லூசியா, வஸ்யா முதலிய பாத்திரங்களுடன் நீங்கள் பழகவில்லை; அதை எழுதிய ஆசிரியருடன் நீங்கள் பழகுகிறீர்கள். ஒரு ரசிகனோ அல்லது வாசகனோ, பொருள் பொதிந்த ஒன்றைக் கூறக்கூடிய சிறந்த மனிதரிடம் தான் அக்கறை காட்டுவான்.

எனவே ஒரு நாடகத்தை எழுதுவதற்கு முன்பு, ஒரு சுவையான மற்றும் பயனுள்ள விஷயத்தை வாசகர்களுக்குக் கொடுக்க முடியுமா என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். 'ஆர்வமும் அறிவும் மிக்க மக்கள் நாடக அரங்கில் கூடியிருக்கிறார்கள். இந்த மூன்று மணி நேரத்தில் என்ன விஷயத்தை நாடகமாக இவர்களுக்கு நாம் கொடுக்கப் போகிறோம்?' என்று நீங்கள் யோசிக்க வேண்டும். இது ஒரு பொறுப்புள்ள, கடினமான விஷயம் அல்லவா?

இந்தக் கடமையை நிறைவேற்ற நீங்கள் எப்படிப்பட்ட எழுத்தாளராக இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானியுங்கள்; விஷயங்களைக் கூர்ந்து நோக்குங்கள்; சிந்தியுங்கள்? உணருங்கள்.

மாபெரும் கலைப் படைப்புக்கள் நாம் எதிர்பார்த்ததை விட அதிக அளவில் மனிதர்களிடம் நேயத்தை வளர்க்கின்றன. பல நூற்றுண்டுகளாக வளர்ந்து வரும் உலக கலாசாரமும், அறநெறிகளும், ஒழுக்கமும், விஞ்ஞானமும், மெல்ல மெல்ல ஆனால் நிச்சயமாக, மனிதனை உருவாக்குகின்றன.

இதிலிருந்து ஒரு மனிதாபிமான எழுத்தாளனின் கடமை—ஒரு புதிய மனிதனை உருவாக்கும் பணி — எத்துணை கடினமானது என்பது விளங்கும். மக்களிடையே நற்பண்புகளை வளர்ப்பதே நம் பணி. வாழ்வின் பயங்கரங்களை வருணித்து, மக்களின் மனிதாபிமானத்தைச் சீர்குலைப்பது நம் பணியல்ல.

மேலை நாட்டு நாடக மன்றங்கள், எதார்த்தத்திலிருந்து மிகவும் விலகியுள்ளன. 'அறிவுத்துறை நாடகங்கள்', 'அபத்த நாடகங்கள்', 'மனோ தத்துவ நாடகங்கள்' என்று பல புதிய பாணிகள் கிளம்பியுள்ளன, ஆனால், காலப்போக்கில் இவற்றின் புதுமையும் கவர்ச்சியும் மறைந்து விடுகின்றன. இது பற்றி ஒரு ஜெர்மன் நாடகத் தயாரிப்பாளர் மிக அழகாகச் சொன்னார்: 'எல்லா தீவிர

வாதப் போக்குகளும், எதார்த் தவாதத்தின் மீதான தூசியைத் துடைக்கும் கந்தைத் துணியா கும்; இதனால் எதார்த்த வாதத் திற்கே ஆதாரம் ஏற்படுகிறது'

கலை அழியும் பொழுது, அதன் ஓரம்சம் விரிவுபடுத்தப் படுகிறது. உப்ப வைக்கப்படுகி றது. இதைத்தான் 'புதிய பாணி' களில் காண்கிறோம்.

மேலே குறிப்பிட்ட நாட கப் போக்குகளில் 'அறிவுத்துறை நாடகம்' என்பது ஒரு நவீன மோஸ்தராகும். சிந்தனை என் பது, நாடகத்தின் ஓர் அம்சம். ஆனால், வெறும் சிந்தனை மட் டும் இருந்தால், நாடகம் வறட் சியாக இருக்கும்.

வியத்தகு விஞ்ஞான சாத னைகள் சம்பந்தமாக 'அறிவுத் துறை' நாடகம் தோன்றியது என நம்புகிறேன். மனித இன் பம் என்னும் பிரச்னைக்கு இந்த நாடகம் தீர்வு காணுகிறது என்று சிலர் கருதலாம். 'மீண் டும் ஒருமுறை முயன்றால், எல் லாம் விளங்கி விடும்' என்று அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால் அது வெறும் பிரமையே.

'வாழ்க்கை அர்த்தமற்றது' என்பதே அபத்த— நாடகத்தின் அடிப்படையாகும். அப்படியா னால், மனித வர்க்கத்தின் வர லாறு முழுவதும் அபத்தமானது என்று சுலபமாகச் சொல்லி விடலாமே!

அபத்த — நாடக எழுத்தா ளர்கள் என்ன எழுதினாலும், அவை ஒரே சாக்கடையின் வழி யாகவே ஓடுகின்றன. 'வாழ்க் கை அர்த்தமற்றது' என்றே கூறுகின்றனர். அபத்த — நாட கங்களுக்குச் சமூகக் காரணம் இருக்கிறது என்பதில் ஐயமில்லை.

'மனோ தத்துவ நாடக'த் தின் தவறு என்னவெனில், அது மனிதனுக்காக எழுதப்படவில்லை மனிதனுள்ளே இருக்கும் மிருகத் திற்காக எழுதப்படுகிறது. இந்த மிருகத்தைப் பாருங்கள். இது மனிதனைப் போலவே இருக்கிறது என்று அது கூறுகிறது!

மனிதனின் உள இயலையும் நோய் இயலையும் ஓர் எழுத்தா ளன் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகே அம்சங்களை அவன் பயன் படுத்த வேண்டும். இவை பெரும்பாலும் கலைத் துறைக்குப் புறம்பான அம்சங்களேயாகும்.

தமது அலுவலகத்திலுள்ள கடிகாரங்களின் முட்கள் அனைத் தையும் அகற்ற வேண்டும் என்று எடிசன் உத்தரவிட்டார். அது ஏன் என்று உங்களுக்கு நன்கு தெரியும்.

நாம் செய்யும் வேலைதான் நமக்குச் சிறந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. உழைப்பு என்ற ஒப் பற்ற பண்பை இயற்கை நமக்கு அளித்துள்ளது. அந்தப் பண்பை நன்கு பராமரியுங்கள். இலக்கி யத்திற்காக ஏதோ சிறிய அள வில் நான் பணியாற்றுகின்றேன். அது எனக்கு மாபெரும் இன்பம் தருகிறது. தனது நாவல்களை எழுதும்போது, எவ்வளவு பெரிய எழுச்சியால் தாஸ்தாயெவ்ஸ்கி உந்தப் பெற்றிருப்பார் என்பதை என்னால் கற்பனை செய்ய முடிகி றது. இவர் இன்பத்தின் சிகரத் தில் இருந்திருப்பார். அவரது வாழ்க்கை மிகக் கடினமாக இருந்த போதிலும், மிக மகிழ்ச் சியாக இருந்த மனிதர்களில் அவரும் ஒருவர். ஏனெனில் அவர் இடையறாது உழைத்தார்.

நாம் எடுத்துக் கொண்ட வேலையை ஆழ்ந்த கவனத்துடன் சிறப்பாகச் செய்து முடிப்பதே நமது முக்கிய கடமையாகும். ★

கொழும்பு போன்ற தலைப் பட்டினங்களில் உள்ள எழுத்தாளர்களைப் பற்றி நான் கொண்டிருக்கும் கருத்து இதுதான். அவர்களில் பெரும்பான்மையோர் 'வீக் என்ட் எழுத்தாளர்கள்!'

அவர்களுக்கு இன்று இருக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகள், நெருக்கடியான சூழ்நிலை, பிரயாணக் கஷ்டம், குடும்பச் சிக்கல்கள், உத்தியோகச் சங்கடங்கள் ஆகிய அனைத்தையும் ஒருங்கு சேர்த்து இவர்கள் சமாளிக்க வேண்டிய அவல நிலையில் வாழ்கின்றார்கள் என எண்ணும் போது இவர்களுக்காக உண்மையிலேயே நான் இரக்கப் படுகிறேன்.

10—15 ஆண்டுகளுக்கு முன்னர் தேசிய இலக்கியம் என்ற கோஷத்தை நாம் முன் வைத்த பொழுது நம்மவர்கள் யாரென்றால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களும் கொழும்பில் வாழும் எழுத்தாளர்களுமேயாவார்கள். இந்தக் கொழும்பில் வாழும் எழுத்தாளர்கள் யார் என்றால் இவர்களும் உத்தியோக நிமித்தமாகக் கொழும்பு சென்றவர்கள்தான். பச்சையாக உண்மையை ஒத்துக் கொள்வதானால் யாழ்ப்பாணத்தவர்களின் ஆதிக்கம்தான் விரும்பியோ விரும்பாமலோ இலக்கிய உலகில் கொழும்பில் கொடிகட்டிப் பறந்தது. அதிலும் 'வீக் என்ட்' இலக்கியகாரர்களின் திட்ட

# சில அபிப்பிராயங்களும் சிநேகபூர்வமான சில கருத்துக்களும்

ஒரு போராட்ட சகாப்தத்தில் வாழ்ந்து, இலக்கியத்தையும் போராட்டக் கருவிகளில் ஒன்றாக ஏற்றுக் கொண்டுவிட்ட நாம், இலக்கியத்தை ஒரு பொழுது போக்காகவோ அல்லது வார இறுதித் தமாஷாகவோ கருதிச் செயலாற்றுவோமானால் முடிவில் இலக்கியமும் உருப்படாது, நாமும் ஆக்கபூர்வமான இலக்கிய சாதனைகளைச் செய்தவர்களாக மாட்டோம்.

அடிப்படையிலேதான் இந்த நாட்டுச் சகல இலக்கியகாரர்களும் இயங்க வேண்டியிருந்தது.

இன்றோ நிலைமை வேறு.

இலங்கையிலுள்ள சகல பகுதிகளிலும், குறிப்பாகச் சிங்கள

டொமினிக் ஜீவா

வர்களால் சூழப்பட்ட பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் மத்தியில் புதிய இலக்கிய விழிப்புணர்ச்சியும் ஆக்கபூர்வமான எழுச்சியும் ஏற்பட்டு வருவதைக் காண்கின்றோம். இன்னும் தெளிவாகப் பார்க்கப் போனால் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் இலக்கிய வேகம் ஒரு தாக்கமாக மாறி தமிழ் இலக்கிய உலகில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தி வருவதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இன்றுதான் உண்மையான ஒரு தேசிய இலக்கிய சூழ்நிலை—சம சந்தர்ப்பம் — நாடு பூராவும் பரிணமித்துக் கொண்டு வருவது துல்லியமாகத் தெரியும் உண்மை.

எனவே யாழ்ப்பாணப் புத்திஜீவிகளின் கொழும்பு இலக்கிய ஆதிக்கம் நொருக்கப்பட வேண்டும் என இலக்கியத்தின் மேல் அபிமானம் கொண்டவன் என்கின்ற முறையில் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

இப்படியான ஆதிக்கம் இல்லவேயில்லை என நண்பர்கள் வாதிக்கலாம். இது உண்மையாக இருந்தாலும் கூட, இப்படியான ஒரு சந்தேக எண்ணமே மற்றப் பிரதேசத்தில் வாழ்பவர்களுக்கு ஏற்படக் கூடாதல்லவா?

இந்தச் சந்தர்ப்பத்தில் பழைய சம்பவம் ஒன்று எனக்கு ஞாபகம் வருகிறது.

இந்திய தேசியக் காங்கிரஸ் தலைவராக நேருஜி இருந்த காலம். நேரு இட்டதுதான் காங்கிரஸ் கட்டளை. அப்படிப் பட்டதொரு செல்வாக்கு நேருவுக்கு. ஒருநாள் பிரபல ஆங்கிலப் பத்திரிகையில் நேருவின் காங்கிரஸ் ஆதிக்கம் பற்றியும் அவருக்குள்ள அதிகார மமதை முடிவில் ஒரு ஜனநாயக இந்தியாவுக்கு எத்தகைய சீரழிவைக் கொண்டுவரும் எனவும் எனவே நேருவின் ஆதிக்கம் காங்கிரஸில் ஊடுருவுவது கட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும் காரசாரமான ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்தது.

காங்கிரஸ் பெருந் தலைவர்களுக்குள்ளே பெரும் பரபரப்பு. யார் இதை எழுதியிருப்பார்கள்? என்ற ஆராய்ச்சியும். நமது அரசியல் எதிரிகள்தான் இந்த அடுத்துக் கெடுக்கும் வேலையைச் செய்துள்ளார்கள் என்ற யூகங்களும் பரவி, பரபரப்புக்கு இன்னும் பரபரப்பு ஏற்படுத்தின.

பல மாதங்களுக்குப் பின்னர்தான் தெரிந்தது, இந்தக் கட்டுரையை எழுதியவர் நேருஜி தான் என்று.

இதைப் பின்னணியாக வைத்து நாம் பகிரங்கமாக நமது சிந்தனையைச் சொல்லப் பழகவேண்டும் என நான் மனப்பூர்வமாகக் கருதிச் செயல்பட விரும்புகின்றேன். சூழ்நிலைக்கும் அதிகாரத்துக்கும் நட்புக்கும் பிரதேசத்துக்கும் உத்தியோகத்துக்கும் பயந்து நாம் மனந் திறந்து நமது கருத்துக்களைச் சொல்லப் பயப்படுவோமானால் இந்தப் பேனாவைப் பிடிப்பதற்கு நமக்கு என்ன அருகதை இருக்கிறது?

எனவேதான் தெளிவாக எனது கருத்தை முன்வைக்கின்றேன். கொழும்பு ஆதிக்கம் ஈழத்துத் தேசிய இலக்கிய வளர்ச்சியில் தனது பிடியை அகலப்படுத்துவதை நாம் முற்றாக எதிர்க்க வேண்டும். அதே சமயம் இலக்கியம், தமிழ், கலை என்பது ஒரு பிரதேசத்திற்குத் தான் தனிப்பெரும் சொந்தம் என்ற மனப்பான்மையை முற்று

முழுதாக முறியடிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஒரு நவீன, ஆரோக்கியமான, செழுமை மிக்க தேசிய இலக்கியம் இந்த நாட்டு எல்லாப் பிரதேச மண்ணிலும் செழித்து வளர முடியும் என சத்திய உணர்வுடன் நான் நம்புகிறேன்.

நண்பர் கனகரெட்ணு ஒரு தடவை சொன்ன கருத்து எனக்கு ஞாபகம் வருகின்றது.

ஒரு ஜப்பானிய தொழில் நுட்ப நிபுணர் யாழ்ப்பாணம் வந்திருந்தபொழுது கூறினுராம்; 'இந்த நாட்டில் ஒரு விசித்திரத்தைப் பார்க்கிறேன். மூலப் பொருட்கள் ஒரு பகுதியில் இருக்கின்றன. தொழிற்சாலைகள் இன்னெரு பகுதியில் இருக்கின்றன. ஆனுல் இவற்றின் தலைமையகங்களோ கொழும்பில்தான் இருக்கின்றன. இது ஒரு பெரிய விசித்திரம்! அத்துடன எவ்வளவு வீண் விரயம்!'

இலக்கியத்திலும் இந்த விசித்திரமான நிலைதான் நமது நாட்டில் நிலவுகின்றது. நமது நாட்டில் மாத்திரமல்ல, தமிழகத்திலும் சென்னைப் பட்டினம் தான், நமது கொழும்பைப் போலத் தலைமை வகிக்கிறது!

அண்மையில் கோவையில் நடந்த இலக்கிய விழாவில் பிரபல மலையாள எழுத்தாளர் தகழி சிவசங்கரப்பிள்ளை சொன்ன சில கருத்துக்களையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

'மலையாள இலக்கியத்தை உருவாக்குபவர்கள் அந்த இலக்கியம் உருவாகும் சூழ்நிலைகளிலேயே வாழ்கின்றுர்கள். அதனுல் தான் வாழ்க்கையை அவ்வளவு உண்மையாக எழுத முடிகின்றது.

ஆனுல் சென்னையிலும் பம்பாயிலும் டில்லியிலும் தான் அந்த அந்தப் பிரதேசத்துப் பிரபல எழுத்தாளன் வாழுகின்றுன். நான் சாஹித்திய அகடாமியில் ஒரு பொறுப்பு வகிக்கின்றேன். ஆகவே, அடிக்கடி உங்களது எழுத்தாளர்களை மட்டுமின்றி, இந்தியாவின் பல பிரதேச எழுத்தாளர்களையும் சந்திக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. இங்கே ஓர் எழுத்தாளன் ஒரு கதையோ அல்லது புத்தகமோ எழுதிய பின்னர் அவன் பட்டணத்தை நோக்கி ஓடிப்போய் விடுகின்றுன். பட்டணத்தில் போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கிராமத்தைப் பற்றிக் கதை எழுதுகின்றுன்! இது எப்படி இலக்கியமாகிவிட முடியும்?

சத்திய ஜித்ரே படமெடுத்த பதர் பாஞ்சாலி கதையை எழுதிய விபூதி பூஷண் பானர்ஜி ஒரு பள்ளிக் கூட ஆசிரியர். அவர் தனது வாழ்நாளில் ஒரு தடவைகூடக் கல்கத்தாவைப் பார்த்தது கிடையாதாம். அது மக்கள் கலைஞனுக்கு அவசியமுமில்லை.

உண்மையான இலக்கியம் உருவாக, உண்மையான வாழ்க்கையை இலக்கிய கர்த்தா வாழ வேண்டும். உங்களது எழுத்தாளர்களது நடை, உடை, பாவனை கூடத் தமிழ் நாட்டுப் பாணியில் இல்லையே!'

நமது கொழும்புத் தமிழ் எழுத்தாளர்கள் பலருக்கு இந்த அறிவுரை பொருந்தும் என்றே நான் கருதுகின்றேன். பல ஆண்டுகளுக்கு முன்னரே உத்தியோக நிமித்தமாகவோ அல்லது வெறெந்தக் காரணமாகவோ கொழும்புப் பட்டினத்திற்கு மனைவி மக்களுடன் குடியேறிச் சென்றுவிட்ட இவர்கள், வசதி

வாய்ப்பு, வேலை, அதனால் ஏற்படும் எதிர்காலப் பென்சன், அரசியல் மாற்றத்தால் ஏற்பட்டு வரும் வசதிமிக்க சலுகைகள் யாவற்றையும் சிக்காராகப் பயன்படுத்திக் கொண்டு ஈழத்து இலக்கியத்தைப் புனர்நிர்மாணம் செய்யப் போகிறோம் எனச் சொல்லிக் கொள்வார்களேயானல் இவர்களை ஈழத்தில் தமது தமது பிரதேசங்களில் வாழ்ந்து, அங்குள்ள மக்கள் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து மக்களின் உணர்வுகளைத் தமது படைப்புக்களில் பிரதிபலிக்க உழைத்து, அதனால் எத்தனையோ சிரமங்களைச் சகித்துக் கொண்டு, நமது தேசத்தின் ஆத்மக் குரலைப் பிரதிபலித்து வரும் இளம் தலைமுறை மதிக்கத்தான் மதிப்பார்களா என்பது எனக்கென்னமோ சந்தேகம்தான்.

இதில் இன்னொரு வேடிக்கையும் கலந்திருக்கின்றது. மக்களிடமிருந்து தனிமைப்பட்டு ஏதோ ஓர் அதி தீவிரக் கற்பனை உலகில் வாழ்ந்து வரும் இந்தக் கொழும்பு எழுத்தாளர்களில் சிலர், புரட்சிகர, தொழிலாளி வர்க்க, மக்கள் இலக்கியம் படைக்க வேண்டும் என வார்த்தைகளை வைத்துப் பம்மாத்துப் பண்ணி இலக்கியச் சர்க்கஸ் வேலைகளைச் செய்யும் பொழுது தான் இவர்களுக்காகவல்ல, இவர்களின் வார்த்தைகளை மாத்திரம் பின்னணியாக நம்பும் நல்லெண்ணமும் இலக்கிய ஆர்வமும் ஆரோக்கியமான மன வளமும் எதிர்கால ஈழத்து முற்போக்கு இலக்கிய வளர்ச்சியில் தளராத நம்பிக்கையும் கொண்ட இளம் இலக்கிய நண்பர்களுக்காகப் பரிதாபப் படவேண்டி இருக்கின்றது.

எழுத்தாளன் என்பவன் எழுத வேண்டும். ஆனல் பட்டண எழுத்தாளர்களில் பலர் எழுதுவதை மறந்து எத்தனையோ ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. அதே சமயம் எழுத்தாளர்களுக்காகத் திட்டம் தீட்டுவதில் மாத்திரம் இவர்கள் பின் நிற்பதில்லை. எதிர்காலத் திட்டம். இயக்கம், ஸ்தாபன அமைப்புத் தேவைதான். அதை நான் மறுக்கவில்லை. எல்லாவற்றையும் விட பிரதானம் ஓர் எழுத்தாளன் எழுத வேண்டும். அதைச் செய்ய இவர்கள் தயாராக இல்லை.

அதே சமயம் ஓர் உண்மையையும் நான் சொல்லித்தான் தீரவேண்டும். தேசம் முழுவதும் பரந்து பட்டு உதிரியாகச் சிதறிப்போய்க் கிடந்த எழுத்தாளர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, அவர்கள் அத்தனை பேர்களினது குரல்களையும் ஒருமுனைப் படுத்தி, நீண்ட நெடுங் காலச் சிரமத்தின் மேல் முற்போக்குஎழுத்தாளர் சங்கத்தைச் சக்தி மிக்க ஒரு ஸ்தாபனமாக்கி எழுத்தாளர்களின் பலத்தை இந்த நாட்டில் ஒரு வலிமைமிக்க சக்தியாகத் திரட்டிய பெருமைப் புக்குரியவர்கள் இந்தக் கொழும்பு எழுத்தாளர்கள்தான் என்ற உண்மையை நான் என்றுமே மதிக்க மறுப்பதுமில்லை. மதிக்கப்படத்தக்க — தலைவணங்கத்தக்க — சகல எழுத்தாளர்களையும் ஒருங்குசேர்த்து அவர்களினது தனிப்பட்ட குறை நிறைகளையெல்லாம் ஏற்று, ஜீரணித்து அண்டி அணைத்துக் கொண்டு சென்றவர்கள் இந்த இயக்க முன்னோடிகள்தான் என்பதை இளம் தலைமுறை தமது மனதில் பதியவைக்க வேண்டும். அதே சமயம் தேசம் மாறிவருகின்றது, சூழ்நிலை மாறி வருகின்றது. சிந்தனைகளிலே ஒரு வீச்சு ஏற்பட்டு வருகிறது என்பதையும் இந்த முன்னோடிகள் உணரவேண்டும்.

(வளரும்)

# Popular Science Books from U.S.S.R.

## NOW AVAILABLE

| | Rs. cts. |
|---|---|
| Physic and Music | 4-50 |
| The Clock of Living Nature | 3-00 |
| Outer Space and Man | 3-00 |
| Space and Time Perception by the Cosmonaut | 3-00 |
| The Moon and Man | 3-00 |
| In the Search for Beauty | 3-00 |
| The Quiet Sun | 3-00 |
| The Atom from A to Z | 4-00 |
| Wonders of the Night Sky | 4-50 |
| The Nine Colours of the Rainbow | 5-50 |
| The Mystery of the Earth's Mantle | 3-00 |
| This Chaney Chaney Chaney World | 3-50 |
| Man Versus Climate | 3-00 |
| Matter and Man | 3-75 |
| Cybernetics Within us | 4-00 |

## PEOPLE'S PUBLISHING HOUSE,

124, Kumaran Ratnam Road,

COLOMBO - 2

*Telephone : 36111*

உங்கள் நாளாந்த தேவைகளுக்கு

## யாழ்ப்பாண மாநகர
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு

விஜயம் செய்யுங்கள்

விசேஷ கிளைகள் :

ஆடம்பரப் பொருட்களைப் பெற

**ரவுண் சொப்**

29, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

சகாய விலையில் இரும்பு கட்டட உபகரணங்கள் பெற

**கூட்டுறவு இரும்புக்கடை**

259, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சிறந்த முறையில் நூல்களைப் பதிப்பிக்க

**கூட்டுறவு அச்சகம்**

57, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

சிறந்த சேவை தரும் எரிபொருள் நிலையம்
உங்கள் எரி பொருள் தேவைக்கு எங்கள் ஸ்தாபனத்தை நாடுங்கள்

**கூட்டுறவு எரிபொருள் நிலையம்**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(வீரசிங்கம் மண்டபத்துக்கருகாமையில்)

இன்னும்

நுகர்ச்சிப் பொருட்கள், புடவை வகைகள்,
பால் உணவுகள் (தேசிய பாற்சபை)
பாடசாலைப் புத்தகங்கள் கோழித்தீன்
உபகரணங்கள் சாகிதாதிகள்
மட்பாண்டங்கள்.

தங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறோம்

## யாழ்ப்பாண மாநகர பல.நோ.கூ.சங்கம்,

74/3, ஆஸ்பத்திரி வீதி,

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 350 யாழ்ப்பாணம்.

214A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களால் மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும்—அட்டை யா. மா. பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு அச்சகத்திலும் அச்சிடப்பெற்றது